அக்ஷயா வின்

புத்தம் புதிய நாவல்

அழகிய

# நந்தினி

பெண்கள் மாத இதழ்

ரூ.20/-



# தீர்க்க சுமங்கலி



நாவல் நாயகி

## ஆர்.மணிமாலா



# தீர்க்க சுமங்கலி

– ஆர்.மணிமாலா

## 1

சஷ்டியை நோக்க சரவண பவனார்...

சிஷ்டைக்குதவுஞ் செங்கதிர் வேலோன்...

பாதமிரண்டில் பண்மணி சதங்கை...

கீதம் பாட கிண்கிணி ஆட...''

பூஜையறையில் கண்கள் மூடி... மனம் உருகி பாடிக் கொண் டிருந்தாள் துர்கா!

திரைச்சீலை அசந்த நேரம் பார்த்து ஜன்னல் வழியே வெளிச்சம் உள்ளே புகுந்தது.

புரண்டு படுத்த முகேஷ் நேரமாகி விட்டதை உணர்ந்து கட்டிலில் எழுந்தமர்ந்தான்.

கீழேயிருந்து படியேறி மேலே வந்து காதில் மோதியது சஷ்டி கவசம். முகேஷ் நமுட்டாய் சிரித்துக் கொண்டான்.

இதையெல்லாம் பாடக்கூட ஒரு யோக்கியதை வேண்டாமா?

இடுப்பிலிருந்து நழுவிய லுங்கியை இழுத்து சரியாக கட்டிக் கொண்டு பாத்ரூம் நோக்கிப் போனான்.

பூஜையறையிலிருந்து வெளிப்பட்ட துர்கா தலை உயர்த்தி மாடியைப் பார்த்தாள்.

முகேஷின் அறைக்கதவு திறந்திருந்தது.

'காபி கொண்டு போகலாமா?' உதித்த எண்ணத்தை உடனே ரப்பர் போட்டு அழித்தாள்.

'வேண்டாம். அவன் முகம் கொடுத்து பேசாதபோது நான் தரும் காபியை மட்டும் குடிப்பானா என்ன? நினைத்தபோதே... நெஞ்சில் கனம் ஏறிக் கொண்டது.

பெருமூச்சு விட்டபடி சமையல் கட்டுக்குள் நுழைந்த துர்காவிற்கு நாற்பத்தாறு வயது. இந்த வயதிலும் கட்டு விட்டுப் போகாத உடம்பு. ஒரு முடிக்கூட நரைக்கவில்லை. சிவந்த நிறத்தோடு எண்ணெய் கலந்தது போல் ஒரு மினுமினுப்பு. டிவைன் ஃபேஸ் என்பார்களே... அது அப்படியே துர்காவிற்குதான் பொருந்தும். அப்படியொரு தெய்வீகமான அழகு. சிரிக்கும்போது மின்னல் வெட்டும். வைரக்கல் மூக்குத்தி, வட்டவடிவ செந்நிற திலகம். மெட்டியில் ஒலிக்கும் சலங்கை அத்தனையும், கர்ப்பகிரகத்திலிருந்து சிலை உயிர் பெற்று வந்துவிட்டதோ... என்று கையெடுத்துக் கும்பிட வைக்கும் தோற்றம்.

சமையலறையில் அமிர்தம் கொத்தவரங்காயை நறுக்கிக் கொண் டிருந்தாள்.

இவள் வருவதைப் பார்த்ததும் காபியை எடுத்து அவள் பக்கமாய் வைத்தாள்.

''அக்கா... நான் கோவில் வரைக்கும் போய்ட்டு வந்துடறேன். அவர் எழுந்தா சொல்லிடுங்கோ!''



''இன்னைக்கென்ன? திங்ககிழமைதானே? வைத்திக்கு உடம்பு கிடம்பு சரியில்லையோ?'' நக்கலாய் கேட்டாள் அமிர்தம்.

நடு ரோட்டில் நிற்க வைத்து துணியை உருவிவிட்டது போல் துடித்துப் போனாள்.

''முகேஷுக்கு இன்னைக்குப் பிறந்த நாள்!'' என்றாள் சன்னமாக!

அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

''ஓஹோ...! இந்த ஆத்துல வழக்கமா யாரோட பிறந்த நாளையும் கொண்டாடறதில்லையா... அதனால ஒண்ணுமே தெரியலே. சரி... கோவிலுக்குப் போய்ட்டு வீட்டுக்கு வருவியா? இல்லே அப்படியே அந்த வீட்டுக்குப் போய்டுவியா?''

அந்த என்ற வார்த்தைக்கு அதிகமாய் அழுத்தத்தைச் சேர்த்திருந்தாள் அமிர்தம்.

''வருவேன். முகேஷுக்கு பீட்ரூட் அல்வான்னா ரொம்பப் பிடிக்கும். என் கையால அதை நான் செய்யணும். அப்புறம், இந்த கொத்தவ ரங்காயை சமைக்க வேண்டாம்னு ஏற்கனவே சொல்லியிருக்கேன். மறந்துட்டீங்கன்னு நினைக்கிறேன். உங்க தம்பிக்கு இது ஆகாது. பித்தத்தைச் சேர்க்கும்.''

''இதை சாப்பிட்டுதான் பித்தம் சேரணுமா அவனுக்கு? ஏற்கனவே எக்கச்சக்கமா ஏறியிருக்கிறதாலதானே பித்துக்குளித்தனமா காரியம் பண்ணியிருக்கான்!'' அமிர்தம் சுற்றிச் சுற்றி மறுபடி அதே டாபிக்கை தொடவும். இதற்கு மேல் இவளிடம் பேசுவது மரியாதையாகாது என்று உணர்ந்தவள் வாயை மூடிக் கொண்டு வெளியேறினாள்.

போகும் அவளை... அசிங்கத்தை காலால் மிதித்து விட்ட அருவருப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கலிகாலம்! எந்த வீட்டில் நடக்கும் இப்படியொரு கூத்து? இவளெல்லாம் ஒரு பொம்பளைன்னு எப்படிதான் தெருவிலே இறங்கி நடக்கிறாளோ... பகவானுக்கே வெளிச்சம்! அளவுக்கதிகமா படிச்சிட்டா... மூளை வேலை செய்யாது போல. இல்லாவிட்டால் என் தம்பி இப்படியொரு கேணத்தனமான, ஈனத்தனமான காரியத்தை

செய்வானா/ இப்படிப்பட்ட வீட்டிலே இருக்கிறது எனக்குத்தான் அவமானம். என்ன பண்றது? நாலு சுவரும் மூணு வேளை சோறும் இங்கேதான் உனக்குன்னு என் தாலிய அறுத்து அனுப்பி வச்சிட்டானே ஈஸ்வரன். ஹூம்... எல்லாம் தலையெழுத்து! இவளோட காத்துப் பட்டாலே எட்டு ஊரு பாவம் சேர்ந்து வந்து ஒட்டிக்கும். ஆனா, இவளோட நிழல்லே இல்லே என்னை உக்கார வச்சிட்டான். நல்ல வேளை... இந்த கண்றாவியெல்லாம் பார்க்க... பெத்தவங்க உயிரோட இல்லை. அதுவரைக்கும் ஷேமம்!''

''என்னக்கா? பொலம்பிண்டே கறிகாய் நறுக்கறே! பார்த்து... விரலையும் சேர்த்து வெட்டிண்டுடப் போற...'' கிண்டலாய் கேட்டபடி வாசலில் வந்து நின்றார் ரத்னகுமார்.

அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருப்பார் போலும். 'கமகம' வென சோப்பின் மணம் அறை முழுக்க வியாபித்தது. வெற்றுடம்பில் ஒரு பூத்துவாலை அணைத்துக் கொண்டிருந்தது.

''வாப்பா... வா... எந்திரிச்சிட்டியா?''

''என்ன கேள்வியிது? உன் முன்னாடி முழுசா நிக்கறேனே. தூக்கத்துல நடக்கற வியாதியெல்லாம் எனக்கில்லே!''

''தூங்கறா மாதிரி நடிக்கறவாளுக்கெல்லாம் அந்த வியாதி வரா துன்னு எனக்குத் தெரியும்!'' காபியைக் கலக்கியபடி சொன்னாள்.

''என்ன பூடகமா பேசறே?''

''நான் என்ன பேசறேன்னு நிஜமாவே உனக்குப் புரியலே? புரியும். புரிஞ்சாலும் தெரிஞ்சா மாதிரி காட்டிக்க மாட்டே! ஏன்னா நீ டாக்டர். ரொம்ப படிச்சவன். அதனாலேயே பண்ற காரியம் தப்புன்னாக்கூட ஒப்புக்க மாட்டே!''

''மொதல்ல காபியைக் குடு!''

''பார்த்து... ரொம்ப சுடுது!'' என்றபடி காபியை தம்பியிடம் நீட்டினாள்.

''அந்தக் கவனம் கூடவா எனக்கில்லாம போயிடுச்சின்னு நினைக் கிறே?'' ரத்னகுமார் காபியை உறிஞ்சியபடி கேட்டார்.



''உம் பொண்டாட்டியை நெருப்புன்னு தெரிஞ்சும், அது சுட்டுப் பொசுக்கிடும்னு தெரிஞ்சும் அதுல இறக்கி விட்டிருக்கியே... அதனால எச்சரிக்கை பண்ணினேன்... தப்பா?'' அமிர்தம் பூடகமாய் சொன்னாள்.

என்னதான் உடன் பிறந்த தம்பி என்றாலும் ரத்னகுமாரிடம் அதிகமாய் பேசமாட்டாள் அமிர்தம். அவன் டாக்டர், அதிகம் படித்தவன், தன் இரண்டு பெண்களை முன்னின்று செலவு பண்ணி, கல்யாணம் செய்து கரை ஏற்றியவன் என்ற மரியாதை காரணமாக... வாய்மூடி நிற்பாள். குடும்ப விஷயங்களில் கூட தலையிட மாட்டாள்.

ரத்னகுமார் பெற்றோருக்கு அமிர்தமும், அவரும் மட்டும்தான் ஓரளவு வசதியான குடும்பம்தான். ஒரே மகள் அமிர்தத்தை பாளை யங்கோட்டையில் சொந்தமாய் மளிகைக் கடை வைத்திருந்த பவித்ர னுக்கு மணமுடித்து வைத்தனர். சின்ன வயதிலேயே ரத்னகுமார் படிப்பில் படுசுட்டி. இரக்க சுபாவம் அதிகம். தெருவில் காலொடிந்து கிடக்கும் நாய்களைக் கண்டால் உடனே வீட்டிற்குத் தூக்கி வந்து காயத்திற்கு மருந்திட்டு தானே வளர்க்கும் உபகார எண்ணமிருந்தது. அவர் மனம் தன்னாலேயே மருத்துவப் படிப்பை நாடியது. ஒரே பிள்ளையின் ஆசையை நிறைவேற்றுவதை விடவா சொத்து பத்து அவசியம் என்று நிலம், நீச்சுகளை விற்று ரத்னகுமாரை டாக்டருக்கு படிக்க வைத்தனர். அவரும் படித்து தேறி... மதுரையிலிருந்து சண்டை போட்டு தேடி துர்காவைத் தேர்ந்தெடுத்து அவருக்கு மனைவியாக்கிய பிறகே கண்களை மூடினர் பெற்றவர்கள்.

ரத்தப்புற்று நோயால் பவித்ரன் இறந்து பத்து வருடமாகிறது. அமிர்தம் இரண்டு பெண் குழந்தைகளோடு தனித்துப் போனாள். அப்படி யொன்றும் அவள் கணவன் அள்ள அள்ளக் குறையாத வகையில் சொத்துக்களை சேர்த்து வைத்துவிட்டுப் போகவில்லை. மளிகை கடை வருமானம் மட்டும்தான் அமிர்தத்திற்கு வீடு. அதிலுள்ள சமையல் கட்டு, பூஜையறை, கொல்லைப்புறம், அதை விட்டால் கோவில்... இதைத்தவிர வேறெதுவும் தெரியாது. மளிகைக் கடையில் வேலை

பார்த்த இரண்டு ஆட்களும், தலையில் அடித்து கையில் கொடுத்த பணம் வயிற்றில் அடித்துக் கொள்ள வைத்தது. கடை நஷ்டத்தில் ஓடியது.

ரத்னகுமாரின் ஆலோசனையின் பேரில் அந்தக் கடையை விற்று அந்தப் பணத்தை பாங்கில் போட்டு அந்த வட்டியில் சாப்பிட்டனர். அக்கா பெண்களின் திருமணப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ரத்ன குமார் சொன்னது போலவே... நல்ல வரன்களுக்கு மணமுடித்து அக்காவை தன்னோடு சென்னைக்கு அழைத்துச் சென்றார்.

வீட்டோடு வந்து தங்கி ஐந்து வருடமாகி விட்டது. துர்காவும் அவளோடு அன்பாய் பழகியதால் பிரச்னை என்று இதுவரை வந்ததில்லை. ஆனால் கடந்த ஒரு வருடமாகத்தான்... பிரச்னை! வாய்மூடி மௌனியாக தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருந்த அமிர்தத்தால்... அதற்கு மேல் வாய்மூடிக் கொண்டிருக்க முடியாமல்... வெடிகுண்டை வீசிக் கொண்டிருந்தாள். அவள் வயிற்றெரிச்சல் அவளுக்கு. அவரவர் கோணத்தில், அவரவர் பார்வையும், செயலும் வெவ்வேறு விதமாக நியாயமாக இருந்தது.

''ரத்னா...'' அமிர்தம் தம்பியை பாசமாய் அழைத்தாள்.

''எனக்கா?''

''இது சரியில்லேப்பா! என்னதான் படிச்சிட்டாலும், மேலைநாட்டு நாகரீகம் நம்ம ஊர்ல வந்து இறங்கிட்டாலும், இன்னமும் பொம்மனாட்டி கழுத்துல ஆம்பளைதான் தாலி கட்டறான். பொம்மனாட்டிதான் குழந்தைய பெத்துக்கறா! இதான் சரி! இதை மாத்த முடியாது. மனைவிங்கற நம்ம வீட்டு லட்சுமி மாதிரி. அந்த லட்சுமி நம்ம வீட்லேதான் இருக்கணும்.''

''அக்கா... ஒண்ணைப் புரிஞ்சுக்க துர்கா என்னைக்கும் நம்ம வீட்டு மகாலட்சுமிதான் ஒரு பக்தன் உயிருக்கு போராடிகிட்டிருக்கிறப்ப... அவனைக் காப்பாத்தற பொறுப்பு கடவுளுக்கு இருக்கு!''



''கடவுளுக்குதான் உண்டு. மனுஷாளுக்கு இல்லே!'' என்றாள் ஆத்திரமாய்.

''கடவுள்தான் மனுஷ ரூபத்துல அனுப்பறார். புரிஞ்சுக்க... எத்தனை பேர் கடவுளேன்னு என்னைக் கையெடுத்துக் கும்பிட்டிருக்காங்க தெரியுமா?''

''ஏன்னா... நீ டாக்டர். பல உயிர்களைக் காப்பாத்தற கடவுளோட மறு உருவம்!''

''இப்போதைக்கு துர்காவும் ஒரு டாக்டர்தான். புரிஞ்சுக்க! இதுக்கு மேல இதை பேசி பெரிசு பண்ணாதே! ஆமா... துர்கா எங்கே?''

''கோவிலுக்குப் போயிருக்கா! வந்துடுவாளாம்...''

''கோவிலுக்கா? இன்னைக்கென்ன விசேஷம்?''

''நானும்கூட புரியாமதான் முழிச்சேன். அந்த கடங்காரன் வைத்திக்கு உடம்புக்கு முடியலியோன்னு நினைச்சேன். அப்புறம்தான் தெரிஞ்சது... நம்ம முகேஷிற்கு பொறந்த நாளாம்!''

அக்காவை பதில் கூறாமல் முறைத்துப் பார்த்துவிட்டு முகேஷின் அறை நோக்கிப் போனார்.

★

ஆளுயர டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி முன் நின்று அலட்சியமாய் தலை சீவிக் கொண்டிருந்த முகேஷிற்கு இருபத்தைந்து வயது. அழகிலும், நிறத்திலும் அப்படியே அம்மாவை ஜெராக்ஸ் எடுத்து பிறந்திருந்தான். விலையுயர்ந்த ஜீன்ஸ் உடம்பைக் கவ்வி, பிடித்திருந்த... தொள தொளவென ஒரு காட்டன் சட்டையை அணிந்து இன் பண்ணாமல் விட்டிருந்தான். சென்ட்டை எடுத்துப் பீய்ச்சிக் கொண்டிருந்தவன், 'மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே...'' என்ற குரலுக்குத் திரும்பிப் பார்த்தான்.

ரத்னகுமார் புன்னகையோடு அவனருகே வந்தார்.

முகேஷ் செண்ட் பாட்டிலை மூடி வைத்துவிட்டு அப்பாவை ஏறிட்டான்.

"ஸாரிடா முகேஷ்... எனக்கு சுத்தமா நினைவே இல்லை. உங்கம்மா உனக்காக கோவிலுக்குப் போயிருக்கான்னதும் உன் பர்த்டேன்னு ஞாபகம் வந்துச்சு இந்தா... இது பிளாங்க் செக். உனக்கு வேண்டியளவு நிரப்பிக்க. தேவையான பொருளை வாங்கிக்க. ம்..."

"இல்லே வேண்டாம்... நோ தாங்க்ஸ்!" முகேஷ் அதை மறுத்து விட்டு அவரைத் தாண்டி வெளியேறினான்.

பொங்கிய கோபத்தை உள்ளடக்கி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவர்... தோளைக் குலுக்கிக் கொண்டார்.

"கண்ணா... என்ன சாப்பிடாம கிளம்பிட்டே?" அமிர்தம் ஆச்சர்ய மாய் கேட்டபடி எதிரே வந்தாள்.

"இன்னைக்கு ஒரு நாளைக்காவது வாய்க்கு ருசியா ஹோட்டல்ல சாப்பிட்டுக்கறேனே... அத்தையம்மா!" என்றான் நையாண்டியாய் முகேஷ்.

அந்த வீட்டில் அவன் சிரித்துப் பேசுவதெல்லாம் அவளிடம் மட் டும்தான்.

"ஏண்டாப்பா... என் சமையல் அவ்வளவு மோசமாவா இருக்கு?"

"வேணாம்.. விட்ரு.... ரொம்ப வாயைக் கிளறினியோ உண்மை யெல்லாம் சொல்லிடுவேன். அப்புறம் உனக்குத்தான் நஷ்டம்!" முகேஷ் மூடிய உதட்டிற்குள் பொங்கி வந்த சிரிப்பை மென்றான்.

"டேய்... நிஜமாத்தான் சொல்றியா? அவ்வளவு மோசமாகவா சமைக்கிறேன்?"

"எல்லா நேரத்திலேயும் உண்மைய பேசிடக்கூடாதுன்னு உன்னை மாதிரி பெருசுங்கள்லாம் சொல்லிட்டுப் போயிருக்கறப்ப... அந்த வாக்கைக் காப்பாத்த வேணாமா? உண்மையை பேசி உன் மனசை



நோகடிக்க நான் விரும்பலே. இன்னைக்கு என் ப்ரண்ட்ஸோட ஹோட்டல்ல சாப்பிடறதா சொல்லிட்டேன். வரட்டுமா?" முகேஷ் பைக் சாவியை சுழற்றியபடி கேட்டான்.

"பொறு! என்ன அவசரம்? உங்கம்மா வந்திடட்டும்."

முகேஷின் முகம் மாறியது.

"ஏன்... அவள் வந்த பிறகுதான் போகணும்ன்னு புதுசா சட்டம் வந்திருக்கா என்ன?"

"அப்படியெல்லாம் பேசக்கூடாது. உங்கம்மா... உனக்காக அர்ச்சனை பண்ண கோவிலுக்குப் போயிருக்கா. அவ திரும்பி வந்து உனக்குப் பிடிச்ச பீட்ரூட் அல்வாவை செய்யப் போறதா சொல்லிட்டுப் போனா. அதனால..."

"அதனால... என்ன அதனால? அவ கையால செய்யற அல்வாவுக்கு பதில் விஷத்தை வேணும்னாலும் சாப்பிடுவேனே தவிர... அதை சாப்பிடமாட்டேன்!" முகேஷின் முகம் இறுகிப்போனது.

"சேச்சே... என்னடா கண்ணா... நல்ல நாளும் அதுவும் அச்சுபிச் சுன்னு பேசிக்கிட்டு. பிடிக்கலேன்னா... சாப்பிடாதே! அதுக்கேன் விஷம், கிஷம்னு பொல்லாத வார்த்தையெல்லாம் பேசறே! என்னமோ போப்பா! இந்த வீட்ல நடக்கறதெல்லாம் அனர்த்தமா இருக்கு. எங்கிருந்தோ வந்து விழுந்த கல்லு இந்த அழகான குருவிக்கூட்டை கலைச்சிடுச்சி. கறாரா இருக்க வேண்டியவனே... கண்ணை மூடிக் கிட்டு நடக்கறப்ப யாரைப்போய் நொந்துக்கறது? சரி... நீ கிளம்பு! நைட்டுக்காவது வந்து சாப்பிடுவே இல்லே?"

"ஹூம்... வேற வழி?" என்று கிண்டலாய் கூறிவிட்டுக் கிளம்பி னான் முகேஷ்!

ஐந்து நிமிடத்திற்கு முன்பே உள்ளே நுழைந்துவிட்ட துர்காவின் காதில் மேற்படி பேச்சு அத்தனையும் காதில் விழ... கண்கள் பொங்கி...

அர்ச்சனைத் தட்டிலிருந்த குங்குமத்தில் விழுந்தது. சடுதியில் உள் வாங்கி கண்ணீர் காணாமல் போனது.

துர்கா பொங்கி வந்த துக்கத்தை உள்ளிழுத்துக் கொண்டாள்.

## 2

துர்கா ஆட்டோவிற்கு பணம் கொடுத்துவிட்டு திரும்பும்போது மாடி பால்கனியருகே இவள் வரவிற்காக காத்திருந்த வைத்தீஸ்வரன் கண்களில் பட்டார்.

இவளைக் கண்டதும் கதிரவனாய் முகம் பிரகாசிக்கக் கையை அசைத்துக் காட்டி கீழே இறங்கி வந்தார்.

துர்கா நிதானமாய் நடந்தாள்.

அவள் செருப்புக்கடியில் மெத்தென்று வளர்ந்திருந்த பசும்புற்கள் நசுங்கிப் போயின. கண்ணுக்கெட்டிய வரை அழகிய செடி கொடிகள். மலர்கள் என்று அந்த இடமே நந்தவனமாய் இருந்தது. கேட்டை திறந்து உள்ளே சென்றால் ஐம்பதடி தள்ளி வெண்ணிறமாய் பளபளத்தது அந்த சலவைக்கல் பங்களா!

மூன்று மாடிகளாய் உயர்ந்து கம்பீரமாய் நின்றிருந்தது.

''வா... துர்கா... இன்னைக்கென்ன இவ்வளவு லேட்?'' ஒரு குழந்தையின் துள்ளலோடு ஆர்வத்தோடு, லேசாய் மூச்சு வாங்க வாசலில் வந்து விட்டார்.

''நான்தான் வந்துட்டேயிருக்கேனே... நீங்க ஏன் இப்படி ஓடி வர்றீங்க? மூச்சு வாங்குது...''

''அதை விடு! ஏன் லேட்? நான் பதறிப்போய்ட்டேன். உங்கிட்டருந்து போனும் வரலே... நான் என்னன்னு நினைச்சுக்கறது?'' கவலையாய் கேட்டார்.



''அது சரி! ஒரு மணி நேரம் தானே லேட்டாச்சி. முகேஷ்க்கு இன்னைக்கு பிறந்த நாள். கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு வந்தேன்! அதனாலதான் தாமதம்!''

''அடடா... நேத்தே என்கிட்டே சொல்லி இருக்கலாமே! ஒரு நல்ல ப்ரெசன்ட்டை ரெடி பண்ணியிருப்பேனே! இப்ப மட்டும் என்ன... அப்படி ஒண்ணும் நாழியாயிடலை. இன்னைக்கு சமைக்க வேண்டாம். ஹோட்டல்ல சாப்பிட்டுப்போம். முகேஷிற்கு பர்த்டே கிஃப்ட் வாங்க... இன்னைக்கு முழுக்க மெட்ராஸை ஒரு கலக்கு கலக்குவோம்!''

துர்கா சப்தம் வெளிவராமல் சிரித்தாள்.

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் வைத்தி.''

''என்ன வேண்டாம்? நோ.., நோ... உன் பேச்சை நான் கேக்கப் போறதில்லே! இன்னைக்கு உன் கூடவே நானும் கிளம்பி முகேஷிற்கு என் கையால பரிசைக் கொடுக்கப் போறேன்!'' கண்கள் மின்ன... உறுதியாய் பேசினார்.

'வேற வினையே வேண்டாம்!' என்று நினைத்த துர்கா சங்கடமாய் சிரித்தாள்.

''உள்ளே போய் பேசலாமா?''

''சேச்சே... நான் ஒரு மடையன். தாராளமா உள்ளே வா... துர்கா!'' என்ற வைத்தீஸ்வரன் நாற்பத்தெட்டு வயதிற்கு ரொம்பவே தளர்ந்திருந்தார்.

செக்கச் சிவந்த நிறம். ஐந்தரை அடி உயரம். லேசாய் தொந்தி! அங்கிங்கே என்று தலையில் வெள்ளிக் கம்பிகள் தெரிந்தாலும் வழுக்கை விழவில்லை. வெள்ளை நிறத்தில் வேட்டியும், சட்டையும் ஒரு கையில் தங்க கைகடிகாரம். மற்றொரு கையில் பிரேஸ்லெட் கழுத்தில் நவரத்தின மாலை, நெற்றியில் விபூதிப்பட்டை.

அந்த பங்களாவின் ஒவ்வொரு அடியும் பணத்தால் அளக்கப் பட்டிருந்தது. தேக்கில் இழைக்கப்பட்ட வேலைப்பாடுடன் கூடிய உயர்ரக பர்னிச்சர்கள் குஷன் வைத்து அமைக்கப்பட்டிருந்தது.

வண்ண அலங்கார விளக்குகள்.

எடுபிடி வேலையாட்கள், தோட்டக்காரன், வாட்ச்மேன் என்று வீடு நிறைய பணியாட்கள் இருந்தபோதிலும், கடந்த ஒரு வருடமாய் வைத்தீஸ்வரனுக்கு சமையல்காரி துர்காதான்.

சென்னை நகரின் முக்கிய புள்ளிகளில் ஒருவர் வைத்தீஸ்வரன். எல்லா பிஸினஸிலும் கால் பதித்து வெற்றிக் கொடி நாட்டி மூட்டை மூட்டையாய் பணத்தை அள்ளிக் கொள்பவர். அவர் இலட்சாதிபதி அல்ல கோடீஸ்வரன்.

இருவரும் உள்ளே வந்தமர்ந்த மறு விநாடியே அவர் கம்பெனி ஜி.எம்.துரைராஜ் வந்தார்.

''குட்மார்னிங் சார்!''

''குட்மார்னிங்! உங்காருங்க துரை.''

சீட்டின் நுனியில் பட்டும் படாமல் அமர்ந்தார்.

''சார்...''

''சொல்லுங்க! என்ன விஷயம்? அதுக்கு முன்னால காபி சாப்பிடுங்க!'' என்று கூறிவிட்டு வேலைக்காரனிடம் கண்களால் உத்தரவு போட்டார்.

அடுத்த நிமிடமே காபி வந்தது.

துரைராஜ் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தார்.

''சார்... நம்ம கம்பெனியும், இத்தாலியும் சேர்ந்து செய்யப்போற புது புராஜக்ட்டை அடுத்த மாசம் மார்க்கெட்ல அறிமுகம் செய்யப் போறோமில்லையா?''

''யெஸ்...''

''இத்தாலி பார்ட்னர் ரூஸோ நேத்து இங்கே வந்தார். ரிசீவ் பண்ணி தாஜ்ல தங்க வச்சிருக்கேன். அவர் உங்களை பார்க்க விரும்பறார் சார்!''



''நானா? வேணாம் துரை! டாக்டர் என்னை ஆபீஸ் பக்கமே கொஞ்ச நாளைக்கு தலை வச்சுப் படுக்கக்கூடாதுன்னு ஸ்ட்ரிக்டா ஆர்டர் போட்டுட்டார். எல்லாத்தையும் நீங்களே பார்த்து முடிச்சிடுங்க ப்ளீஸ். ரொம்ப நாளைக்குப் பிறகு இப்பதான் டென்ஷன் இல்லாம நிம்மதியா இருக்கேன். என்னை விட்டுருங்கப்பா!'' வைத்தீஸ்வரன் ஆயாசமாய் பேசினார்.

''என்கிட்டே முழுப் பொறுப்பையும், என் மேல நம்பிக்கை வச்சு ஒப்படைச்சிருக்கீங்க. அது உங்க நல்ல மனசைக் காட்டுது. யாருக்கும் லேசுல கிடைக்காத இந்த ஃபாரின் கொலாப்ரேஷன் பிஸினஸ் நமக்குக் கிடைச்சிருக்குன்னா... அது தனிப்பட்ட உங்க பேர் வாங்கித் தந்த பெருமை. அப்பேர்ப்பட்ட மனிதரை கடல் தாண்டி பார்க்க வந்திருக்கார். ஒரு மரியாதைக்காக நீங்க கண்டிப்பா அவரை மீட் பண்ணனும் சார்!''

''என்ன துர்கா... என்னை விட மாட்டாங்க போலிருக்கே!''

''ஏன் சார்... அவரை எப்போ மீட் பண்ணனும்?'' என்று கேட்டாள் துர்கா.

''இன்னைக்கு ஈவ்னிங் மேடம். நம்ம கம்பெனில உள்ள முக்கிய ஆபீஸர்ஸ் அத்தனை பேரையும் அழைச்சிருக்கேன். போர்டு மீட்டிங் ஏற்பாடு பண்ணியிருக்கேன். நம்ம சார்தான் இதை தலைமை தாங்கி நடத்தணும்.''

''இன்னைக்கு ஈவ்னிங்கா? சார் கண்டிப்பா வருவார்!'' என்றாள் துர்கா.

''என்ன துர்கா, நீயும் கூட சேர்ந்துகிட்டு?''

''கர்ட்டஸி விசிட்தானே! கண்டிப்பா நீங்க போய்த்தான் ஆகணும். இல்லேன்னா... அது அவ்வளவா நல்லாயிருக்காது.''

''அப்ப முகேஷ்...''

''அதை நான் பார்த்துக்கறேன்...''

"ஹூம்... நீயே சொல்லிட்டப் பிறகு. போகாமலிருக்க முடியுமா? ஆமா முகேஷுக்கு என்ன வாங்கப் போறே?"

"அதைத்தான் நான் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டேன்ல?" துர்கா செல்லமாய் முறைத்தாள்.

"ஓகே... ஓகே! மிஸ்டர் துரை. ஈவ்னிங் நான் கண்டிப்பா வந்துடறேன்!"

"தாங்க்யூ சார்! நான் வர்றேன் சார்!" துரைராஜ் பவ்யமாய் விடை பெற்றார்.

அவர் சென்றபின் துர்கா வைத்தீஸ்வரனை பார்த்தாள்.

"என்ன சமைக்கட்டும் இன்னைக்கு?"

"என்ன வேணாலும் பண்ணு. ஆனா உருளைக்கிழங்கு பொடி மாஸும் கருணைக்கிழங்கு வறுவலும் நிச்சயமா வேணும்!"

"ரெண்டுமே கேஸ் ட்ரபிளை உண்டாக்கிற பொருள். உங்களுக்கு ஆகாது."

"ப்ளீஸ்... துர்கா!"

"நோ... நோ... அதெல்லாம் முடியாது. டாக்டர் என்னைத்தான் திட்டுவார்!"

"நான் அவர்கிட்டே பேசி சமாளிச்சிடறேன்."

"அந்தக் கதையே வேண்டாம். அவர் சொல்லிதான் அனுப்பியிருக்கார். இனி உங்ககிட்டே என்ன சமைக்கட்டும்னு கேக்கவே மாட்டேன்! நான் என்ன சமைச்சுப் போடறேனோ அதைச் சாப்பிடுங்க!" துர்கா அவரை நோக்கி அரைப்புன்னகையை வீசிவிட்டு சமையலறை நோக்கி நடந்தாள்.

வைத்தீஸ்வரன் குழந்தைத் தனமாய் முகத்தை சுருக்கினார். ஆனாலும் அவர் இதயம் முழுக்க... 'ஹா'வென நிம்மதி நிரம்பியது.



'இப்படியொரு நாளுக்காக... எத்தனை வருடம் தவமிருந்தேன்? தாமதமாய் என்றாலும் கூட.. என் கோரிக்கையை நிறைவேற்றி விட்டாயே முருகா. அதற்கு என் நன்றி! கடவுள் ஸ்தானத்தை விட ஒரு படி உயர்ந்து என் மேல் நம்பிக்கை வைத்து, அன்பை வைத்து, மதித்து இப்படியொரு வாழ்க்கையை தந்த ரத்னகுமாரை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்!' நன்றியாய் விம்மியதும் இதயம் கைகள் தன்னிச்சையாய் மானசீகமாய் உயர்ந்து வணங்கியது.

*

துர்கா ஒவ்வொன்றாய் பரிமாற, சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார் வைத்தீஸ்வரன்.

"இன்னும் கொஞ்சம் மோர்க்குழம்பு விடு துர்கா! நீயும் தட்டைப் போட்டுச் சாப்பிடேன் துர்கா!"

"இல்லே வைத்தி, நீங்க சாப்பிட்டு முடியுங்க!"

"ரத்னகுமாரை பார்த்தே ரொம்ப நாளாயிடுச்சு. அவர் அனுப்பி வைக்கிற டாக்டர்தான் டெய்லி வந்து என்னை செக்கப் பண்ணிட்டுப் போறார்!"

"அவர் ரொம்ப பிஸியாயிருக்கார் வைத்தி! அவருக்கு ஒரு கனவு இருக்கு. சொந்தமா பெரிசா எல்லா வைத்திய வசதிகளோடயும் ஒரு ஹாஸ்பிடல் கட்டணும்னு! அதுக்காக சிட்டியிலேயே ஒரு நிலமும் வாங்கிப் போட்டிருக்கார். பில்டிங் கட்ட பணம் வேணுமில்லையா? பாங்க்ல லோன் கேட்டு அப்ளை பண்ணியிருக்கார். அதுக்காகவும் அலைஞ்சிட்டு இருக்கறதாலதான் வரமுடியல. என்னாலேயே சரியா அவரைப் பார்க்க முடியலேன்னா பாருங்களேன்!"

"அதெல்லாமிருக்கட்டும். அதென்ன பாங்க்ல லோன் கேட்டு அப்ளை பண்றது? அப்ப நான் யார்? நான் தரமாட்டேனா? அட... ஏற்கனவே கூட ரத்னகுமார்கிட்டே நான் வாக்குக் குடுத்திருக்கேனே... நானே ஹாஸ்பிடல் கட்டித்தர்றேன்னு... அதற்குப் பிறகும் லோன்

அப்ளை பண்ணி... சே...'' வைத்தி கோபத்தோடு பாதி சாப்பாட்டிலேயே கையை கழுவி விட்டார்.

''என்ன வைத்தி இது பாதி சாப்பாட்ல...?''

''மனசு நிறைஞ்சிடுச்சு துர்கா! இப்ப ஒரு சந்தோஷமான செய்தி சொன்னே பார்... இது போதும் எனக்கு. ஏன் நீ அவருக்கு எடுத்துச் சொல்லி இருக்கலாமில்லே... வைத்தி தரமாட்டாரான்னு!''

''ப்ளீஸ் வைத்தி. எமோஷனல் ஆகாதீங்க. காம்டவுன்! எனக்கு என் புருஷனோட லட்சியம் தெரியும். ஆனால், நீங்க அவர்கிட்ட போட்டிருக்கிற அக்ரிமென்ட் எனக்கு புதிய செய்தி! அவரும் என்கிட்டே இதைப்பத்தி ஒரு நாளும் சொன்னதில்லே!''

துர்கா முகத்தில் வேதனை ரேகை படர்ந்தது.

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதே! அக்ரிமென்ட்ங்கற வார்த்தையே அசிங்கமாயிருக்கு. ரத்னகுமாருக்கு ஹாஸ்பிடல் கட்டணும்ங்கறது லட்சியமாயிருக்கலாம். ஆனா, அது எனக்கு கனவு. இலவசமா ஹாஸ்பிடல், அனாதை இல்லம் இதெல்லாம் கட்டணும்... நாலு பேர் பயன் பெறணும்னு! உன் கணவர் என் உயிரைக் காப்பாத்தினவர். யாரும் செய்யக்கூட யோசிக்கிற செயலை எனக்காக யோசிக்காம செய்தவர். அவர் எனக்கு தெய்வம் மாதிரி. அந்த உயர்ந்த நண்பனோட லட்சியத்தை நிறைவேத்தற வாய்ப்பு எனக்குக் கிடைக்கணும். அதைத்தான் அவர்கிட்டேயும் சொன்னேன். ஆனா... இப்ப... நான் உடனே ரத்னகுமாரைப் பார்க்கணும் துர்கா!''

''.....''

''ஏன் அமைதியாயிருக்கே?''

''எனக்குப் பிடிக்கலே வைத்தி...''

''என்ன பிடிக்கலே?''

''என் கணவரோட லட்சியத்தை நீங்க நிறைவேத்தறதா சொல்றது!''



''ஏன்?''

''அது அவ்வளவு சரியில்லை!''

''ஸோ... என்னை வேற்று மனுஷாளாத்தான் நினைக்கிறே இல்லே!''

''சேச்சே... என்ன வைத்தி இப்படியெல்லாம் பேசறீங்க?''

''பின்னே... இதுக்கு என்ன அர்த்தம்?''

''உங்களுக்குப் புரியாது வைத்தி! நாலு பேர் தப்பா பேசுவாங்க!''

''அந்த நாலு பேர் நாங்க கட்டற ஹாஸ்பிடலுக்கு வராமல் போகட்டும். உனக்குத் தெரியாது. நல்ல காரியம் பண்றதை என்கரேஜ் பண்ணு துர்கா! நான் நாளைக்குக் கண்டிப்பா ரத்னகுமாரைப் பார்க்கணும். காலைல வரட்டுமா? அப்படியே உன்னை பிக்கப் பண்ணிக்கறேன்!''

''இ... இல்லே வேண்டாம். அவர் இருக்க மாட்டார். நீங்க ஹாஸ்பிடலுக்கே போய் பாருங்க!'' அவசரமாய் மறுத்தாள்.

## 3

முகேஷ் பைக்கை ஸ்டாண்ட் போட்டு சாவியை உருவி பாக்கெட்டில் போட்டுக் கொண்டு நடந்தான்.

வாட்ச்மேன் அவனைப் பார்த்து ''வணக்கம் சார்'' என்றான். முகேஷ் கொஞ்சமாய் பதிலுக்குச் சிரித்துவிட்டு ஸ்பிரிங் டோரை தள்ளி உள்ளே நுழைந்தான்.

அனெக்ஸ் ஸாஃப்ட்வேர் கம்பெனி அது. அங்குதான் முகேஷ் கம்ப்யூட்டர் இன்ஜினீயராகப் பணிபுரிகிறான்.

இதமாய் குளிரூட்டப்பட்ட அறைகளில் அமர்ந்து தத்தம் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

முகேஷ் தன் அறைக்குள் போவதற்குள் யாரோ அவன் தோளில் கைபோட்டார்கள்.

திரும்பினான்.

கண்கள் விரிந்தது.

எம்.டி. குப்தா!

"ச... சார்.. குட்மார்னிங்!"

"குட்மார்னிங்! என்னப்பா நீயும் இன்னைக்கு லேட்டா?"

"சார்... அது... வந்து..."

"ஓகே! நானே லேட்டாதான் வர்றேன். ஸோ, உன்னை குற்றம் சொல்ல தகுதி இல்லே! எனிவே நீ திறமைசாலி! பத்துநாள்ல முடிக்கிற வேலையை அஞ்சு நாள்ல முடிக்கிற டேலன்ட். ஐ லைக் இட்! நீ நல்லா வருவே. அப்புறம் சி.எம். வீட்லே கம்ப்யூட்டர்ல மைனர் பிராப்ளம்னு போன் பண்ணினாங்க... சீக்கிரம் கிளம்பு..."

"இல்லே சார்... நேத்து ஈவினிங்கே அந்த வேலையை முடிச்சிட்டேன்.."

"வெரிகுட். இன்னும் என்ன, தயக்கமா ஏதோ சொல்ல வர்ற மாதிரி... உன் முகத்துல வழியுது!" குப்தா கிண்டலாய் கேட்டார்.

"சார்... நான் இன்னைக்கு ஆபீஸுக்கு லீவு."

"அச்சா! அப்புறம் ஏன் வந்தே?"

"சும்மா..."

"ம்... ரொம்ப வழியறதைப் பார்த்தா இன்னைக்கு தீபிகாவும் லீவு... அப்படித்தானே?"

"சா...ர்..." என்றான் அதிர்ச்சியாய்.

"என்ன... என்ன ஷாக்காயிட்டே? எனக்கு எப்படித் தெரியும்னா? ஏம்பா... நம்ம ஆபீஸுக்கு தெரிஞ்ச மேட்டர்... எனக்கு மட்டும் தெரியாதா என்ன? இதோ பார் முகேஷ்! நான் காதலுக்கு எதிரியில்ல... ஆனா, ஆபீஸ் டைம்ல லவ் பண்ணாதே..."



"இல்லே சார்... அப்படியெல்லாம் இல்லே சார்" என்றான் அவசரமாக.

"அதனாலதான்... லீவு போட்டு லவ் பண்றேன்ங்கறியா?"

'கடவுளே... இந்த மனுஷன்கிட்டே என்னை மாட்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கறியே.'

"என்ன... மனசுக்குள்ளே சாமிகிட்டே சண்டை போடற போலிருக்கே..." குப்தா அவனை ஊடுருவிப் பார்த்தபடி கேட்டார்.

முகேஷ் நிஜமாகவே பயந்து போனான்.

'சே... இந்த ஆள்கிட்டே எதையும் மறைக்க முடியாது போலிருக்கே!' அலுத்துக் கொண்டான்.

குப்தா வாய்விட்டு சிரித்தபடி அவன் தோளில் தட்டிக் கொடுத்தார்.

"மை பாய்... பயப்படாதே! நான் சும்மா விளையாடினேன். நாலு லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டவன்தான். ஒரே ஒரு அட்வைஸ் பண்றேன். அதை மட்டும் கேட்டுக்க. இந்தக் காதில வாங்கி அந்தக் காதிலே விட்டுடாதே! உன் வேலைல காட்ற வேகத்தைக் காதல்லேயும் காட்டு. காதலிக்கிறது தப்பில்லே. காதலிச்சுக்கிட்டே இருக்கறதுதான் தப்பு. சீக்கிரமா தீபிகாவை கல்யாணம் பண்ணிக்க!"

"ஓகே சார்!" என்றான் சற்றே வெட்கத்துடன்.

"ஹேய்... நீ ஆம்பிளை பையன். வெட்கப்படக்கூடாது."

முகேஷ் பதில் தராமல் சிரித்தான்.

"ஓகே!" பலமாய் தோளில் தட்டிவிட்டு தன் அறைக்குப் போனார் குப்தா!

மழை பெய்து விட்டாற் போல் அந்த இடம் சட்டென அமைதியை வாங்கிக் கொண்டது.

வெளியிட்டான்.

முகேஷ் நெஞ்சில் கைவைத்து பெருமூச்சை வெளியிட்டான்.

தன் காபினுக்குள் நுழையும் முன் எதிர்பட்ட சுந்தர் ''என்னப்பா காலங் கார்த்தால ரம்பத்துக்கிட்டே மாட்டிக்கிட்டியா? ஆமா... இன்னைக்கு நீ லீவாச்சே? ஏன் வந்தே? லீவு கான்சலா?''

''அட இல்லேப்பா... தீபிகா வந்துட்டாளா?''

''அதானே பார்த்தேன். ஆமா. இன்னைக்கென்ன விசேஷம்? என்னைக்குமில்லாம இன்னைக்கு தீபிகா அபூர்வமா புடவையில வந்திருக்கா! நீயும் அமர்க்களமா டிரஸ் பண்ணிட்டிருக்கே. ஏம்பா... எங்களுக்குக் கூட சொல்லாம திருட்டுத்தனமா கல்யாணம் அது... இதுன்னு...''

''போப்பா... நீ வேற வயித்தெரிச்சலைக் கிளப்பிக்கிட்டு? அவருக்கு பதில் இப்ப நீ ஆரம்பிச்சிட்டியா?'' முகேஷிற்கு நிஜமாகவே எரிச்சல் உண்டானது.

சுந்தர் சிரித்தபடி அகன்றான்.

முகேஷ் காபினுக்குள் புகுந்து சேரில் தொப்பென அமர்ந்து கொண்டான்.

அவனைப் பார்த்துவிட்டு பக்கத்து அறைக்குள்ளிருந்து இவனிடம் வந்தாள் தீபிகா.

முகேஷிற்கு மூச்சை அடைத்தது.

கொஞ்ச நஞ்சமிருந்த எரிச்சலெல்லாம் விலகி, மனசு புத்துணர்ச்சியை பூசிக் கொண்டது.

''ஹாய் முகேஷ்...''

''வா தீபி...''

''மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே...''

''தாங்க்யூ...'' என்றவன் அவளை இன்ச் பை இன்ச்சாய் கண்களால் அளந்தான்.



ஐந்தடி இரண்டங்குல உயரத்தில் கடைந்தெடுக்கப்பட்ட சந்தன சிலையாக மின்னிய தேகம் வசீகரமான முகம். மின்னும் உதடுகள். தினசரி ஷாம்பூவின் ஜலக்கிரீடையால் பளபளத்த கேசம் முன்புறம் பஃப் வைத்து பின்னல் போட்டு, முல்லைச் சரத்தை தோளில் வழிய விட்டிருந்தாள்.

இளமஞ்சளும் கருப்பும் கலந்த பொன்னிறத்தில் ரூபினி சில்க் சேலை கட்டியிருந்தாள். கழுத்தை ஒட்டிய செயின். சின்னதாய் கம்மல் என்று எளிமையும், அழகும் சேர்ந்து அவளை தேவதையாக்கியிருந்தது.

''வாவ்...'' என்றான் கண்களை அகல விரித்து.

''பிறந்த நாள்... எனக்கா உனக்கா?'

''என முகேஷின் சரிபாதி சகியாயிற்றே நான்'' என்றாள் காதல் பொங்க தீபிகா.

''வாரே... வா!'' என்று எழுந்து அருகில் வந்தான்.

தீபிகாவிடமிருந்து இனிமையான சென்ட் வாசம் கமகமக்க... ''ம்ஹா...'' என்று மூச்சை உள்ளிழுத்துச் சிரித்தான்.

''குப்தாகிட்டே மாட்டிக்கிட்டியாமே!''

''அதுக்குள்ளே ஆபீஸ் முழுக்க பரவிடுச்சா?'' என்றான் ஆச்சர்யமாய்.

''பயங்கர அட்வைஸா?''

''சேச்சே... ஹி வாஸ் ஜெம்! எங்கப்பா வயசு அவருக்கு. அவரோட அனுபவங்கள்தான் என் வயசு. லொட லொடப் பேர்வழியே தவிர எப்பவும் அவர் ஒரு எம்.டி.யா நடந்துக்கிட்டதில்லே. ஒரு ப்ரண்டு மாதிரிதான் பிஹேவ் பண்ணுவார். இந்த மாதிரி மனிதர்கள் இந்த ஊர்ல அபூர்வம் தீபிகா!'

''போதும்... கிளம்பலாமா? நாம லீவு போட்டுட்டு இங்கே வந்திருக்கக் கூடாது! எல்லாரும் கிண்டல் பண்றாங்க!''

"நீதானே இங்கே வரச் சொன்னே?"

"தப்புதான். வெளியிலே பார்க்கிலேயோ, பஸ் ஸ்டாண்ட்லேயோ நாலு பேர் பார்க்கற மாதிரி வெயிட் பண்றதெல்லாம் எனக்குப் பிடிக்காது."

"எனக்கும் பிடிக்காது ஏன்னா..." என்று நிறுத்தினான்.

"ஏன்?"

"என் அழகான தீபிகாவை அவனவன் கண்களாலேயே கடிச்சுக் குதறிடுவானுங்க... அதான்!"

தீபிகா இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன தீபி... அப்படி பார்க்கறே?"

"என் மேலே உங்களுக்கு அவ்வளவு அன்பா?"

"அவ்வளவு பைத்தியம்!"

"இது கடைசி வரை தெளியக்கூடாது!"

"தெளியாது. ஏன்னா கீழ்ப்பாக்கத்துலதான் நாம தனிக்குடித்தனம் பண்ண வீடு பார்க்கப் போறேன்?"

பலமாய்ச் சிரித்தவள், "கிளம்பலாமா?" என்றாள்.

கிளம்பினர்.

பசை போட்டு ஒட்டியது போல் பைக்கில் அவன் முதுகில் சாய்ந்து பயணித்த தீபிகா தன் முகத்தை அவன் பரந்த முதுகில் வைத்துத் தேய்த்தாள்.

"முகேஷ்..." அவன் காதோரம் கிசுகிசுத்தாள்.

"என்ன?"

"எனக்காக என்ன வேணாலும் செய்வீங்களா?"

"கண்டிப்பா! அதிலென்ன சந்தேகம்? சினிமாவுல வர்ற மாதிரி பைக்கை அப்படியே பறக்க வைக்கணுமா? கார் மேலே வண்டிய ஓட்ட



வைக்கணுமா? வண்டியிலே இருக்கிற காய்கறிகள் சிதறியோட வண்டிகளை இடிச்சித் தள்ளிக்கிட்டுப் போகணுமா? என்ன செய்யணும் சொல்லு?"

"ஸோ... எனக்காக என்ன வேணாலும் செய்வீங்கன்னு புரிஞ்சு போச்சு. என்ன செய்யணும்னு நான் பிறகு சொல்றேன். பைக்கை லெஃப்ட்ல திருப்புங்க."

"ஏன்? இது திருவான்மியூர் போற வழிம்மா! நாம போகப்போற ஹோட்டல் பெசன்ட்நகர்ல இருக்கு!"

"அங்கே வேண்டாம். மகாபலிபுரம் போகலாம்!"

வேகத்தைக் குறைத்து அவளை திரும்பிப் பார்த்துக் கேட்டான் முகேஷ்.

"ஏன் திடீர்னு..."

"இன்னைக்கு உங்க பர்த்டேயில்லையா? ஒரு ப்ரெசன்ட் தரப் போறேன். அதை அங்கே வச்சுதான் குடுக்கப் போறேன்."

"என்ன ப்ரெசன்ட் தீபி?"

"சஸ்பென்ஸ்!"

"ப்ளீஸ்டா.... மண்டை வெடிச்சிடும் போலிருக்கு. அது என்ன பரிசுன்னு என் காதுல ரகசியமா சொல்லேன்."

"படவா... பரிசே உனக்குத்தான். அந்த ரகசியத்தை உங்ககிட்டே சொல்லணுமா?" அவன் காதைப் பிடித்து வலிக்காமல் திருகினாள்.

ஆனாலும் அலறினான்.

மகாபலிபுரம் வந்துவிட்டது.

"அதோ... அந்த ஹோட்டல் வாசல்ல நிறுத்துங்க முகேஷ்."

நிறுத்தி இறங்கினர்.

"ஹும்... இந்த அட்மாஸ்பியரைப் பார்த்தாலே உடம்பை என்னவோப் பண்ணுது!" என்று அவள் தோளில் இடித்துக் கண்ணடித்தான்.

''இருக்கும்... இருக்கும்... முதல்ல ஒரு டீலக்ஸ் ரூம் ஏற்பாடு பண்ணுங்க... நான் உங்கிட்டே நிறைய பேச வேண்டியதாயிருக்கு!''

''அடிப்பாவி! ரூமை புக் பண்ணச் சொல்லிட்டு முக்கியமா பேசணும்ங்கறியே! இன்னைக்கு என் பிரம்மச்சரியத்துக்கு சோதனையா?'' புலம்பியபடி ரிசப்ஷன் நோக்கி நடந்தான்.

அறையின் மூலையில் டி.வி. கூட இருந்தது. டபுள் காட்! கண்களை உறுத்தாத இளநிறத்தில் ஜன்னல் திரைச்சீலைகள்.

முகேஷ் அறையை நோட்டம் விட்டான். இதயம் தடக் தடக் என தண்டவாளத்தில் காதை வைத்துக் கேட்டால் எதிரொலிக்கும் ஒலியைப் போல சத்தமிட்டது.

தீபிகா சலனமின்றி, எதுவுமே பாதிக்காதது போல் இன்டர்காமில் தொடர்பு கொண்டு, அறைக்கே உணவைக் கொண்டு வரச் சொன்னாள்.

''தீபிகா... இன்னைக்கு நீ என் கண்ணுக்கு ரொம்ப புதுசாத் தெரியறே!''

''தெரியும்... தெரியும்!'' என்று புன்னகைத்தவள் அவன் எதிரே அமர்ந்தாள்.

''என்னமோ முக்கியமான விஷயம் பேசணும்ன்னு சொன்னியே... என்ன தீபி?''

''வீட்லே சொல்லிட்டேன்!''

''என்ன சொன்னே?''

''நம்ம காதலைப் பத்தி...''

''ஏ...ய்...'' என்றான் அதிர்வோடு.

''தீபி... நீ நிஜமாத்தான் சொல்றியா?''

''இதிலென்னப்பா பொய்?''



''நம்ப முடியலே...''

''நம்பிதான் ஆகணும்! ரிலாக்ஸ் முகேஷ்... டென்ஷனாகற அளவுக்கு பிரச்னையில்லே! யூ நோ மை பேமிலி. ஏற்கனவே சொல்லியிருக்கேன். அப்பா ஜட்ஜாயிருந்து ரிடையரானவர். அம்மா காலேஜ்ல புரொபஸரா இருந்தவங்க, என்னோட ரெண்டு அக்கா. அண்ணன் இன்க்லூடிங் மை பாரெண்ட்ஸ் அத்தனை பேரும் காதலிச்சி கல்யாணம் பண்ணினவங்க. அதனால எந்த பயமுமில்லாம நம்ம காதலை அவங்ககிட்டே சொன்னேன். நான் எதிர்பார்த்தது வீணாகலே முகேஷ்.''

முகத்தில் சந்தோஷ ரேகை படர அவளைப் பார்த்தான் முகேஷ்.

''என் காதலுக்கு தடை போடலே! உங்க அப்பா பேரைச் சொன்னதும் என் பாரெண்ட்ஸ் 'தெரியுமே'ன்னு சொன்னாங்க! அதுக்குப் பிறகு தனியா என்னமோ பேசினாங்க. அப்புறம் 'முகேஷை கூட்டிக்கிட்டு வா! பேசி முடிவு பண்ணலாம்'னு சொன்னாங்க!''

முகேஷ் அவள் சொன்ன செய்தியின் சந்தோஷம் தாங்காமல் தாவி வந்து அவளை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டான்.

''தாங்க்யூ... தாங்க்யூ தீபி... எப்பேர்பட்ட ஹாப்பி நியூஸ் சொல்லியிருக்கே தெரியுமா?''

நாசூக்காய் அவனை விலக்கினாள்.

''எங்க வீட்டுக்கு எப்ப வர்றீங்க முகேஷ்?''

''அடுத்த வாரமே!''

''நம்மளோட ரெண்டு வருஷ காதல் ஒரு முடிவுக்கு வரப் போகுது இல்லையா?''

''இல்லை...!''

''இல்லையா? என்ன சொல்றீங்க?''

''என் தீபிகாவை கல்யாணத்துக்குப் பிறகும், என் கடைசி மூச்சு உள்ள வரைக்கும் லவ் பண்ணிக்கிட்டே இருப்பேன்!'' என்றான் அவள் மூக்கை வருடியபடி.

''கூசது... கையெடுங்க! எல்லா ஆம்பிளையும் கல்யாணத்துக்கு முன்னாலே லவ்வர்கிட்டே சொல்ற யூஷுவல் டயலாக்தான் இது!''

''இது டயலாக் இல்லே! கல்யாணமாகட்டும். நீயே புரிஞ்சிப்பே! ஆமா... ஏதோ ப்ரெசன்ட். அது இதுன்னு சொன்னே! எங்கே?''

''வச்சிருக்கேன். அது என்ன பரிசா இருக்கும்னு கெஸ் பண்ணுங்க பார்ப்போம்!'' தீபிகா குறும்பாய் கண்களை சிமிட்டி கன்னத்தில் கையை முட்டுக் கொடுத்து முகேஷையே பார்த்தாள்.

''ம்...'' என்று அவள் முகத்தையும், அவள் பேகையும் கண்களால் ஆராய்ந்தவன் சற்றே யோசித்தான்.

''பெரிசா... அட்டைப்பெட்டி எதுவும் உன்னோட சின்ன பேகிலே வைக்க முடியாது. ஸோ... சின்னப் பொருள்தான் இல்லையா?''

''சொல்லுங்க!''

''வாட்ச்?''

''இல்லை.''

''ரிங்?''

''ம்ஹூம்...''

''அதுவுமில்லையா? வேறென்னவாயிருக்க முடியும்? ஒரு க்ளுவாவது கொடேன்.''

''விலை மதிப்பில்லாத பொருள்.''

''விலை மதிப்பில்லாத பொருள்... ம்... வைர மோதிரம்.''

''நான்தான் ரிங் இல்லேன்னு சொல்லிட்டேனே!''

''குழப்பாதே! இது எதுவுமில்லேன்னா... வேற என்னவாயிருக்க முடியும்?''

''என் தீபிகா இல்லையா?''

''தீ...பி...'' என்று எழுந்து விட்டான்.



''என்ன - சொல்றே தீபிகா?'' உடலெங்கும் மின்சாரம் பாய்ந்த உணர்வில் திடுக்கிட்டுப் போனான்.

''யெஸ் முகேஷ்! உங்க பர்த்டேக்கு நல்ல பரிசா, எப்பவும் மறக்காம... என்னையே நினைச்சிட்டிருக்கிற மாதிரி பரிசுக் கொடுக்கணும்னு யோசிச்சேன். இதைவிட உயர்ந்த நல்ல பரிசு வேறெதும் இருக்க முடியாதுன்னு முடிவு பண்ணினேன்!''

''தீபிகா... நீ விளையாடலியே!'' நம்பாமல் கேட்டான்.

''இல்லை... என் முகேஷுக்கு. நான் மனப்பூர்வமா தரப்போகிற பரிசு இது! உங்க மேல நான் வச்சிருக்கிற காதல். அதைவிட அதிகமா வச்சிருக்கிற நம்பிக்கை. அதுக்கு தர்ற பரிசுதான் இது!''

கூடை கூடையாய் யாரோ தன் தலை மேல் பூக்களைக் கொட்டியது போல் உணர்விலிருந்தான் முகேஷ்!

ஒரு கட்டுப்பாட்டோடு, நாகரீகமாய் போய்க் கொண்டிருந்த காதல் அதன் உச்சத்திற்கு வந்திருக்கிறது.

'எந்தப் பெண்ணும் கொடுக்கத் தயங்குகிற பரிசை. இவள் எனக்குத் தருகிறாள் என்றால்... இவள் என்னை எந்தளவு நேசித்திருக்கிறாள்? இந்த நேசிப்பிற்கு நான் என் உயிரைக்கூட விலையாத் தரலாம் தப்பில்லை!' முகேஷ் மெல்ல அவளை நெருங்கினான்.

தன் கைகளால் அவள் முகத்தை ஏந்திக் கொண்டவன், அதை பத்திரமாய் தன் மார்பில் பதைத்துக் கொண்டான்.

''தீபி...''

''ம்...''

''நான் ரொம்ப லக்கி தீபி.''

''நானும்தான்!''

''நீ எனக்கு இப்படியொரு பரிசை தருவேன்னு நான் நினைச்சிக்கூட பார்க்கலே! உன்னோட தினமும் கற்பனையில் குடும்பம்

நடத்திட்டுதான் இருக்கேன். உன்னோட நிஜமா குடும்பம் நடத்த காத்துக்கிட்டு இருக்கேன். எனக்கு இவ்வளவு பெரிய பரிசை தர முன் வந்த உனக்கு... நம்ம கல்யாணத்துக்கு நானும் பெரிய பரிசைத் தரணுமில்லையா?''

''.............?''

''நம்மோட முதல் இரவு அன்னைக்கு என்னை முழுசா, ஒரு பிரம்மச்சாரி முகேஷா... உன் கையிலே ஒப்படைக்கப் போறேன். என்னதான் பரிசு தர்றேன்னு இப்ப உன்னை என்கிட்டே கொடுத்தாலும், அதுக்குப் பிறகு ஏதோ ஒரு உறுத்தல் உனக்குள்ளே முள்ளா குத்திக்கிட்டேதான் இருக்கும். அப்படி ஒரு உறுத்தலை என் பொருட்டு உனக்கு ஏற்படுத்த விரும்பலை தீபி! இதுக்கும் மேலே நாம இங்கே இருக்க வேண்டாம். கிளம்பு!'' நிதானமாய் அவள் முதுகை வருடியபடி சொன்னான்.

தீபிகா அவனை பெருமை பொங்க, சிறு விம்மலோடு பார்த்தவள்... அவன் நெஞ்சில் முத்தமிட்டு தன் நன்றியைத் தெரிவித்தாள்.

## 4

வைத்தீஸ்வரன் காரை விட்டிறங்கினார். நிமிர்ந்து பார்த்தார்.

மூன்று மாத கட்டிடமாக அரசாங்க மருத்துவமனை உயர்ந்து கம்பீரமாய் நின்றிருந்தது.

குறுக்கும் நெடுக்குமாக வெள்ளை உடையணிந்த டாக்டர்களும், நர்சுகளும் நடை பயின்று கொண்டிருந்தனர்.

டாக்டர் ரத்னகுமார் அங்குதான் பணிபுரிகிறார்.

''எக்ஸ்க்யூஸ் மீ...'' எதிர்பட்ட ஒரு நர்சை அணுகினார்.



''யெஸ்...''

''டாக்டர் ரத்னகுமாரைப் பார்க்கணும்!''

''செகண்ட் ஃப்ளோர்ல ஃபோர்த் ரூம்! அதோ, அந்தப் பக்கம் லிஃப்ட் இருக்கு!''

''தாங்க்யூ!''

வைத்தீஸ்வரன் லிஃப்டை நோக்கி நடந்தார்.

அவர் செல்வதற்குள் லிஃப்ட் வீல் சேரோடு ஒரு நோயாளியை உள்ளடக்கி டோர் மூடிட்டு பறப்பட்டு விட்டது.

சில நிமிடங்கள் பொறுமையாக லிஃப்ட்டுக்காகக் காத்திருந்தார்.

இரண்டாவது மாடியில் நான்காம் எண் அறையைக் கண்டுபிடிக்க சிரமமில்லை.

வைத்தீஸ்வரன் அறையினுள் நுழைந்தபோது... மூன்று இளம் டாக்டர்கள் ரத்னகுமார் சொல்லிக் கொண்டிருந்த ஆலோசனைகளை சீரியல் முகங்களோடு செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

வைத்தீஸ்வரனை பார்த்துவிட்ட ரத்னகுமார் திகைத்து விட்டார்.

''வாங்க... வாங்க வைத்தி...''

''இருக்கட்டும் டாக்டர். நான் வெளியே நிக்கறேன். நீங்க பேசி முடியுங்க!''

''ப்ச்! உள்ளே வாங்க! டாக்டர்ஸ், இன்னும் அரை மணி நேரம் கழிச்சி நானே உங்களைக் கூப்பிடறேன்.''

''தாங்க்யூ டாக்டர்!'' என்றபடி மூவரும் வெளியேறி விட்டனர்.

''வாங்க... உக்காருங்க வைத்தி! எனிதிங் ராங்?'' என்றார் கேள்விக்குறியோடு.

''ஆமாம்!'' என்று முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டார்.

''என்னாச்சு? மெடிசின்ஸை ஒழுங்கா எடுத்துக்கறீங்களா வைத்தி? தனியாவா வந்திருக்கீங்க? கூட யாரும் வரலையா? துர்காவையாவது

அழைச்சிட்டு வந்திருக்கலாமே!'' படபடவென பேசியபடி ஸ்டெத்தை எடுத்து மாட்டிக் கொண்டார்.

''அவசரப்படாதீங்க! எனக்கொண்ணுமில்லே!'' வைத்தி அவரை கையமர்த்தினார்.

''பின்னே?'' ரத்னகுமார் ஸ்டெத்தைக் கழற்றி டேபிள் மீது வைத்தார்.

''ரத்னகுமார், நிஜமாவே என் மேல அன்பு வச்சிருக்கீங்களா?''

''இதிலென்ன சந்தேகம் வைத்தி?''

''சந்தேகப்படற மாதிரிதான் உங்க ஆக்ட்டிவிட்டிஸ் இருக்கே!''

''பாருங்க வைத்தி! புதிர் போடாம விஷயத்துக்கு வாங்க!'' புன்னகைத்தபடி வைத்தீஸ்வரனின் கரங்களை தட்டிக் கொடுத்தார்.

அந்த கரத்தை அப்படியே பற்றிக் கொண்டார் வைத்தி.

''ரத்னகுமார்! இன்னைக்கு நான் உயிரோட உங்ககிட்டே பேசிட்டிருக்கேன்னா... யார் காரணம்? நீங்கதான்! நீங்க இல்லேன்னா... நான் போன இடம் புல்லு முளைச்சி போயிருக்கும். ஒரு டாக்டரா மட்டுமில்லாம, ஒரு நண்பனா, சகோதரனா இருந்து, என் உடலுக்கும், மனசுக்கும், ட்ரீட்மென்ட் தந்தீங்க அப்ப... ஒரு வருஷத்துக்கு முன்னாடி நான் உங்ககிட்டே ஒரு வாக்குறுதி கொடுத்தேனே... அது ஞாபகமிருக்கா?''

சிறிது நேரம் யோசித்துவிட்டு மூக்கை சுண்டினார்.

''இல்லே வைத்தி... நினைவுக்கு வரலே... அதையும் நீங்களே சொல்லிருங்க!''

''அதையும் மறந்திட்டீங்களா? இலவசமா ஹாஸ்பிடல் கட்டணுங்கறது என் லட்சியம்னு சொன்னேனே...''

''ஓ... யெஸ்.. யெஸ்... அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா? நீங்க தனியா ஹாஸ்பிடல் கட்ட பேங்க்ல லோன் அப்ளை பண்ணிக்கிட்டிருக்கறதா கேள்விப்பட்டேன். அது நிஜமா?''



''ஆ... ஆமாம்!''

''ஏன் ரத்னகுமார்? ஏன் இப்படியெல்லாம் பண்ணி என் மனசை வேதனைப்படுத்தறீங்க? நானில்லையா? உங்க குடும்பத்துல ஒருத்தனா நானில்லையா? என்னை மறந்துட்டீங்களா? இல்லே வேண்டாம்னு ஒதுக்கிட்டீங்களா? என்னோட பணமெல்லாம் யாருக்கு? உங்களுக்குத்தானே?'' உணர்ச்சி வசப்பட்டதில் நெற்றியில் திட்டு திட்டாய் வியர்த்தது.

''காம் டவுன் வைத்தி! டோன்ட் பி எமோஷனல். நீங்க என் ப்ரண்ட்தான். சகோதரன்தான். நீங்க நல்லா இருக்கணும். நீடூழி பல காலம் வாழணும்னு ஆசைப்படற டாக்டர்தான். நீங்க கொடுத்த வாக்குறுதிய நான் மறக்கலே வைத்தி. பட்...''

''..............''

''என்னோட ஆழமான அன்புக்கு பணம்தான் விலைன்னு நீங்க நிர்ணயிச்சிடக் கூடாதுங்கற பயத்துலதான்... வாங்கிக்கக் கூடாதுன்னு தீர்மானிச்சேன்.''

''அது வேற... இது வேற! ஹாஸ்பிடல் கட்டணும்ங்கறது உங்களுக்கும், எனக்கும் லட்சியம் நிலம் உங்களோடது. பணம் என்னோடது. இது ரெண்டும் ஒண்ணா சேர்ந்து ரெண்டு பேரோட லட்சியத்தையும் நிறைவேத்தப் போகுது. மறுக்காதீங்க குமார். இது நல்ல காரியம் பல ஆயிரம் மக்களோட நோயைத் தீர்க்க... மருத்துவ வசதிகளைப் பெருக்கி சேவை செய்ய நினைக்கிற உங்க தொண்டுல என்னையும் ஒரு ஊழியனா சேர்த்துக்கிட்டு இந்த செக்கை நீங்க வாங்கிக்கணும்!'' வைத்தீஸ்வரன் ஒரு செக்கை எடுத்து நீட்டினார்.

ரத்னகுமார் தயங்கினார்.

''ப்ளீஸ்...'' வைத்தி கெஞ்சினார்.

சங்கடத்துடன் வாங்கிக் கொண்டார்.

"தாங்க்யூ... தாங்க்யூ குமார்! இப்பத்தான் மனசே லேசான மாதிரி ஃபீலிங்! நீங்க ரொம்ப பிஸியாயிருக்கறதா துர்கா சொன்னா! அப்பப்ப என்னையும் ஞாபகம் வச்சு வீட்டுக்கும் வரணும்!"

"கண்டிப்பா வர்றேன் வைத்தி!"

வைத்தீஸ்வரன் விடைபெற்றுப் போனபின்பு ரத்னகுமார் அந்த கவரிலிருந்து செக்கை எடுத்துப் பார்த்தார்.

பார்த்தவருக்கு மூச்சடைத்தது.

செக்கில் ஒரு கோடி ரூபாய் என்று போடப்பட்டிருந்தது.

ஆபீஸ்க்கு போய்ட்டு வந்துடறேன்னு எங்கே போய்ட்டு வர்றீங்க வைத்தி?" உள்ளே நுழைந்தவரிடம் விசாரித்தாள்.

"ஆபீஸ்க்குதான்!"

"வேண்டாமே! அரை மணி நேரத்துக்கு முன்னாடிதான் துரைசாமி உங்களைப் பார்க்க வந்திருந்தார். ஜஸ்ட் இப்பத்தான் கிளம்பிப் போனார். சொல்லுங்க... எங்கே போய்ட்டு வர்றீங்க?"

"டயர்டா இருக்கு. ஒரு காபி கிடைக்குமா?"

"பேச்சை மாத்தாதீங்க! உங்க பாடி கண்டிஷன் தெரியுமில்லையா? டாக்டருக்கு தெரிஞ்சா என்னையும் திட்டுவார். எங்கே போனீங்க?"

"டாக்டரைத்தான் பார்க்கப் போனேன்!"

"டாக்டரையா? என்னாச்சு வைத்தி? என்கிட்டே கூட ஒண்ணும் சொல்லவேயில்லையே... எனிதிங் ராங்?" துர்கா பதட்டமானாள்.

வைத்தீஸ்வரன் சிரித்தார்.

"இப்படி பதட்டப்பட்டு கேள்வி கேட்கிற விஷயத்திலே கணவனும் மனைவியும் ஒரே மாதிரி! எனக்கு ஒண்ணுமில்லே துர்கா! ரத்னகுமார் கிட்டே நான் கொஞ்சம் பர்சனலா பேச வேண்டியிருந்தது."

"பர்சனல்?"



"ஆமாம்! அந்த ஹாஸ்பிடல் விஷயம்தான். போய் குமாரை வாங்கு வாங்குன்னு வாங்கிட்டேன். என்கிட்டே முடியுமா? கடைசியிலே நான்தான் ஜெயிச்சேன்!" பெருமிதம் பொங்கியது முகத்தில்.

"அவர் நீங்க கொடுத்ததை வாங்கிக்கிட்டாரா?" குரல் அமுங்கிப் போய் ஒலித்தது.

"ம்."

அலுப்பாய் சுவரில் சாய்ந்து கொண்டாள் துர்கா.

"துர்கா, காபி கேட்டேனம்மா!"

"..............."

"துர்கா!" வைத்தி மறுபடி அழைத்தார்.

"ம்..." என்று திடுக்கிட்டவள். "இதோ வந்திட்டேன் வைத்தி" என்று கிச்சனை நோக்கிச் சென்றாள்.

✱

மூன்று கிலோ பெறுமானமுள்ள தடிமனான புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார் ரத்னகுமார்.

டேபிள் லாம்ப் வெளிச்சத்தில் அவர் முகத்தில் இதுவரை பார்த்திராத ஒரு களை முகம் முழுக்கப் பரவியிருந்ததைக் கண்டாள்.

கடந்தவைகளை அசை போட்டாள். நினைத்த மாத்திரத்தில் கண்களில் அணை நிரம்பியது. விளக்கொளியில் விட்டத்தில் சுழலும் ஃபேன் தகதகவென ஜொலித்தது.

சட்டென கண்ணீரை துடைத்துக் கொண்டவள் கட்டிலை விட்டு எழுந்தமர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் முழங்கால்களில் முகத்தை சாய்த்தபடி கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த உருவத்தை இப்போதுதான் புதிதாய் பார்ப்பது போலிருந்தது.

அவள் கண்களுக்கு புலப்படாத ஏதோ அவரிடம் இருப்பது போல உள்மனசு சொன்னது.

ஏதேச்சையாய் திரும்பிய ரத்னகுமார் மனைவியைப் பார்த்து விட்டார்.

''என்ன துர்கா... நேரமாகுதே... தூங்கலையா?''

''நீங்களும்தான் தூங்காம படிச்சிட்டிருக்கீங்க! சீக்கிரம் படுத்துத் தூங்குங்க! காலையிலே ஹாஸ்பிடல் போக வேண்டாமா?''

''நீயும்தான் காலையிலே எந்திரிச்சு ஓடணும். எனக்கு நேரமாகும். நீ படுத்துக்க!''

''வைத்தி வீட்டுக்குப் போறது ஒரு புரஃபொஷனல் மாதிரிதான் ஆகிப் போச்சு. எனக்கு! இல்லையா?''

''சேச்சே... நீ ஏன் அப்படியெல்லாம் நினைக்கிறே? ஒரு டாக்டரோட மனைவியா உனக்கு நான் கொடுத்திருக்கிற சில பொறுப்புகள்தான்! ஒரு உயிரை பாதுகாக்கிற பொறுப்பு உன்னுது!'' ரத்னகுமார் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு துர்கா அருகே வந்தமர்ந்தார்.

''இல்லேங்க... எனக்கு அப்படித் தோணலே! கடமைக்காக இல்லாம... கட்டாயத்துக்காக அனுப்பி வைக்கறீங்களோன்னு கூட தோணுது!''

''துர்கா, என்னாச்சு உனக்கு? ஏன் இப்படியெல்லாம் பேசறே?'' அவளை தோளில் கை போட்டு தன் மேல் போட்டுக் கொண்டார்.

''கடமைன்னா... அதுக்கு பலனை எதிர்பார்க்கக் கூடாதில்லையா?'' துர்கா அவரிடமிருந்து விலகி அவர் முகத்தை நேர்பார்வை பார்த்தாள்.

''நான் எதிர்பார்க்கறேன்னு நினைக்கிறியா துர்கா?'' கண்ணாடியைக் கழற்றி டேபிள் மீது வைத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

தன் குற்ற உணர்வை மறைக்க அவர் செய்யும் செயல்போல் இருந்தது. அந்த நடவடிக்கை.



கைகளால் எவ்வளவு நேரம் முகத்தை மறைக்க முடியும்?

''அப்ப... இன்னைக்கு வைத்தி கொடுத்த செக்கை ஏன் வாங்கிட்டீங்க?''

''ஓ... உன்னோட கோபத்துக்குக் காரணம் இதுதானா? பாரு துர்கா! உனக்கேத் தெரியும். நான் பேங்க்ல லோன் கேட்டிருக்கிற விஷயம். வைத்திகிட்டே பணம் வாங்கற ஐடியா எனக்கிருந்திருந்தா... நான் ஏன் லோன் போடணும்? இந்த விஷயம் கூட வைத்திக்கு உன் மூலமாதான் தெரிஞ்சிருக்கு. இதுல என் தப்பு எங்கே துர்கா! வைத்தி ஒரு சிவியர் ஹார்ட் பேஷண்ட்! அவரால சின்ன ஏமாற்றத்தைக்கூட இனிமே தாங்கிக்க முடியாது. இன்னைக்கு ஹாஸ்பிடலுக்கு வந்து என்னை அந்நியனா நினைச்சு ஒதுக்கி வைக்கறீங்களே குமார். நான் வேற... நீங்க வேறயான்னு அழும்போது நான் என்ன செய்ய முடியும்? அவர் தந்த ஒரு கோடியை விட... அவரோட உடலும், உயிரும் பெரிசுன்னு நான் நினைக்கிறேன். அந்த செக்கை இப்பக்கூட திருப்பித் தர நான் ரெடி. கொடுத்துடலாமா?''

''தெரியலேங்க... செக்கைத் திருப்பிக் கொடுத்தா வைத்தியோட ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு எனக்குத் தெரியலே!''

''உன் மனசைப் போட்டு ரொம்பவும் குழப்பிக்காதே! படுத்துத் தூங்கு!''

''ஏங்க...''

''என்ன துர்கா?''

''இன்னும் எவ்வளவு நாளைக்கு இதெல்லாம்?''

''எதெல்லாம்?''

''வைத்தி வீட்டுக்குப் போறது...''

''ஏன் துர்கா? வைத்தி உயிரோட நிம்மதியோட வாழணும்னு உனக்கு ஆசையில்லையா?''

''வைத்தின்னு மட்டுமில்லே. எல்லாருமே நீண்ட ஆயுளோட நிம்மதியா வாழணும்ன்னுதான் ஆசைப்படறேன். ஆனா, ஆனா... என் நிம்மதியெல்லாம் காணாமப் போயிடுச்சி. அம்மா, அம்மான்னு என் பின்னாலேயே சுத்திக்கிட்டிருந்த முகேஷ்... இன்னைக்கு என்னைவிட்டு தூரமா விலகிப் போயிட்டான். உங்கக்கா என்மேல எவ்வளவு பாசமா இருந்தாங்க! ஆனா, அத்தனையும் தலைகீழா மாறிப் போச்சு. என்னைக் கண்டாலே வெறுப்பா இருக்கு அவங்களுக்கு!'' குரல் தழுதழுத்தது.

ரத்னகுமார் அவள் முதுகை ஆதரவாய் தடவிக் கொடுத்தார்.

''நாம ஊருக்காகவோ, உலகத்துக்காகவோ வாழலே துர்கா! எல்லாரையும் ஒரு நேரத்திலே திருப்தி படுத்தறதுங்கறது ரொம்ப கஷ்டம்! நீ ஏத்துக்கிட்டிருக்கிற பொறுப்பு மகத்துவமானது. அதைப் புரிஞ்சுக்காதவங்களைப் பத்திக் கவலைப்படாதே! உன் புருஷன் நான் உன்னை முழுசா புரிஞ்சுக்கிட்டாச்சு. இதைவிட வேறென்ன வேணும்? மத்தவங்களும் கூடிய சீக்கிரம் புரிஞ்சுப்பாங்க! டோன்ட் ஒர்ரி மை டியர்!'' என்றவர் அவள் நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டார்.

## 5

அமிர்தம் திரைச்சீலைகளைக் கழற்றி புதிதாய் மாட்டிக் கொண்டிருந்தாள். டேபிள், டி.வி. என்று இண்டு இடுக்கு விடாமல் சுத்தப் படுத்திக் கொண்டிருந்தாள்.

மறுநாள் ரத்னகுமார் - துர்கா தம்பதியினரின் திருமண நாள்.

அமிர்தம் கிச்சன் வேலையெல்லாம் முடித்துவிட்டு கைகளைத் துடைத்தபடி வெளியே வந்தாள்.

''ரத்னா!''



''என்னக்கா?'' படித்துக் கொண்டிருந்த ஹிண்டுவை தாழ்த்தி முகம் காட்டினார்.

''இன்னைக்கு அரை நாள் லீவு போட்டுட்டு வந்தது நல்லதாப் போச்சு.''

''என்ன சொல்றே?''

''டிரைவரும் இன்னைக்கு லீவு போட்டுட்டான். நாளைக்கு இரண்டு, மூணு வகை இனிப்பு செய்ய சொன்னியே! அதுக்கு வேண்டிய பொருளெல்லாம் வாங்கணும். கடைக்குப் போகணும். என்னை நீயே கூட்டிக்கிட்டுப் போ!''

''கடைக்கா? எனக்கு அவ்வளவு பொறுமையில்லே! நீயே ஆட்டோவில போய்ட்டு வா!''

''ஏன் நானெல்லாம் கார்ல போகக்கூடாதா? அதுக்குக் கூட எனக்கு கொடுப்பினை இல்லையா?''

''அடடா... உடனே புலம்ப ஆரம்பிச்சிடாதே! நான் வீட்லே இருக்கிறதே அபூர்வம். இருக்கிற கொஞ்ச நேரத்தை ரிலாக்ஸ்டா பொழுதைப் போக்க விடறியா?''

''இதெல்லாம் உன் பொண்டாட்டி செய்ய வேண்டிய வேலை! நான் செய்யறேன். அதுக்காகவாவது...''

''போதும்... போதும் ஆரம்பிச்சிடாதே! உன்னை நானே கார்ல கூட்டிக்கிட்டுப் போறேன். போதுமா?''

''ஆமா... பொண்டாட்டிய ஒண்ணும் சொல்லக்கூடாது. இவனுக்கு!''

''என்ன... என்ன முணுமுணுப்பு?''

''ஒண்ணுமில்லே... என்னென்ன வாங்கலாம்னு யோசிச்சிட்டிருந்தேன்!'' அமிர்தம் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

*

அந்த பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் முன் நிறுத்தி அமிர்தத்தை இறக்கிவிட்டு காரை பார்க்கிங் செய்யும் இடத்தில் கொண்டு போய் நிறுத்தினார் ரத்னகுமார்.

மிகப்பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் அது! அங்கு கிடைக்காதப் பொருளே இல்லை. ஸ்க்ரூ, ஆணியிலிருந்து நாய்க்குட்டிகள் வரை விற்றுக் கொண்டிருந்தார்கள். தரமான பொருட்களுக்கு உத்தரவாத முள்ள இடம். அதனால் எப்போதும் கூட்டம் நெருக்கும்.

தேவையான பொருட்கள் பற்றிய லிஸ்டை சேல்ஸ் கேர்ளிடம் ஒப்படைத்துவிட்டு, துணிக்கடைப் பக்கம் நகர்ந்தாள் அமிர்தம்.

''துணிக்கடைக்குள்ளே நுழைஞ்சிட்டியா? இன்னைக்குள்ளே வீட்டிற்குக் கிளம்ப முடியுமா?'' என்றார் கிண்டலாய் ரத்னகுமார்.

''பண்டிகையெல்லாம் வருது ரத்னா. என் பொண்ணுங்களுக்கு ரெண்டு புடவை வாங்கணும்.''

''ரெண்டென்ன? நாலு புடவை எடுத்துக்கக் கூடவே உனக்கும் தேவையானதை எடுத்துக்க...''

''சரி! அப்படியே துர்காவுக்கும் எடுக்கவா?''

''வேணாங்கா! அவளோட டேஸ்ட் எனக்குத்தான் தெரியும். நானே செலக்ட் பண்ணிக்கறேன்'' என்றபடி கிரேப் சில்க் செக்ஷனுக்குள் நுழைந்தார்.

விற்பனைப்பெண் பலவித நிறங்களில் அவருக்கு எடுத்துக் காட்டினாள்.

அதில் கிளறி சலித்து மெரூன் நிற புடவை ஒன்றை தேர்வு செய்தார்.

''இதையே பேக் பண்ணுங்க...''

''துர்கா... உனக்கு இதுதான் ரொம்பப் பொருத்தமா இருக்கு...'' வைத்தீஸ்வரனின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் ரத்ன குமார்.



சற்று தள்ளி வைத்தீஸ்வரனும், துர்காவும் நின்றிருந்தனர். ஒரு புடவையை அவள் தோளில் போட்டு மேட்ச் பார்த்துக் கொண்டிருந்தார்.

துர்கா முகத்தில் மெல்லிய புன்னகை இழையோட ''இதுவே போதும் வைத்தி'' என்றாள்.

அந்தக் காட்சி... இதுவரை ஏற்படுத்தாத ஏதோ ஒரு பாதிப்பை ரத்னகுமாரிடம் ஏற்படுத்தியது.

''இதையே எடுத்துக்கறோம். அந்தத் துணிகளோட சேர்த்து இதையும் பேக் பண்ணி பில் போட்ருங்க!'' என்று கூறிவிட்டு திரும்பிய வைத்தீஸ்வரன் ரத்னகுமாரை பார்த்துவிட்டார்.

''வாட் எ சர்ப்ரைஸ்? நீங்க எங்கே இங்கே?''

அங்கு கணவனை எதிர்பார்க்காத துர்காவும் கூட சங்கடத்தோடு பார்த்தாள்.

''அக்காவோட ஷாப்பிங் வந்தேன். நாளைக்கு எங்க...''

''தெரியும்... தெரியும். நாங்களும் அதுக்காகத்தான் வந்தோம். உங்க ரெண்டு பேருக்கும் டிரஸ் எடுக்கத்தான் இங்கே வந்தோம். ஆச்சர்யம் பாருங்க... நீங்களும் வந்திருக்கீங்க!'' வைத்தி குழந்தையின் குதூகலத் தோடு கூறிக் கொண்டிருந்தார்.

இந்தக் காட்சி அமிர்தம் கண்களிலும் படாமலில்லை. கண்களில் வேதனையும், வெறுப்புமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரத்னகுமாருக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

''என்ன குமார் ஒண்ணுமே பேசமாட்டேங்கறீங்க?''

''நீங்க சொன்ன மாதிரி ஷாக்தான்! ஆமா, எதுக்கு டிரஸ்ஸெல்லாம் எங்களுக்கு எடுக்கறீங்க? இப்படி ஷாப்பிங். அது இதுன்னு அலையாம ரெஸ்ட் எடுங்க வைத்தி!''

''ஆபீஸ்க்கும் போக வேணாம்னுட்டீங்க வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறது கஷ்டமாயிருக்குது. அட்லீஸ்ட் உங்க வெட்டிங்

ஆன்னிவர்சரியை காரணம் காட்டியாவது வெளியே வர்றேனே! ஆமா, என்னை நீங்க இன்வைட் பண்ணவே இல்லையே... ஏன் நான் இந்த ஃபங்ஷன்ல கலந்துக்கக் கூடாதா?''

''இல்லே வைத்தி! நாங்க இதை கிராண்டா செலிபரேட் பண்றதில்லை. சிம்பிளா, கோவிலுக்குப் போய்ட்டு வந்துடறதோட சரி.''

''அப்ப... நான் உங்களுக்க பார்ட்டி தரட்டுமா?''

''அதை காரணம் காட்டி நீங்க கொலஸ்ட்ரால் பொருட்களை சாப்பிட்டுடுவீங்க. அதெல்லாம் ஒண்ணும் வேணாம்! உங்க ப்ளெஸ்ஸிங் ஒண்ணே போதும் வைத்தி!''

''அது எப்பவும் உண்டு! எங்கிட்டேயிருந்து எந்த பரிசையும் வாங்கிச் சங்கடப்படறீங்க குமார். ஆனால் உங்ளுக்கு மிகப்பெரிய பரிசொன்றை வைத்திருக்கிறேன். அதை நேரம் வரும்போது தருவேன்.''

''அதெல்லாம் எதுவும் வேண்டாம் வைத்தி!''

''நீங்க மறுத்தாலும் நர்ஸ் விடப்போறதில்லே. ஓகே, கிளம்பலாமா?''

''சரி, நாங்க கிளம்பறோம்'' என்று கைகூப்பிய ரத்னகுமார் மனைவியைப் பார்த்தார்.

''நானும் உங்களோட வர்றேன்'' என்றாள்.

''வேண்டாம். நீ வைத்தியோட கிளம்பு... அப்ப நாங்க வர்றோம் வைத்தி!'' என்றவர் அமிர்தத்தோடு கிளம்பினார்.

துர்காவின் இதயத்தினுள் ரத்தம் வழிந்தது.

''நாமும் கிளம்புவோமா?'' வைத்தி அழைக்கவும் அவரைப் பின் தொடர்ந்தாள் துர்கா

*

''நாக்கைப் பிடுங்கிக்கலாம் போலிருக்கு ரத்னா! நீ தாலி ட்டிய பொண்டாட்டி. அந்நிய ஆம்பளையோட கடைக்கு வந்திருக்கா! அவன்



இவளுக்கு. புடவை வாங்கித் தர்றானாம். என்னப்பா இதெல்லாம்? பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க தெரியுமா?''

''இங்கே பாருக்கா! எனக்கு துர்காவைப் பத்தியும் நல்லாத் தெரியும். வைத்தீஸ்வரனைப் பத்தியும் நல்லாத் தெரியும் நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லே! சொல்லப் போனா... நான்தான் துர்காவை வற்புறுத்தி அங்கே அனுப்பி வச்சேன்!''

''எந்த பைத்தியக்காரன்டா இப்படியொரு காரியம் பண்ணுவான்? உன்னை மாதிரி எல்லா டாக்டரும் நினைக்க ஆரம்பிச்சிட்டா... எல்லாருடைய பொண்டாட்டிகளும் நோயாளிங்க வீட்லதான் இருக்கணும். உன் மனசை மாதிரி அந்த கடங்காரன் மனசும் வெள்ளையா இருக்கும்னு நம்பறியா? இந்தக் காலத்திலே பத்து ரூபான்னாக் கூட பக்கத்து வீட்டுக்காரனை நம்பி ஒப்படைக்க மாட்டேங்கறாங்க. நீ கட்டின மனைவியை எவனையோ நம்பி ஒப்படைச்சிருக்கிறே...''

''இதோ பாருக்கா! என் கோபத்தைக் கிளறாதே! நான் என் பொண்டாட்டிய ஒண்ணும் அடகு வைக்கலே. சில விஷயங்களை, உணர்வுகளை வார்த்தைகளால சொல்லிப் புரிய வைக்க முடியாது. நான் பைத்தியக்காரன். முட்டாள்னு நினைச்சா... பரவாயில்லை! ஆனா, நான் எவ்வளவு பெரிய புத்திசாலின்னு இன்னும் கொஞ்ச நாள்ல புரிஞ்சுப்ப! தயவு செய்து அதுவரைக்கும் வாயை கொஞ்சம் மூடிக்க!''

''ஆமா... உன் புத்திசாலித்தனத்தால... ஒரே பிள்ளையோட வெறுப்பை சம்பாதிச்சிட்டே! அவன் வாயை எப்படி மூடப்போறே?'' அமிர்தம் விடுவதாயில்லை.

''இத்தனை கஷ்டமும் அவனுக்காகத்தான்! ஆபரேஷன் பண்ணும் போது வலிக்கத்தான் செய்யும்! காயம் ஆறிட்டா... வலியெல்லாம் தன்னாலே மறைஞ்சு போயிடும். நீ போய் ஆக வேண்டிய காரியத்தை கவனி!'' என்று அந்த பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

''ஆறு மணிக்கு வீட்டிற்கு வந்த துர்காவின் முகம் களையிழந்திருந்தது. கை நிறைய வைத்தி வாங்கித் தந்திருந்த துணிகள் அடங்கிய பெட்டிகள்.

யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்த ரத்னகுமார் இவளைப் பார்த்ததும் விரைவில் பேசி வைத்து விட்டார். அவர் அருகே வந்தமர்ந்த துர்காவின் கண்கள் கண்ணீரில் பளபளத்தது.

''ஏய்... என்னம்மா இது?'' பதறிவிட்டார் ரத்னகுமார்.

''ஸாரிங்க! நான் எவ்வளவோ சொல்லியும் அவர் கேக்கலே... அதனால்தான் கடைக்கு...''

''ஷ்... நான் அதைப் பத்தி ஏதும் கேட்டேனா? நீ இன்னும் என்னைப் பத்தி புரிஞ்சுக்கலியேன்னுதான் வருத்தமாயிருக்கு'' என்றார் தன்னுள் எழுந்த ஆதங்கத்தை மறைத்து.

''அப்ப... அப்ப... உங்களுக்கு என்மேல வருத்தமோ, கோபமோ எதுவுமே இல்லையா?'' நம்பாமல் பார்த்தாள்.

''ஒண்ணே ஒண்ணுதான் இருக்கு!''

''............''

''உன்மேல நான் கொள்ளை கொள்ளையா வச்சிருக்கிற காதல்!''

''என்னங்க நீங்க?'' என்றபடி வெட்கப்பட்டு குனிந்து கொண்டாள்.

''உன்னைப் பார்த்தா இருபத்தஞ்சு வயசு பிள்ளைக்கு அம்மாக்காரின்னு யாராச்சும் சொல்லுவாங்களா? முதல் முதலா உன்னைப் பார்த்தப்ப எப்படி இருந்தியோ... அதே மாதிரிதான் இப்பவும் இருக்கே! ஹூம்... நான்தான் கிழவனாயிட்டேன்!''

''யார் சொன்னது அப்படின்னு?''

''அட... எவ்வளவு கோபம் பாரேன்!'' ரத்னகுமார் சீண்டவும்... துர்கா நாணத்தோடு அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''துர்கா!''



''ம்...''

''நாளைக்கு நான் லீவு போட்டுடறேன். நீயும் நாளைக்கு முழுக்க என்னோடவே இருக்கணும்னு ஆசைப்படறேன்!''

''என் ஆசையும் அதாங்க!'' என்றவள் அவர் கையை எடுத்து தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டாள்.

## 6

ஆரஞ்சும், நீலமுமாய் மேகத்திற்கு இயற்கை வர்ணம் பூசிக் கொண்டிருந்த மாலைப்பொழுது.

முகேஷ் அந்த பங்களாவினுள் நுழைந்தான்.

இவன் வருகைக்காக காத்திருந்த தீபிகா ஓடோடி வந்தாள்.

''வாங்க முகேஷ்!''

''ரொம்ப டென்ஷனா இருக்கு தீபி!''

''எல்லாம் நல்லபடிதான் நடக்கும். வாங்க முகேஷ்!''

உள்ளே அழைத்துச் சென்றாள்.

அழகான, அடக்கமான, சுத்தமான வீடு! ஹாலிலேயே தீபிகாவின் பெற்றோர் அமர்ந்திருந்தனர். இவன் வரப் போவதை முன்பே சொல்லியிருந்ததால் அவனுக்காக எதிர்பார்த்து அமர்ந்திருந்தனர்.

அவர்களைப் பார்த்ததும் முகேஷிற்கு நாடித்துடிப்பு அதிகமாகிப் போனது.

கைகூப்பி வணக்கம் சொன்னான்.

''வாங்க... உக்காருங்க முகேஷ்!'' என்றார் தீபிகாவின் தந்தை சுந்தரேசன்.

அமர்ந்தான்.

"என்ன சாப்பிடறீங்க? டீ ஆர் காபி?"

"டீ..."

"வெரிகுட்! தீபி... போய் எடுத்திட்டு வாம்மா!"

அவள் போனதும் பேச்சை ஆரம்பித்தார்.

"முகேஷ்... உங்களைப்பத்தி தீபிகா எல்லாமே சொன்னா. காதல்ங்கற வார்த்தையைக் கேட்டாலே ஃபார்மாலிட்டிக்காக, கௌரவங்கற பேரால தாம் தூம்னு குதிக்கிற சராசரி அப்பா, அம்மா நாங்க இல்லே! தீபிகா புத்திசாலியான பொண்ணு. உலக அறிவு நிறையவே இருக்கு. அதனால அவ தப்பால ஒரு நபரை லைஃப் பார்ட்னரா தேர்ந்தெடுக்க சான்ஸே இல்லை. இப்ப உங்களை நேர்லேயும் பார்த்துட்டேன். என் பொண்ணுக்கு ஜோடி பொருத்தம் கச்சிதமா அமைஞ்சிருக்கு. ஐ லைக் யூ!"

"தாங்க்யூ... தாங்க்யூ சார்!" உச்சி குளிர்ந்து போனான் முகேஷ்.

"ஆனா முகேஷ்..."

"சொல்லுங்க..."

"உங்கப்பா டாக்டர் ரத்னகுமார்தானே...?"

"ஆமாம் சார்!"

"உங்கம்மா என்ன பண்றாங்க?"

"அது... வந்து ஹவுஸ் ஒய்ஃப்!"

"உங்க வீடு எங்கே இருக்கு?"

"தேனாம்பேட்டை!"

"அப்ப பெசன்ட் நகர்ல இருக்கிற பங்களா யாரோடது?"

"அது எங்க பேமிலி ப்ரண்டோடது!"

"இண்டஸ்ட்ரியலிஸ்ட் வைத்தீஸ்வரனோட பங்களா அது. சரியா?"



"ஆமாம்!" என்றான் முகேஷ்.

"இதோ பாருங்க முகேஷ். நான் இவ்வளவு விளக்கமா இதைப் பத்தியெல்லாம் பேசறது வச்சே... நான் என்ன சொல்ல வர்றேன்னு நீங்க புரிஞ்சுப்பீங்கன்னு நம்பறேன். ஒரு ஃபேமிலி ப்ரண்டோட வீட்டுக்கு பண்டிகை நல்ல நாள், கெட்ட நாள்னு போகலாம். எப்பவாவது இல்லே மாசத்துக்கு ஒரு முறை போகலாம். ஆனா, உங்கம்மா தினசரி அந்த வீட்டுக்குப் போறாங்க. அந்த வீட்லே பெண்கள் யாருமில்லை. வைத்தீஸ்வரனும் அன்மேரீட் பர்சன். ஸோ அவருக்கும் உங்கம்மாவுக்கும் என்ன உறவுன்னு இந்த ஊர்ல பேசிக்கறாங்க!"

"............" முகேஷ் கூனிக்குறுகிப் போய்விட்டான்.

"அதனால உங்க காதலுக்கு நான் தடை விதிப்பேன் என்றெல்லாம் கற்பனை பண்ணிக்காதீங்க! உங்க கல்யாணத்தை நானே நடத்தி வைக்கிறேன். ஆனா, அந்த கல்யாணத்துக்கு உங்க வீட்டைச் சேர்ந்தவங்க யாரும் வரக்கூடாது. தீபிகா உங்க வீட்டுக்கு வரமாட்டா! நாங்க ஃபார்மாலிட்டிஸ் பார்க்கலேன்னாலும் பிரஸ்டீஜ் பார்க்கறவங்க! கவுரவமில்லாத வாழ்க்கை செத்த பிண்டத்துக்கு சமம். எங்க குடும்பத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியலேன்னாலும், தைரியமா வெளியே நாலு பேரென்ன, நானூறு பேர்கிட்டே விசாரிக்கலாம். விசாரிச்சிட்டு உங்க முடிவைச் சொல்லலாம். ஒண்ணும் அவசரமில்லே. டேக் யுவர் ஒன் டைம் மிஸ்டர் முகேஷ்."

முகேஷிற்கு அவர் மீது எந்தவிதக் கோபமும் ஏற்படவில்லை. அவர் சொல்வதில் தவறென்ன இருக்கிறது? அவர் பெண்ணை பெற்றவர் கவுரவமான குடும்பம். தன் பெண்ணை தன்னையொத்த கவுரவமான இடத்தில்தானே திருமணம் செய்து கொடுப்பார்? என் குடும்பம் கவுரவமான குடும்பம் என்று சொல்லிக் கொள்ள முடியுமா என்னால்? என்னாலேயே என் வீட்டைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியவில்லை. யாரந்த வைத்தி? அந்த ஆமை எப்போது வீட்டில் வந்து புகுந்ததோ, அன்றோடு சந்தோஷம் அத்தனையும் போய்விட்டது. அப்பா எப்படி

இதற்கு அனுமதிக்கிறார்? புரியவில்லை. வாயைத் திறந்து கேட்கக்கூட முடியவில்லை. அது எனக்குத்தான் அசிங்கம். இது பெரியவர்களுக்கு புரியவில்லையே! இவர்கள் மனிதர்களில் சேர்க்கக்கூடாத ஜென்மம்' மனதிற்குள் பொருமினான்.

''நான் வர்றேன் சார்!'' என்று எழுந்து கொண்டான்.

''இருங்க... டீ சாப்பிட்டுட்டுப் போகலாம்!''

''பரவாயில்லை சார்! அடுத்தமுறை வரும்போது விருந்தே சாப்பிடறேன்...'' என்று கூறிவிட்டுக் கிளம்பினான்.

*

வீடே இரண்டு பட்டுப் போனது.

நிஜமாகவா?

வந்த செய்தி உண்மையானதுதானா?

ரத்னகுமார் இதை எதிர்பார்க்கவில்லை. அப்படியே சோபாவில் சிலையாய் அமர்ந்து விட்டார்.

துர்கா அதிர்ச்சியின் உச்சத்தில் இருந்தாள்.

அமிர்தம்தான் அலறி துடித்துக் கொண்டிருந்தாள்.

ஊமை மாதிரி இருந்த பிள்ளை இப்படியொரு காரியம் பண்ணிடுச்சே! அவன் மனசுல இருந்த நெருப்பையெல்லாம் இப்படி சொந்த பந்தத்தை எரிச்சு சாம்பலாக்கிட்டு, உங்க உறவே வேணாம்னு கல்யாணம் பண்ணிக்கிட்டான். இன்னைக்கு பெத்த பிள்ளை ஒதுக்கி வைச்சுட்டான். நாளைக்கு சொந்த பந்தமும் நம்மளை ஒதுக்கி வைக்காதுன்னு என்ன நிச்சயம்? கடவுளே... இந்த வீட்லே இன்னும் என்னென்னவெல்லாம் நடக்கப் போகுதோ?''

''அக்கா!'' என்று அதட்டினார் ரத்னகுமார்.

''இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசறதாயிருந்தா... இப்பவே இந்த வீட்டை விட்டு கிளம்பு! முகேஷ் வருவான். உண்மையான அன்பு இந்த




வெள்ளைத் தழும்புகள்

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தல் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி, தோலின் அசல் நிறத்தை அடைந்துவிடுகிறது. ஆயிரக்கணக்கானோர் பயன் அடைந்துள்ளனர். நீங்களும் நோயில் முழு விவரத்தையும் எழுதி ஒருமுறை அவசியம் பரிச்சித்து பார்க்கவும். மருந்தின் விலை 910/- பெற விம்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் புத்தம் புதிய கண்டுபிடிப்பு

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை, மெலிவு, வளைவு முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்ப்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடு நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர்!

வைத்தியர் N. ரமேஷ் நாயுடு

பாக்கம் கிராமம் & அஞ்சல், குடியாத்தம், வேலூர் மாவட்டம் 632 602

செல்: 9865415652, 9994486669

வீட்டுக்கே அவனை கூட்டிட்டு வந்து சேர்க்கும். இளரத்தம். எடுக்கக் கூடாத முடிவை எடுக்க வச்சிட்டது. எங்ககிட்டே சொல்லியிருந்தா. அந்தப் பொண்ணையே கட்டிக்கடான்னு ஆசீர்வாதம் பண்ணி பிரம்மாண்டமா கல்யாணம் பண்ணியிருக்கலாம். துர்கா, என்ன ஆகிப்போச்சுன்னு இப்படி இடிஞ்சிப் போய் உட்கார்ந்துட்டே? எந்திரி நடக்க வேண்டிய காரியத்தை கவனி. நாம நல்லதுதான் செய்றோம். அது மத்தவங்க கண்ணுக்கு தப்பா தெரியுதுங்கறதுக்காக, நல்லதே செய்யக் கூடாதுன்னு கையை கட்டிக்கிட்டு சும்மா இருந்துடணுமா என்ன? எந்திரிம்மா... குளிச்சிட்டு கிளம்பு!''

''எப்படிங்க... நமக்குத் தெரியாம கல்யாணம் பண்ணிக்கிட்டு...'' விசும்பினாள் துர்கா.

''அப்படியும் தன்னோட சினேகிதன்கிட்டே விஷயத்தைச் சொல்லி அனுப்பியிருக்கானில்லையா? அந்த மரியாதையாவது மனசுல இருக்கே! வீட்டோட மாப்பிள்ளையா போயிருக்கான். நம்ம பிள்ளை. அது மட்டும் அவனுக்கு கவுரவமா தெரியுது போலிருக்கு. எங்கிருந் தாலும் நல்லாருக்கட்டும்! அக்கா, போதும் அழறதை நிறுத்து!''

அமிர்தம் அழுகையை அடக்கிக் கொண்டு சமையலறைக்குள் போய்விட்டாள்.

''வீட்லே பொம்மனாட்டி சரியில்லேன்னா... எதுவுமே சரியா வராது. பத்தினி படி தாண்டிட்டா... வீட்டில் உள்ள அத்தனையும் படி தாண்டித் தான் போகும். ஹூம்... இவனுக்கு என்ன சொல்லி புரிய வைக்கிறது. பாவி மகன், கடைசியில இந்த அத்தையைக் கூட ஒதுக்கி வச்சிட் டானே!'' அமிர்தம் புலம்பிக் கொண்டிருந்தாள்.

*

துர்கா முகேஷின் திருமண விஷயத்தை வைத்தீஸ்வரன் காதிற்கு போகவிடாமல் எச்சரிக்கையாக இருந்தான். இது ரத்னகுமாரின்



ஆலோசனையும் கூட! முகேஷின் இந்த திடீர் நடவடிக்கை எளிதில் அவருக்குப் புரிய வைத்துவிடும். இந்த பிரச்னைக்கு முழு முதற் காரணம் தான்தான் என்று! அந்த விஷயத்தை ஜீரணித்துக் கொள்ளும் சக்தி நிச்சயம் அவருக்கில்லை.

அதனால் தன் முகவாட்டத்தைக்கூட் சாமர்த்தியமாய் மறைத்து விட்டாள் துர்கா.

ஆனாலும், வைத்தீஸ்வரனின் பார்வையில் துர்காவின் மாற்றத்தை மறைக்க முடியவில்லை.

''துர்கா...''

''..........''

காய்கறி நறுக்கியவள் உணர்விற்கு அவர் குரல் எட்டவில்லை.

''துர்கா!''

''ஆ... எ... என்ன வைத்தி?'' திடுக்கிட்டாள்.

''உடம்புக்கு முடியலியா?''

''எனக்கா? இல்லையே!''

''பின்னே ஏன் ஒரு மாதிரியா இருக்கே?''

''நா... நானா? இ... இல்லையே!''

''இல்லை துர்கா! உன் முகத்துல ஏதோ ஒரு மாற்றம். வாட்டம் தெரியுது!''

''சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லே'' என்றபடி சிரித்தாள்.

''ம்ஹூம்... இது நார்மலான சிரிப்பில்லை. ஏதோ மிஸ்ஸிங். என்ன அது?'' அவளை உற்றுப் பார்த்தவர் முகம் மலர்ந்தது.

''கண்டுபிடிச்சிட்டேன்!''

''என்ன...?''

"எப்பவும் தலைநிறைய பூச்சூடுவியே! இன்னைக்கு பூ மிஸ்ஸிங்! ஏன் துர்கா பூவை வைக்கக் கூடவா மறந்துடுவே! உன்னை இப்படி பார்க்க சகிக்கலே! லேசா நெஞ்சு கூட வலிக்குது!"

"ஐய்யோ வைத்தி... டாக்டருக்கு போன் பண்ணவா?" நிஜமாகவே பதறிப் போனாள் துர்கா.

பலமாய் சிரித்து விட்டார் வைத்தீஸ்வரன்.

"பயந்துட்டியா? அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே... பயப்படாதே! என் வேதனை, சந்தோஷம் அத்தனையும் உன்னையும், ரத்ன குமாரையும் பாதிக்குது பார். அதைப் பார்த்துதான் ரொம்ப சந்தோஷப் படறேன் துர்கா! ஆண்டவன் எனக்கு நல்ல வாழ்க்கையை தரலே! ஆனா, நல்ல நண்பர்களா உங்க ரெண்டு பேரையும் எனக்குக் கொடுத் திருக்கான். இதுக்காக நான் உயிரை தந்தாக்கூட ஈடாகாது."

"வைத்தி... ப்ளீஸ்... இப்படியெல்லாம் பேசக்கூடாது!" கடிந்து கொண்டாள்.

"சரி... சரி... இனி பேச மாட்டேன். ஆனா, நீயும் இனி பூ வச்சுக்காம வரக்கூடாது. பூவில்லாம இனி நான் உன்னைப் பார்க்கவே கூடாது. சரியா? இதுதான் ஃபர்ஸ்ட் அண்ட் லாஸ்ட் வார்னிங். ஒகே?" செல்லமாய் எச்சரித்தார்.

"சரி" என்றாள் சிரித்தபடி.

"சரின்னுட்டு மசமசன்னு நின்னுட்டேயிருந்தா எப்படி? பூஜை யறையிலே மல்லிச்சரம் இருக்குப் பாரு. முதல்லே எடுத்து வச்சுக்கிட்டு வா!"

"சரி..." என்று அடுத்த நிமிஷமே சூடிக் கொண்டு வந்தாள்.

"உன்னை எப்பவும் இதே கோலத்திலே தான் நான் பார்க்கணும் துர்கா!" நெகிழ்ந்து போய் வாயார வாழ்த்தினார்.

*



துர்கா வீட்டிற்கு வருமுன்பே ரத்னகுமார் திரும்பி விட்டிருந் தார்.

'அவள் வரும்போது வாசலில்தான் நின்றிருந்தார். அவளைப் பார்த்த ரத்னகுமார் புருவம் சுருக்கினார்.

காலையில் ஏற்பட்ட கசப்பான சம்பவத்தால் பூவை வேண்டாம் என்று சாமி படத்திற்கு போட்டுவிட்டுப் போனது நன்றாக நினைவில் இருந்தது.

இந்தப் பூ ஏது?

அவருக்கு யூகிக்க அதிக நேரம் தேவைப்படவில்லை. ஏதோ ஒன்று மனதை நெருடியது.

## 7

துர்கா கோவில் பிரசாதத்தை வைத்தீஸ்வரன் முன் நீட்டினாள்.

"நூறு வருஷம் நோய் நொடியில்லாம நீங்க வாழணும் வைத்தி!" துர்கா வாழ்த்தினாள்.

விபூதியும், குங்குமமும் எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டவர். "உனக்கு பேராசை துர்கா! இது ரெண்டும் பொய்யாகப் போகுது. என் நோய் தீராதது. அதனால் ஆயுளும் இதோ அதோனு முடிவை நெருங் கிட்டு இருக்கறப்ப..."

"நல்ல நாளும் அதுவுமா ஏன் வைத்தி இப்படியெல்லாம் பேசறீங்க? வேதனையுடன் கேட்டாள்.

"என்ன ஸ்வீட் பண்ணட்டும்?"

''நான் என் பிறந்தநாளையெல்லாம் கொண்டாடறதில்லே துர்கா! கோவிலுக்குப் போறதோட சரி! அதுவும் இன்னைக்கு திருப்போரூர் போகணும்னு ஆசையாயிருக்கு. என் கூட நீயும் வரணும் துர்கா!''

''நானா?'' சங்கடமாய் கேட்டாள்.

''ஆமாம்!''

''வேண்டாம் வைத்தி! டிராவல் உங்களுக்கு ஒத்துக்காது!''

''எல்லாத்துக்கும் மனசுதானே காரணம்? ஒண்ணும் ஆகாது. கிளம்பு!''

''அவர்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுடறேனே...''

''கண்டிப்பா... வேணும்னா நானே டாக்டர்கிட்டே பர்மிஷன் வாங்கிடறேன்.''

''பரவாயில்லை. நானே பேசிடறேன்.''

மருத்துவமனைக்கு போன் செய்தாள்.

''இல்லைங்க மேடம்! டாக்டர் ஒரு ஆபரேஷன்ல இருக்கார். வெளியே வர எப்படியும் மூணு மணி நேரம் ஆகும். மேஜர் ஆபரேஷன்!'' நர்ஸ் ஒருத்தி தயவாய் சொல்ல... தவித்தாள் துர்கா.

''சரி... நான் போன் பண்ணினதா சொல்லிடுங்க!'' என்று வைத்துவிட்டாள்.

''கிளம்புங்க! டாக்டர் ஆபரேஷன் தியேட்டர்ல இருக்கார். பேச முடியலை. வந்து சொல்லிக்கலாம். அஞ்சு மணிக்குள்ளே திரும்பிடலாம் இல்லையா?''

''மூன்று மணிக்கே வந்திடலாம்!'' குழந்தையின் குதூகலத்தோடு புறப்பட்டார்.

*

ஆபரேஷனை முடிக்க நான்கு மணி நேரம் ஆகிவிட்டது. ரத்னகுமார் வெகுவாய் தளர்ந்து போனார். தலைவலி மண்டையைப் பிளப்பது போல் இருந்தது. உடம்பில் சூடேறத் தொடங்கியது.



நர்ஸ் ஷிப்ட் மாறிவிட, துர்கா போன் பண்ணிய விஷயமே அவருக்குத் தெரியாமல் போனது.

ரத்னகுமாரின் உடம்பு ரெஸ்ட்டிற்காக ஏங்க, உடனே வீட்டிற்குப் புறப்பட்டார்.

ஜுரம் அதிகமாகி விட்டது. மாத்திரைகளைப் போட்டுக் கொண்டவர்... இப்போது துர்கா அருகில் இருந்தால் நன்றாயிருக்குமே' என்று நினைத்தார். அமிர்தமும் வீட்டில் இல்லை. மகளைப் பார்க்க ஊருக்குப் போயிருந்தாள்.

வைத்தீஸ்வரன் வீட்டிற்கு அவர் எப்போதாவது அவசியம் ஏற்பட்டால்தான் போன் செய்வார். இப்போது செய்தார்.

''இல்லையே சார்! துர்காம்மா ஐயாவோட வெளியூர் போயிருக்காங்க!'' வேலைக்காரன் பதிலளித்தான்.

இந்த பதில் அவரை இடியாய் தாக்கியது.

'வெளியூருக்கா? இது எவ்வளவு நாட்களாய் நடக்கிறது? துர்கா நீ அந்தளவு துணிந்து விட்டாயா! நான் உன்மேல் வைத்திருந்த நம்பிக்கைக்கு நீ தந்த பரிசா இது?' ரத்னகுமாரால் படுக்கக்கூட முடியவில்லை. படுக்கை முள்ளாய் உறுத்தியது.

*

கார் செங்கல்பட்டைக் கூடத் தொடவில்லை. அதற்குள் ரிப்பேராகி விட்டது.

உடனே சரி பண்ண முடியாதளவு பெரிய பிரச்னை. வைத்தீஸ்வரனின் முகம் கோபத்தில் சிவந்து விட்டது. டிரைவரை பிடிபிடியென்று பிடித்து விட்டார்.

''ராஸ்கல்... முன்னயே இதையெல்லாம் சரியாயிருக்கான்னு பார்க்க மாட்டியா? இப்ப இதை எங்கே போய் சரி பண்றது? நாங்க எப்ப கிளம்பறது? ச்சே!''

டிரைவர் தலைகுனிந்து நின்றான்.

''துர்கா... அந்த செல்போனை எடும்மா! வீட்டுக்கு போன் பண்ணி வேற கார் அனுப்பச் சொல்லலாம்!''

''அடடா...'' என்றாள் துர்கா.

''என்ன?''

''அவசரமாய் புறப்பட்டதில் செல்போனை எடுத்துவர மறந்துட்டேன்!''

வைத்தீஸ்வரன் செய்வதறியாது விழித்தார்.

''இன்னைக்கு புறப்பட்ட நேரமே சரியில்லே போலிருக்கே!'' என்று சுற்று முற்றும் நோட்டம் விட்டார். பக்கத்தில் எந்த எஸ்.டி.டி. பூத்தும் கண்களுக்குத் தென்படவில்லை.

''சரி, இறங்கு துர்கா! நாம ஏதாவது டாக்ஸி பிடிச்சி போய்ட்டு வந்திடலாம்.''

துர்கா இறங்கினாள்.

ஒரு டாக்ஸியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கிளம்பினார்கள்.

கோவிலில் கூட்டம் நெருக்கித் தள்ளியது.

அன்று ஆருத்ரா தரிசனம் வேறு! எங்கும் தலைகள்தான் தென்பட்டன.

சாமி கும்பிட்டுவிட்டு திரும்பினர். டாக்ஸி ஐந்து நிமிடம் கூட சென்றிருக்காது.

சாலை முழுக்க வண்டிகள் நிறுத்தப்பட்டு நகர விடாமல் மறியல் செய்து கொண்டிருந்தனர்.

அந்த ஏரியாவின் ஆளும் கட்சி இளைஞரணி செயலாளரை எதிர் கட்சியைச் சேர்ந்தவன் வெட்டி சாய்த்து விட்டதால்... எங்கும் களேபரமாய் இருந்தது.



கடைகளை அடித்து நொறுக்கினர். இரண்டு அரசு பேருந்துகளை தீ வைத்துக் கொளுத்தினர். போலீஸார்களும் குவிந்துவிட்டனர். வண்டிகள் அசைய முடியாத அளவிற்கு வழியை அடைத்து விட்டனர்.

''சார்... வண்டி நாளைக்கு வரை இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நகராது சார்!'' டிரைவர் கூறினான்.

''செங்கல்பட்டு வழி வேண்டாம். இப்படியே ரிவர்ஸ் எடுத்து மகாபலிபுரம் ரோடு வழியா போய்டலாமே!'' வைத்தீஸ்வரன் ஆலோசனை கூறினார்.

''போலாம்தான். பின்னால திரும்பிப் பாருங்க. ரிவர்ஸ் எடுக்க முடியுமானு?''

உண்மைதான்! டாக்ஸிக்கு பிறகு வால் பிடித்தாற்போல் வண்டிகளின் அணிவகுப்பு. இப்படி அப்படி நகரவே முடியாது.

வைத்தீஸ்வரன் செய்வதறியாது துர்காவைப் பார்த்தார்.

''இப்ப என்ன பண்றது துர்கா?''

''எனக்கும் ஒண்ணும் புரியலே வைத்தி!''

''சார்... இங்கே பக்கத்திலேயே நல்ல லாட்ஜ் ஒண்ணு இருக்கு. பேசாம அங்கே தங்கிட்டு... காலையிலே கிளம்புங்க. அதுக்குள்ளே நிலைமை சீராயிடும்!''

டிரைவர் சொன்னது போல் வேறு வழியில்லை என்பது இருவருக்கும் புரியவே செய்தது.

டிரைவர் வழிகாட்ட இறங்கி நடந்து லாட்ஜை அடைந்தனர். அங்கிருந்து ரத்னகுமாருக்கு தகவல் சொல்ல தொலைபேசியை அணுகினர். ஆனால் வரவேற்பறையில் இருந்த இளைஞர் உதட்டைப் பிதுக்கினார்.

''ஸாரி சார்! கலவரத்துல டெலிபோன் எக்ஸ்சேஞ்சில புகுந்து நாசம் பண்ணியிருக்காங்க. இந்த ஊர் முழுக்க கனெக்ஷன் கட்டாயிடுச்சி! இன்கமிங்கும் வராது. அவுட் கோயிங்கும் போகாது!''

இருவரும் நொந்து போய்விட்டனர்.

''ஸாரி துர்கா! நான் உன்னை சங்கடத்திலே மாட்டி விட்டுட்டேன்! குமார் கோபப்படுவாரோன்னு பயமா இருக்கு!'' வைத்தீஸ்வரன் ரொம்ப வருத்தத்துடன் சொன்னார்.

''அவர் புரிஞ்சுப்பார். கோபப்பட மாட்டார். மனசை போட்டுக் குழப் பிக்காம படுங்க!'' துர்கா அவருக்கு ஆறுதல் கூறினாளேயொழிய உள்ளுக்குள் உதறல் எடுக்காமலில்லை.

விடியும் வரை இருவரும் தூங்கவே இல்லை.

காலையில் நிலைமை சீரானதும் டாக்ஸியில் சென்னை நோக்கி விரைந்தனர்.

*

ரத்னகுமார் ஹாலிலேயே அமர்ந்திருந்தார்.

வேறு யாரும் இல்லாத அந்த வீடு ஹோவென வெறிச்சோடிப் போயிருந்தது. ஒரே நாளில் பத்து வயது கூடினாற் போல் தளர்ந்து போய்விட்டார்.

ஹால் கடிகாரம் எட்டு அறை அறிவித்தது.

நேற்று முழுக்க துர்கா வீடு வந்து சேரவில்லை.

ஒரு போன்கூடப் பண்ணவில்லை. நினைத்தபோதே ஆத்திரத்தில் உடம்பு குலுங்கியது.

''இருக்காது. துர்கா அப்படிப்பட்டவளில்லை. ஒரு மனம் சமாதானப் படுத்தியது.

'சின்ன மீனைப் பாட்டு பெரிய மீனைப் பிடிக்க நினைத்தாய். இதையெல்லாம் பெரிதுபடுத்தாதே! பிறகு இவ்வளவு நாள் பட்ட சிரமத்திற்கு பலனின்று போய்விடும்' இன்னொரு மனம் எச்சரித்தது.

பத்து நிமிடம் கரைந்தது. வைத்தீஸ்வரன் வீட்டு காரிலேயே வந் திறங்கினாள். இங்கிருந்து புறப்பட்டாலும் சரி. அங்கிருந்து வந்தாலும்



சரி, அவள் அந்த வீட்டு காரை பயன்படுத்த மாட்டாள். வைத்தீஸ்வரன் எவ்வளவோ வற்புறுத்தியும் மறுத்து விட்டாள். ஆனால் முதன் முதலாக இப்போது காரில் வந்திறங்குகிறாள். எல்லாமே புதிதாகத்தான் உள்ளது.

தயக்கமாய் உள்ளே வந்தாள் துர்கா!

அவள் ஏதோ கூற வாயெடுக்கும்முன் ரத்னகுமார் பேசினார்.

''குளிச்சிட்டு ஆத்துக்குள்ளே போ... துர்கா!'' மென்மையாய், மிக மிக மென்மையாய் கூறினார்.

துர்கா நெருப்புக் கம்பியில் சூடிழுத்தது போல் துடித்துப் போனாள்.

''என்ன... என்ன சொன்னீங்க?''

''ரொம்ப டயர்டா தெரியறே! குளின்னு சொன்னேன்...'' அவர் பேச்சே ஒரு மாதிரியாக வெளிப்பட... துர்கா புரிந்து கொண்டாள்.

ரத்னகுமாரின் இன்னொரு முகம் புலப்படத் தொடங்கியது. தாம்பத்தியத்தில் கோடு விழுந்தாயிற்று!

ஐயோ நான் பாட்டிற்கு அமைதியாய் குடும்பம் நடத்திக் கொண் டிருந்தேனே! இவர்தானே என்னை வைத்தி வீட்டுக்கு கையைப் பிடித்து இழுத்து செல்லாத குறையாய் அனுப்பி வைத்தார்.

ஏன்... எதற்காக...?

துர்கா குளிக்கும் தண்ணீரோடு கண்ணீரும் சேர்ந்து கரைந்தோடியது.

## 8

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு!

கும்பகோணம் ரங்கசாமி தெரு எங்குமில்லாத தெய்வீக அழகுடன் காட்சியளித்ததற்கு காரணம் துர்கா அந்த தெருவில் குடியிருந்ததுதான்.

இளமையும், இளமைக்கேற்ற வனப்புமாய் துர்கா எழிலரசியாய் இருந்தாள்.

செல்வத்திற்கும், செல்லத்திற்கும் குறைச்சலில்லை. அப்பா ஜவுளிக்கடை வைத்திருந்தார். இரண்டு அண்ணன், ஒரு அக்கா. அக்கா கௌசல்யாவை ஆர்மியில் பணிபுரிந்த கோபாலுக்கு மணமுடித்து கான்பூருக்கு அனுப்பி விட்டனர். பெரிய அண்ணன் டாக்டர். சின்ன அண்ணன் தந்தையோடு ஜவுளி வியாபாரம். கடைசி பெண் தான் துர்கா. இந்த வயதிலும் கூட அம்மா ஊட்டி விடுவாள். அவ்வளவு செல்லம். சுற்று வட்டாரத்தில் நாட்டாமை செய்பவரும் துர்காவின் தந்தைதான்.

அதே தெருவில் மூன்று வீடுகள் தள்ளிதான் வைத்தீஸ்வரன் வீடு இருந்தது.

ஓடு வேய்ந்த சிறிய வீட்டைத் தவிர வேறு சொத்து இல்லை. ஒரே ஒரு அண்ணன் மட்டுமே! விவசாயம்தான் சோறு போட்டது. விதவை தாய்! வைத்தீஸ்வரனை கஷ்டப்பட்டு கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்தாள்.

சிறு வயதிலிருந்தே துர்காவும் வைத்தியும் நண்பர்கள். காகித கப்பல் விடுவதிலிருந்து, மரப்பாச்சி பொம்மை வைத்து விளையாடுவது வரை துர்காவின் பார்ட்னர் வைத்திதான்.

அந்த நட்புதான் பருவத்தில் காடி வைத்ததும் காதலாய் மாறிப் போயிற்று! அந்த கண்ணியமான காதல் கல்லூரியில் காலடி வைத்த பிறகு வேர் விட்டு வளர்ந்தது. காதல் கல்யாணத்தில் முடிந்து விட்ட தால் அது எப்படி காவியமாகும்? இவர்கள் காதலும் தோல்வியில் முடிந்து காவியமானது.



இவர்கள் காதல் துர்கா வீட்டிற்கு தெரிய வர... முதன் முதலாய் அவள் வாழ்நாளில் அப்பா கையால் அடி வாங்கினாள். படித்தது போதும் என்ற வீட்டோடு முடக்கப்பட்டாள். அதோடு நிற்கவில்லை.

ஆள் படையுடன் துர்கா வீட்டு ஆண்கள் அத்தனை பேரும் வைத்தி வீட்டின் முன் நின்று மிரட்டினர். வசை மாறிப் பொழிந்தனர்.

''கேவலம்... ஒரு கொலைகாரப் பயலுக்குப் பிறந்த கேணப்பயல்... எங்க வீட்டுப் பொண்ணை கனவிலே கூட நினைச்சிப் பார்க்கலாமா? இனி என் வீட்டுப் பக்கம் அந்த பயலோட கண்ணு திரும்புச்சோ... அந்த கண்ணு இருக்கிற உடம்புல உசிர் இருக்காது!''

வைத்தியின் தாய் வைதேகி துடித்துப் போய்விட்டாள். அவள் கணவர் லட்சுமணன் பங்காளி சண்டையில் வீச்சரிவாளை தூக்க... அது கொலையில் வந்து முடிந்தது. அன்றே அவரும் போலீசுக்குப் பயந்து தூக்கில் தொங்கி விட்டார். செத்த பிறகும் கணவனை சந்திக்கு இழுத்து பேசும் அக்கிரமத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணமான வைத்தி மீது ஏகமாய் கோபம் வந்தது. அவன் வந்ததும் அண்ணன் ஜெயராமன் கம்பை எடுத்து விளாசி விட்டார். அப்படியும் வைத்தி வீம்பாக இருந்தான். இதயத்தில் குடியிருக்கும் துர்காவிற்கு வலிக்குமே என்று இரண்டு கைகளையும் மார்புக்குக் குறுக்காக கட்டி கவலைப்பட்டுக் கொண்டிருந்தானே தவிர, அவனுக்கு வலிக்கவில்லை.

''இனிமே அந்த வீட்டுப் பக்கம் போவியா?''

''போவேன்!''

''ராஸ்கல். இவ்வளவு நடந்த பிறகும் எவ்வளவு தைரியமா பேசறான் பாரு. இனி அந்த பொண்ணை பார்க்கக்கூடாது, பேசக்கூடாது'' ஜெயராமன் கழுத்து நரம்புகள் விடைக்க எச்சரித்தார்.

''முடியாதுண்ணா! என்னால துர்காவை பார்க்காம பேசாம இருக்க முடியாது. அவளை மறக்க முடியாது. என் உடம்பை கூறுகூறா வெட்டிப்

போட்டாலும் அத்தனை துண்டங்களும் தான் துர்கா, துர்கான்னுதான் துடிக்கும். இந்த ஜென்மத்திலே கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது துர்காவோட மட்டும்தான்! இது அந்த கடவுள் மேல சத்தியம்!'' வைத்தீஸ்வரன் முன் வைத்த காலை பின் வைக்கவில்லை.

ஜெயராமனுக்கு இதற்கு மேல் என்ன செய்வது என்று தெரிய வில்லை.

அம்மா வைதேகி கதறினாள். காலில் விழாத குறையாய் கெஞ்சினாள்.

ம்ஹூம். அசைந்து கொடுக்கவில்லை.

அதன் பிறகுதான் அவள் அந்த முடிவிற்கே வந்தாள்.

''நீ அவளை மறந்தாகணும் வைத்தி! அந்த துர்கா வேற ஒரு வீட்டு மருமகளாப் போகப்போறா! அது நிச்சயம் நடக்கத்தான் போறது. நீ நாங்க சொல்றபடி கேக்கலேன்னா நான் உயிரோட இருக்க மாட்டேன். உன்னை கஷ்டப்பட்டு வளர்த்தது எதுக்காக வைத்தி? பெத்த தாயை விட, அந்த துர்கா உனக்கு அவ்வளவு உசத்தியாப் போயிட்டாளா?''

''அவளைப் பத்திப் பேசாதே!''

''புத்திசாலித்தனமா நடந்துக்கடா! நடக்க முடியாததுக்காக, உயிரோடு எங்களை வதைக்காதே! அந்தஸ்துலயும் சரி, மத்ததுலேயும் சரி... அவங்க ரொம்ப உசரத்துல இருக்கறவங்க!''

''அதைப் பத்தி எனக்கு அக்கறையில்லே!''

மகனின் பிடிவாத குணம் கண்டு வெதும்பினாள்.

''நீ திருந்தமாட்டேடா! சத்தியமா திருந்தமாட்டே! நீ என் புள்ளையே இல்லே!'' என்று அழுதவள்... சில மணி நேரங்களில் தூக்கில் தொங்கி விட்டாள்.

இப்படி பண்ணுவாள் என்று வைத்தீஸ்வரன் சற்றும் எதிர்பார்க்க வில்லை. எச்சரிக்கிறாள் என்றுதான் நினைத்தானே தவிர, தன்னையே மாய்த்துக் கொள்ளத் துணிவாள் என்பது நினைத்தே பார்த்திராத ஒன்று!



நல்லவேளை... பிழைத்து விட்டாள்.

அதற்குள் துர்கா வீட்டிலும் அவளுக்கு திருமண ஏற்பாடுகள் நடந்தன. துர்கா காதலுக்கு இவ்வளவு எதிர்ப்பு கிளம்பும் என்று கிஞ் சிற்றும் எதிர்பார்க்கவில்லை. அரண்டு போனாள். அடங்கிப் போனாள். அவசர அவசரமாய் மதுரையைச் சேர்ந்த டாக்டர் மாப்பிள்ளை ரத்ன குமாருக்கு இங்கு கூட இல்லாமல் மதுரையிலேயே வைத்து ஆடம் பரமாக திருமணத்தை முடித்து விட்டிருந்தனர்.

வைத்தீஸ்வரன் இறுகிப் போனான்.

''அம்மா... உன் இஷ்டப்படி துர்காவை கல்யாணம் பண்ணிக்க முடியாம எல்லாமே முடிஞ்சிடுச்சு. சந்தோஷம்தானே? ஆனா, ஒண்ணு மட்டும் உறுதியா சொல்றேன். சாகும்வரை நான் வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்!'' என்று சத்தியம் செய்தான்.

வைதேகி தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். இந்த வீம்பெல்லாம் கொஞ்ச நாளைக்குதான் அடுத்து துர்காவை விட அழகா வேற பொண்ணைப் பார்த்துட்டான்னா... சத்தியமாவது, மண்ணாவது என்றுதான் நினைத்தாள்.

ஆனால், நீங்கள் நினைத்த அத்தனையும் தப்பு என்று அவர்கள் நினைப்பில் மண்ணள்ளிப் போட்டுவிட்டு, துர்கா இல்லாத அந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊரை விட்டே காணாமல் போய்விட்டான் வைத்தீஸ்வரன்.

*

ரத்னகுமார் நல்லவராய் இருந்தார். அவர் ஒரு டாக்டர் என்பதால் மனிதாபிமானம் நிறையவே இருந்தது. கல்யாணத்திற்கு முதல் நாளே துர்காவை அவர் கவனிக்கத் தவறவில்லை.

சட்டென்று யூகித்து விட்டார்.

என்றாலும் அந்தக் காரணம் காட்டி கல்யாணத்தை நிறுத்த மனம் வரவில்லை. காரணம் துர்காவின் அழகும், அடக்கமும்.

தாலியைக் கட்டி விட்டார்.

முதலிரவில் குற்ற உணர்வு உறுத்த கண் கலங்கியபோது மென்மையாகக் கேட்டார்.

''கட்டாயப்படுத்தி கல்யாணம் பண்ணிட்டாங்களா துர்கா?''

''..........''

''நீ வேற யாரையோ காதலிச்சிருக்கே! அவரை உன்னால மறக்க முடியாம தவிக்கிறே... சரியா?''

விக்கித்துப் போனாள் துர்கா.

''பயப்படாதே! சராசரி ஆண்களைப் போல் நானில்லே. நான் ஒரு டாக்டர். மனசுக்கும் சேர்த்து வைத்தியம் பண்றவன். உன்னை இப்ப ஒரு பேஷண்ட்டாதான் பார்க்கிறேன். சொல்லு... என்னாச்சு?''

துர்கா பயம் விலகி சுருக்கமாய் சொன்னாள்.

''நான் அவரைப் பிரிஞ்சதுக்காகக்கூட வருத்தப்படலே. ஆனா, அவங்க வீட்லே போய் எங்கப்பா, அண்ணனெல்லாம் மிரட்டி அசிங்கப்படுத்தி, அவரோட அம்மா தற்கொலை முயற்சிக்கு போய்... பிழைச்சிட்டாங்க. எல்லாம் என்னாலதானே? தப்பு என் மேலயும்தானே? ஆனா, பாதிப்பெல்லாம் அவங்களுக்குத்தான்! என்னால தாங்கிக்க முடியலே!''

''துர்கா... இது ரொம்ப சாதாரண விஷயம். உனக்கு காதல் தோல்வியைவிட அவங்க நம்மலா அடிபட்டாங்களேங்கற வேதனைதான் வாட்டி எடுக்குது. அதை எல்லாம் மறந்துடு. அவங்களும் மறந்திட்டிருப்பாங்க. கொஞ்ச நாள்ல உன் நண்பரும் எல்லாத்தையும் மறந்து வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிப்பார். ஸோ, எதையும் மனசுல போட்டுக் குழப்பிக்காம... புது வாழ்க்கையோடு உன்னை இணைச்சுக்க... ஓகே?''



துர்காவின் மனமும் அமைதியடைந்தது. ஆண்டவன் அவளுக்கு நல்ல புருஷனை கொடுத்திருக்கிறானே! அது வரையில் சந்தோஷம்.

*

வைதேகி எதையும் மறக்கவில்லை. துர்காவை மனம் முழுக்க நிறைத்து வைத்திருந்தார்.

அவர் தஞ்சம் புகுந்தது. சென்னையில் கிடைத்த வேலையை செய்தார். விட்ட படிப்பை இங்கே தொடர்ந்தார். நல்ல மதிப்பெண்களுடன் தேர்வு பெற்றார். மேலும் படித்தார். ஒரு நல்ல கம்பெனியில் வேலை கிடைத்தது. நிறைய தொழில் நுட்பங்களை உற்று கவனித்து திறமையை வளர்த்து, பேங்கில் லோன் வாங்கி தனியே கம்பெனி நடத்தி... வைத்திக்கு சுக்கிர திசை என்றுதான் சொல்ல வேண்டும். பணம் நாலா பக்கமிருந்தும் கொட்டோ கொட்டென்று கொட்டியது.

வசதிகள் பெருகின. வைத்தியின் சாம்ராஜ்யம் பல விழுதுகள் விட்டு வளர்ந்தன. ஆனால், அவர் தனிக்காட்டு ராஜாவாக இருந்தாரே தவிர, ஒரு ராணியைக் கொண்டு வர முயற்சிக்கவில்லை. இடையில் ஊருக்குப் போய் பார்த்தார். அவர் ஊரை விட்டு ஓடிய கவலையிலேயே வைதேகி ரொம்ப நாள் உயிரோடில்லை என்றார்கள். ஜெயராமனும் வீட்டை விட்டு வேறு எங்கோ போய் விட்டார் என்றார்கள்.

வைத்தி தனிப்பறவையாகிப் போனார்.

வருடங்கள் கரைய, கரைய... இளமை உணர்வுகள் கரைந்தனவேயொழிய துர்கா மீது தான் கொண்டிருந்த நட்பு மட்டும் மனதில் வாசம் வீசிக் கொண்டிருந்தது. அவள் நினைவுகள் அரிக்கும்போது மதுவை நாடினார். அந்த மதுதான் அவரை கொஞ்சம் கொஞ்சமாய் அரித்துத் தின்று கொண்டிருந்தது.

அப்படி ஒரு நாள் பாரில் நன்றாகக் குடித்துவிட்டு, தானே காரை ஓட்ட... கார் தாறுமாறாய் ஓடி விபத்திற்குள்ளானது.

வைத்திக்கு பலமான அடி!

நல்லவேளை... அவர் காருக்குப் பின்னாடியே இன்னொரு கார். அதுவும் ஒரு டாக்டரின் கார் வந்து கொண்டிருந்தது. ரத்னகுமார் பதை பதைத்துப் போய் காரை நிறுத்தி, மயக்கத்திலிருந்த வைத்தீஸ்வரனை தூக்கி, தன் காரில் படுக்க வைத்து ஹாஸ்பிடலுக்கு, கொண்டு சென்றார்.

இரத்தம் நிறைய சேதமாகிவிட்டிருந்ததால் நிலைமை சீரியஸாகிப் போனது. ஐந்து நாட்கள் ஆனது. உணர்வு திரும்ப. ரத்னகுமார், வைத்தியை பரிசோதிக்கையில் இன்னொரு உண்மையும் புரிந்தது.

அவர் இதயம் துணியைப் போல் நைந்துப் போய்... ஓட்டை விழுந்து இருந்தது. அந்த இதயத்திற்கு அதிகப்படியான சந்தோஷத்தையோ, துக்கத்தையோ தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லை என்று!

அவரிடமிருந்து விசிட்டிங் கார்டு மூலம் அவர் யாரென்று தெரிந்தது. ஹாஸ்பிடலில் இருந்த, ஐந்து நாட்களிலும் ஜி.எம். மானேஜர், வீட்டுப் பணியாளர்கள் என்று பார்க்க வந்தார்களேத் தவிர, உறவுக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு ஒருவரும் வரவில்லை.

ரத்னகுமாருக்கு இயல்பாகவே வைத்தீஸ்வரன் மீது ஒருவித பாசம் உண்டானது.

டிஸ்சார்ஜ் ஆனபோது ரத்னகுமாரே வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

கடல் போல் வீடு! ஆனால் வெறிச்சோடிப் போய் காட்சியளித்தது.

''என்ன டாக்டர். அப்படிப் பார்க்கறீங்க? நான் தனியாதான் இருக்கேன்! எனவே, இந்த ஆக்ஸிடண்ட் ஏற்பட்டதுக்கூட நன்மைக்குத்தான். இல்லேன்னா இப்படியொரு டாக்டர் நண்பர் எனக்குக் கிடைத்திருப்பாரா?''

''தாங்க்ஸ் மிஸ்டர் வைத்தி! அதுக்காக. உங்க நண்பர் வட்டம் பெரிசாகணும்னு அடிக்கடி ஆக்ஸிடண்ட் நடக்க அனுமதிக்காதீங்க! ஐ மீன்... குடிக்காதீங்கன்னு சொல்றேன்.''



''நல்லா பேசறீங்க டாக்டர்! உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நாம அடிக்கடி சந்திக்கணும்.''

''ஷ்யூர்... ஷ்யூர்!''

அதன் பிறகு அவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். நட்பு இறுகியது. அந்த உரிமையில் ரத்னகுமார் தைரியமாய் கடிந்து கொண்டார்.

''வைத்தி... உங்க உடம்பு ரொம்ப மோசமாயிருக்கு. இப்படி விடாம குடிச்சிட்டிருந்தா என்னாகறது? ப்ளீஸ்... இந்தப் பழக்கம் வேண்டாம். விட்டுவிடுங்கள்!'' ரத்னகுமார் கெஞ்சினார்.

வைத்தி அவரைப் பார்த்து விரக்தியாய சிரித்தார்.

''நான் வேண்டுமென்றா குடிக்கிறேன்? இல்லை டாக்டர். ஆழமாய் பதிந்து பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் சில கசப்புகளை, ஏமாற்றங்களை மறக்கவே குடிக்கிறேன்.

''நீங்கள் நினைத்தால் நிச்சயம் இதை விட்டொழிக்க முடியும்!''

''முடியும்தான். ஆனால், அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.''

''சொல்லுங்கள். ஒரு டாக்டராக மட்டுமின்றி, ஒரு நண்பராகவும் இருந்து நான் உதவுகிறேன். அந்த வழியைச் சொல்லுங்கள்!''

''நான் நேசித்தவளை... என் கண்முன் கொண்டு வந்து நிறுத்துங்கள்! என் சொத்து அத்தனையும் உங்கள் காலடியில் வந்து கொட்டுகிறேன்!''

வைத்தியின் வார்த்தையில் வெளிப்பட்ட ஏக்கம், விரக்தி, காதல், எதிர்பார்ப்பு, அதைச் சொல்லும்போது கண்ணீரோடு பளபளத்த கண்கள் அத்தனையும் ரத்னகுமாரை பாதித்தது.

பெண்!

அந்த இரண்டெழுத்து உயிருக்கும், காதல் என்கிற மூன்றெழுத்து உயிருக்கும்தான் எவ்வளவு சக்தி?

இதுவரை வைத்தி தன் சொந்தக் கதையைக் கூறியதில்லை. அன்று மனம்விட்டுக் கூறினார்.

அப்போதும்கூட வைத்தி மனதில் நீங்காமல் நிலைப்பெற்றிருக்கும் பெண் தன் மனைவிதான் என்பது தெரியாது.

வைத்தியைப் பார்க்கும்போது பிரமிப்பு கூடிக்கொண்டே போனது.

'காதலித்தோமா? தோல்வியா? இந்தப் பெண் இல்லை என்றால், இன்னொருத்தி என்று மனதை தேற்றி அடுத்த தினமே மனதை மாற்றிக் கொள்ளும் இந்தக் காலத்தில் காதலித்த பெண்ணை மறக்காமல் இருபத்தி ஐந்து வருட காலமாக, தனிமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் வைத்தி... வித்தியாசமானவரல்லவா? கோடிக்கணக்கான பணம். ஆள், அம்பு, வசதி என்று சகலமும் இருந்தும் வேறொரு பெண்ணால் அவர் இதயத்தின் அருகில் கூட செல்ல முடியவில்லையே!

''வைத்தி... என்னால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஆனால் உங்கள் வாழ்க்கையை வீம்புக்காக வீணடித்து விட்டீர்களோ என்றுதான் தோன்றுகிறது. அதுவும் அந்தப் பெண்ணுக்கு திருமணமாகி விட்டது என்று தெரிந்தும் அவளையே நினைத்துக் கொண்டிருப்பது எந்த வகையில் சரியாகப்படுகிறது?''

''தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள் டாக்டர்! நான் அவளுக்கு ஒரு சத்தியம் பண்ணி கொடுத்திருந்தேன். உன்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று! நான் சத்தியத்தை மதிப்பவன். ரெண்டாவது, உடல் இச்சைக்காக அவளை நான் காதலிக்கவில்லை. அவளை என் சிநேகிதியாக, தாயாகத்தான் நேசித்தேன். காதலிக்கும்போது என் நகம்கூட அவளைத் தீண்டியதில்லை. ஏனோ அவளைப் பார்க்கும்போது ஒரு பூவை செடியில் வைத்துப் பார்ப்பது போலதான் உணர்ந்தேன். அதைப் பறித்து முகரணும், வாட, விடணும் என்றெல்லாம் நினைத்ததே இல்லை.



அவள் என்னை அதிகாரம் செய்ய வேண்டும், இதைச் செய்யாதே. அதைச் செய்யாதே என்று கண்டிக்க வேண்டும். அப்படியொரு தோழமையைத்தான் அவளிடம் நான் எதிர்பார்த்தது. இப்போது கூட அவள் என் எதிரில் வந்து, ''குடிக்காதே வைத்தி'' என்று கூறட்டும். இந்த பழக்கத்தை அடியோடு விட்டொழிக்கிறேன்.''

''அவளை நான் எங்கு போய் தேடுவது? கணவன், குடும்பம் என்று செட்டிலாகி விட்டவளை இந்தளவு எதிர்பார்ப்பது சரியல்ல வைத்தி!''

''அவளை நான் காதலியாக நினைக்கவில்லை. டாக்டர் ஒரு தோழியாகத்தான் நினைக்கிறேன். அவள் மட்டும் என் கண்களில் தென்படட்டும்! என் சொத்தையெல்லாம் அவள் பெயருக்கு எழுதி வைத்துவிட்டு நிம்மதியாகக் கண் மூடுவேன்!''

''அவளுடைய புருஷன் கேள்வி கேட்க மாட்டானா? எவரோ ஒருவர் உனக்கு தன் சொத்துக்களையெல்லாம் எழுதி வைத்திருக்கிறார் என்றால் உனக்கும், அவருக்கும் என்ன உறவு என்று?''

''ஹூம்... எல்லாமே கற்பனைதான்! என் வாழ்க்கை, தேடல் அத்தனையும் கற்பனையிலேயே கரைந்து விட்டது. அதுவும் ஒரு சுகம் தானே? ஏதாவதொரு அதிசயம் நிகழ்ந்து நான் நினைத்தது நடந்தால்... அது உலகின் எட்டாவது அதிசயமாகிவிடுமல்லவா டாக்டர்?'' நீண்டதொரு பெருமூச்சை வெளியிட்டார் வைத்தீஸ்வரன்.

## 9

துர்கா கணவனை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

இதுவரை ரத்னகுமார் நண்பர் என்று யாரையும் வீட்டிற்கு அழைத்து வந்ததில்லை. இப்போதுதான் முதன் முதலாக அழைக்கப் போவதாக கூறினார்.

''யாருங்க அப்பேர்பட்ட ப்ரண்ட்! உங்க மனசுல அந்த அளவுக்கு இடம் பிடிச்சவர்?''

''அவர் என்னோட பேஷண்ட் துர்கா! பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட் வைத்தீஸ்வரன்!''

அந்தப் பெயரைக் கேட்டதும் மனதின் ஒரு மூலையில் முகாரி ராகம் ஒலித்தது துர்காவிற்கு. சில கணங்கள்தான். இயல்பிற்கு மீண்டு வந்தாள்,

''லன்சுக்கு கூப்பிடறீங்களா? டின்னருக்கா?''

''லன்ச்தான்! நிறைய அயிட்டம் ப்ரிப்பேர் பண்ணிடு துர்கா!''

''நான் கிச்சனை விட்டுவெளியே வரலே போதுமா?''

ரத்னகுமார் சிரித்தபடி, கொலஸ்ட்ரால் பொருள் எதையும் சேர்த் துடாதே! அவருக்கு ஆகாது!''

''ஒரு டாக்டர் வீட்டுக்கு விருந்துக்கு வர்றார் பாருங்க. அவரை கேக்கணும்!'' என்றாள் கிண்டலாய்.

''மம்மி... டிபன் ரெடியா?'' முகேஷ் ஷூ கால்களோடு கிச்சனுக்குள் நுழைந்தான்.

உக்காரு... சுடச் சுட வெங்காய தோசைப் போட்டுத் தர்றேன்'' என்று அவனை டைனிங் டேபிள் முன் அமர வைத்தாள்.

முகேஷ்! கிச்சன் வரைக்கும் ஷூ போட்டுக்கிட்டு வராதேன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்?'' என்றார் ரத்னகுமார்.

''விடுங்க. அவனுக்கு சாப்பிட நேரம் கிடைக்கறதே எதேஷ்டம்! சாப் பிட்டு, முடிச்சிட்டு ஷூ மாட்டிக்கிட்டு கிளம்பணும்னா... நேரமாகி டாதா?'' துர்கா மகனுக்கு, பரிந்து பேசினாள்.

''எல்லா வீட்லேயும் பிள்ளைங்க கெட்டுப் போறதே அம்மாவால தான்!''



''நான் என்ன கெட்டுப் போய்ட்டேன் டாடி?''

''அதானே... என் பிள்ளை என்ன கெட்டுப் போய்ட்டான்?''

''சரண்டர்! அம்மாவும், பிள்ளையும் ஒரே கட்சியில இருக்கிறப்ப... இந்த அப்பாவால ஜெயிக்க முடியுமா? நீ கிச்சனுக்கென்ன... பூஜை யறைக்கே ஷூ மாட்டிக்கிட்டுப் போப்பா..! துர்கா சொன்னது ஞாபக மிருக்கில்லே...''

''இருக்குங்க! எத்தனை பே அவர் மட்டும்தானா? இல்லை அவங்க மனைவி. பிள்ளைங்களெல்லாம் வர்றாங்களா?''

''உன்கிட்டே அவரை பத்தி நிறைய பேசணும் துர்கா! சொன்னா நீ ஆச்சர்யப்படுவே... அப்படியொரு மனிதரைப் பார்க்கறது அபூர்வம்! அவர் மட்டும்தான் வர்றார். நான் ஹாஸ்பிடல் கிளம்பறேன். மதியம் அவரோடு வர்றேன்!'' என்று கிளம்பிப் போனார்.

'தன் கணவரே மனம் திறந்து பாராட்டுமளவிற்கு அபூர்வ மனிதரா?' அவரைப் பார்க்க வேண்டுமென்கிற ஆர்வம் அவளுக்குள்ளும் உண்டானது.

*

வெளியில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. துர்கா பதட்டமானாள். அப்போதுதான் சமையல் வேலை முடிந்து கேஸை அணைத்திருந்தாள். உடம்பெல்லாம் வியர்வையில் கசகசத்தது.

'இப்படியேவா போய் வரவேற்பது? ஒரு சின்னக் குளியல் போட்டு விடலாமா? அவள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே ரத்னகுமார் வந்துவிட்டார்.

''என்ன துர்கா, இங்கேயே நின்னுட்டிருககே? அவர் வந்துட்டார்! ஹால்லயே உக்கார வச்சிருக்கேன். வா... உன்னை இன்ட்ரடியூஸ் பண்றேன்!''

''இல்லைங்க! ஒரு பத்து நிமிஷம் பேசிட்டிருக்க... நான் இதோ வந்திடறேன். அதுக்குள்ளே அக்காவை விட்டு பரிமாறச் சொல்லுங்க... நான் வந்திடறேன்!''

''நீயே பரிமாறு.''

''விருந்தாளிய ரொம்ப நேரம் காக்க வைக்கக்கூடாது. அக்காவே பரிமாறட்டும் நான் வந்திடறேன்'' என்று பாத்ரூமுக்குள் நுழைந்து கொண்டாள் துர்கா.

அமிர்தம் பரிமாற சாப்பிட ஆரம்பித்தார் வைத்தீஸ்வரன் அதைச் சாப்பிடும்போது தன் ஊர் ஞாபகம் வந்து விட்டது.

''வெந்தயக் குழம்பு ரொம்ப அருமையா இருக்கு. டாக்டர் எங்கம்மா ஞாபகம் வந்துடுச்சி. எங்க வீட்டு சமையல்காரனுக்கு இந்த மாதிரி குழம்பெல்லாம் சரியா சமைக்கத் தெரியலே! உங்க வீட்டு சமையல்ல எங்க கும்பகோணம் வாசம் வீசுது!''

''அட... நீங்க கும்பகோணமா?''

''ஆமாம்!''

''என் வொய்ஃப்பும் கும்பகோணம்தான்!''

''நிஜமாவா? அப்ப ரொம்ப நெருங்கிட்டோம்னு சொல்லுங்க! உங்க வொய்ஃப்பை பார்க்கணுமே டாக்டர்!''

''ஷ்யூர்... இதோ வந்திடுவா!'' ரத்னகுமார் துர்காவை அழைக்க எழுந்து போனார்.

''ரசம் விடட்டுமா?'' அமிர்தம் கரண்டியும் கிண்ணமுமாக தயாராக நின்றாள்.

''இன்னொரு முறை குழம்பு சாதம் சாப்பிட்டுக்கறேன். அப்புறமா ரசம் விட்டுக்கறேன்.''

அமிர்தம் சிரித்தபடி பரிமாறினாள்.



''எவ்வளவு நேரம் துர்கா? சீக்கிரம் வா!''

''இதோ... புறப்பட்டாச்சு!'' புடவையை சரி பண்ணியபடி கிளம்பினாள்.

''துர்கா... உனக்கொண்ணு தெரியுமா? அவரும் கும்பகோணத்துக் காரர்தானாம்!''

''நிஜமாவா? ரொம்ப சந்தோஷம்! என்னதான் சொல்லுங்க. ஒரே ஊர்க்காரங்களை சந்திக்கறதுல உள்ள மகிழ்ச்சியே தனிதான்!'' என்றபடி ஹாலில் பிரவேசித்தாள்.

''மிஸ்டர் வைத்தீஸ்வரன்! இவள்தான் என் வொய்ஃப் துர்கா!''

நிமிர்ந்து பார்த்த வைத்தீஸ்வரன் திகைப்பின் உச்சத்திற்கே போனார்.

வணக்கம் சொல்ல கைகூப்பிய கைகள் செயலற்றுப் போக... ஷாக்கடித்து நின்றாள் துர்கா.

'து...ர்...கா! நீயா?'

'வை...த்...தி.. நீங்களா? இங்கேயா?'

வைத்திக்கு இதயத்தை யாரோ சுருக்குப் போட்டு இழுத்தார்கள். காலடியில் பூமி நழுவுவது போலிருந்தது. கண்கள் மேலே செருகிக் கொள்ள... மயக்கத்திற்குப் போனார்.

*

ஹாஸ்பிடல்!

ரத்னகுமார் தன்னறையில் இரண்டு கைகளையும் நெற்றிக்கு முட்டுக் கொடுத்து கவலையாய் அமர்ந்திருந்தார்.

வைத்திக்கு திடீரென்று இப்படியாகும் என்பது அவர் நினைத்தே பார்த்திராத ஒன்று!

கடந்த சில வாரங்களாக பரிசோதித்ததில் வைத்தியின் உடல்நிலையில் முன்னேற்றம் தெரிந்தது. இப்படி திடீரென்று சீரியஸாகும்

அளவுக்கு அவரைப் பாதித்தது எது? ஒருவேளை நம் வீட்டு சமையல் அவருக்கு ஏற்றுக் கொள்ளவில்லையோ? சே... இந்த விருந்துக்கு நான் ஏற்பாடு செய்தே இருக்கக் கூடாது. தன்னையே நொந்து கொண்டார்.

வைத்தீஸ்வரன் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். முழுதாய் ஒரு நாள் ஓடிவிட்டது. இன்னமும் உணர்வு திரும்பவில்லை.

''டாக்டர்!''

நிமிர்ந்தார்.

எதிரே நர்ஸ்.

''டாக்டர், நேற்று ஐ.சி.யில் அனுமதிக்கப்பட்டிருந்த ஹார்ட் பேஷண்ட்டுக்கு கான்ஷியஸ் திரும்புது டாக்டர்.''

''தாங்க் காட்!'' என்றபடி ஓடி வந்தார்.

வைத்தீஸ்வரனின் உதடுகள் எதையோ முணுமுணுத்தன. ரத்ன குமார் அவரருகே குனிந்தார்.

முதலில் எதுவும் புரியவில்லை. ஆனால் மெல்ல அவர் பேசுவது தெளிவாகப் புரிய, கண்களைத் திறக்காமல் தன்னையறியாமல் அவர் முனகிய உண்மைகள் ரத்னகுமாரின் நெஞ்சை இறுக்கிப் பிடிக்கச் செய்தன.

*

**சா**ப்பாடு பரிமாறிய மனைவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

முகம் களையிழந்து சோர்ந்து போயிருந்தது.

''நீயும் உட்காரேன் துர்கா! சேர்ந்து சாப்பிடுவோம்!''

''இல்லைங்க. நான் அப்புறமா சாப்பிட்டுக்கறேன்!''

''ஏன் ஒரு மாதிரியா இருக்கே?''

''நா... நானா? இல்லையே!'' என்று திணறியபடி சிரிக்க முயன்றாள்.



''நீ கேக்கவே இல்லையே!''

''எதைப்பத்தி?''

''வைத்தீஸ்வரன் எப்படியிருக்கார்னு கேக்கவேயில்லையே!''

''கேக்கணும்னுதான் நினைத்தேன். அ... அவர் எப்படியிருக்கார்?''

''கான்ஷியஸ் திரும்பியிருக்கு. ஆனா, கண் விழிக்கலே. இன்னும் ஆபத்தான கட்டத்தை தாண்டலே!''

''அ... அப்படியா?'' குரல் அமுங்கிப் போய் வெளிப்பட்டது.

''அவரை எதுவோ பலமா பாதித்திருக்கு. சந்தோஷமோ, துக்கமோ, எதுவாயிருந்தாலும் அதன் உச்சத்தை தாங்கிக்கிற சக்தி அவர் இதயத் துக்கு இல்லே துர்கா! நம்ம வீட்லே வந்து இப்படியாய்டுச்சேங்கற வருத்தம் ஒரு பக்கம்! அதற்கான காரணம் என்னங்கற கேள்வி ஒரு பக்கம்! இப்ப அதற்கான பதில் கிடைச்சிடுச்சி துர்கா!''

துளிர்க்க நினைத்த கண்ணீரை கண்களைச் சிமிட்டி உள்ளிழுத்துக் கொண்டாள்.

அவள் இருபத்தி ஐந்து வருடத்திற்குப் பிறகு வைத்தியை தன் வீட்டில் வைத்தே பார்ப்போம் என்று சற்றும் நினைத்ததில்லை.

அது பேரதிர்ச்சி!

ஆனால், வைத்தி இப்படி அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டு சீரியஸான நிலைமைக்கு போவார் என்று நினைக்கவேயில்லை.

துர்கா நடமாடிக் கொண்டிருந்தாளேத் தவிர, அவள் உணர்வை எழுத்தில் வடிக்க இயலாது.

ஏதோ ஒரு பய உணர்வு உடலெங்கும் அப்பிக் கிடந்தது.

''என்ன பதில்னு கேக்கமாட்டியா துர்கா?'' ரத்னகுமார் கேட்கவும், அவரைப் பார்த்து சிரித்தாள்.

''எப்படியும் சொல்லப் போறீங்கன்னு தெரியும்!''

''இதயத்தில் சுமந்த காதல்தான். அவர் இதயத்தையே சல்லடை யாக்கியிருக்கு! ஒரு மனுஷன் காதலுக்காக தன் வாழ்க்கையையே வீணடிச்சுக்கறதிலேயும் ஒரு மனசு வேணும்! வைத்தி வித்தியாசமான மனிதர்!''

''..........''

''அப்பேர்ப்பட்ட மனிதரை மிஸ் பண்ணிய அவர் காதலிக்காக நான் வருத்தப்படறேன்!''

''..........''

''வைத்தி, தன்னை மீறி தனக்கே தெரியாம ஒரு உண்மையைச் சொல்லிவிட்டார் துர்கா!'' என்றவர் சற்று நேரம் மனைவியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''உன்னை நான் பார்ப்பேன்னு நினைக்கலே துர்கா! நீயா ரத்ன குமாரோட மனைவி?' அப்படீன்னு திரும்பத் திரும்ப பேசிக்கிட்டிருந் தார் துர்கா!'' என்றார் நிதானமாக.

துர்கா உடல் முழுக்க நடுக்கம் நெளிந்தோட பயவிழிகளோடு கண வனைப் பார்த்தாள்.

''நீயாவது சொல்லியிருக்கலாமே துர்கா! அந்த நபர்தான் இந்த வைத்தின்னு!''

''ஐயோ... நான் மறந்துட்டேங்க! நீங்க என் கழுத்துல தாலி கட்டின நிமிஷத்திலேயே நான் எல்லாத்தையும் மறந்துட்டேங்க! முடிஞ்சு போனதை எதுக்கு சொல்லணும்னு நினைச்சிதான்...'' அதற்கு மேல் பேச முடியாமல் டேபிள் மீதே கவிழ்ந்து குமுறி அழ ஆரம்பித்தாள்.

ரத்னகுமார் இடது கையால் மனைவியின் முதுகை தட்டிக் கொடுத் தார்.

''அழறதை நிறுத்து துர்கா! இப்ப என்ன ஆகிப் போச்சுனு அழறே.''

''நீங்க என்னைத் தப்பா...''



''நோ...'' நோ! யூ ஆர் ராங் மை டியர்! கல்யாணத்தன்னைக்கே, எல்லா விஷயத்தையும் தைரியமா, மறைக்காம சொன்னே பார்! அந்த உண்மை எனக்குப் பிடிச்சிருந்தது. எனக்கு உன்னையும் தெரியும், வைத்தியையும் தெரியும். தைரியமாயிரு!''

துர்கா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''எனக்கு இப்போதைய கவலையெல்லாம் வைத்தி பிழைக்கணும். பிழைக்க வைச்சிடுவேன்ங்கற நம்பிக்கை நிறையவே இருக்கு! ஆனா, வைத்திங்கற வண்டி ரொம்ப நாள் ஓடாது துர்கா!''

''....!''

''ஆமா துர்கா! அவரோட பாடி கண்டிஷன் அப்படி. ஒரு டாக்டரா மட்டுமில்லாம நண்பரா அவருக்கு மனிதாபிமானத்தோட உதவ நினைக்கிறேன் துர்கா! அதனால ஒரு வருஷமோ, ரெண்டு வருஷமோ, அவரோட ஆயுளை நீட்டிக்கலாம். அதுக்கு உன்னோட ஒத்துழைப்பு தேவை!''

''சொல்லுங்க நிச்சயமா செய்யறேன்!''

''வைத்தியோட மனசுல உனக்கொரு உயர்வான இடம் இருக்கு. காதல் என்பதையெல்லாம் தாண்டி மிக உயர்வான, உன்னதமான இடம். உன்னோட, தன் சுகதுக்கங்களை பகிர்ந்துக்க ஆசைப்படறார். அதுமட்டுமில்லே! இவ்வளவு வசதியிருந்தும், கோடிக்கணக்கான பணமிருந்தும், அவர் சின்ன சந்தோஷத்தைக்கூட அனுபவிக்கலே! ஆத்மார்த்தமான நிம்மதியை இன்னும் அவர் மனசு உணர்ந்ததில்லே!''

''அதனால?'' என்றாள் நடுங்கும் குரலோடு.

''நீ வைத்தியோட சுகதுக்கங்களை பகிர்ந்துக்கிற தோழியா மாறணும். தப்பு செய்யறப்ப தட்டிக் கேக்கற தாயா மாறணும். சமைச்சுப் பரிமாறு கிற சகோதரியா மாறணும்!''

''எ... என்னது?''

"..............!"

"புரிஞ்சிதான் பேசறீங்களா?"

"புரியாம பேசுவேனா?"

"இதனால ஏற்படப் போகிற பிரச்னைகளைப் பத்தி யோசிச்சுப் பார்த்தீங்களா?"

"உன் புருஷன் நானே சொல்லும்போது, என்ன பிரச்னை ஏற்படப் போகுது? நீ ஊருக்கு பயப்படறே துர்கா! உன்மேல் எவ்வளவு நம்பிக்கை யிருந்தா இவ்வளவுப் பெரிய பொறுப்பை ஒப்படைப்பேன்னு நீ நினைச்சுப் பார்த்தியா? நீ தயங்கினா... உன் மேல உனக்கு நம்பிக்கை இல்லேன்னு அர்த்தம்!"

"இல்லே... அப்படியில்லே.. ஆனா, இது முரண்பாடான விஷயங்க! மத்தவங்களுக்காக நாம வாழலேன்னாலும், அது மத்தவங்க மத்தி யிலேதான் நாம வாழவேண்டி இருக்கு."

"ஒரு உயிரை காப்பாத்தறதைவிட மற்றதெல்லாம் உயர்வான விஷயமா துர்கா?" நீ உன்னதமானவள். அது எனக்கு தெரியும். அது போதாதா?"

துர்கா பதில் கூறாமல் தலை கவிழ்ந்தாள். பிறகு -

"வைத்தி இதுக்கு சம்மதிப்பாரா?"

"இப்படியொரு நாளுக்காக அவர் எத்தனை வருடம் காத்திருந்தார் தெரியுமா?"

அதற்கு மேல் விவாதிக்க பேச்சில்லாமல் போனது. ஒரு பக்கம் கணவன், தன் மேல் வைத்திருந்த நம்பிக்கையை நினைத்துப் பெரு மிதம் கொண்டாள். இன்னொரு பக்கம் இதனால் சமூகம் தன் மேல் வீசப் போகும் பார்வைக்காக பயந்தாள்.

தன்னால் வாழ்விழந்த வைத்தியின் ஆயுள் தன்னாலேயே நீட்டிக் கப்படுவது எவ்வளவு உயர்வான விஷயம்? யாருக்குக் கிடைக்கும் இப்படியொரு வாய்ப்பு?



கொஞ்சம், கொஞ்சமாக தன்னைத் தேற்றி தயார் செய்து கொண் டாள்.

வைத்தி எதைப்பற்றியும் யோசிக்கவில்லை.

அவருக்கே. அவர் உடல்நிலை பற்றி தெரிந்திருந்தது.

மீண்டும் துர்காவை பார்ப்போம் என்ற நம்பிக்கையே இல்லாமலிருந் தவர் முன் துர்கா! அதுவும் அன்பு நண்பர் ரத்னகுமாரின் மனைவியாக! அவருடைய பயமே. எங்கே தன் காதலிதான் துர்கா என்று தெரிந்து விடப் போகிறதோ என்பதுதான்! இரு வேறு விதமான மன அழுத் தத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத அதிர்வில்தான் ஆபத்தான நிலை மைக்குப் போனார். எப்படியோ, எமன் வாயிலிருந்து மீட்டுக் கொண்டு வந்தாயிற்று.

ரத்னகுமார், அவரிடம் மென்மையாக, அவர் இதயம் தாங்கிக் கொள்ளும் விதமாக, எல்லாவற்றையும் சொன்னார்.

"வைத்தி. நீங்கள் குடிப்பதை நிறுத்த வேண்டும். அப்போதுதான் உங்கள் உடம்பு குணமாகும் துர்கா வந்து சொன்னால், குடிப்பதை நிறுத்தி விடுவேன் என்றீர்களே... துர்கா சொல்வாள்! உங்கள் பால்ய காலத்திற்கு நீங்கள் மீண்டும் போகப்போகிறீர்கள். உங்கள் சிநேகிதி இனி உங்களுக்கு ஒரு தாயாக, சகோதரியாக, உங்கள் வீட்டிற்கு தினசரி வருவாள்..."

"டா...க்...டா...ர்!"

"பார்த்தீங்களா? உணர்ச்சி வசப்படக்கூடாது என்று கூறினேன் அல்லவா?"

"இது கனவா? நிஜமா? என்னால் எதையும் நம்ப முடியவில்லை டாக்டர்."

"நிஜம்... எல்லாமே நிஜம்! நடக்கப்போகிற அத்தனையும் நிஜம். உங்கள் கனவு பலிக்கப் போகிறது வைத்தி!"

''டாக்டர்! தெய்வத்தை யாரும் நேர்லே பார்த்திருக்க முடியாது. ஆனா, நான் பார்த்துட்டேன் டாக்டர்! உங்க ரூபத்துல பார்த்துட்டேன்! துர்காவிற்கும், எனக்கும் சிறு வயதில் ஆத்மார்த்தமான நட்பிருந்தது தெரிந்தும், எனக்காக, என் சந்தோஷத்திற்காக, துர்காவை தினசரி என் வீட்டிற்கு அனுப்பி வைக்கப் போகிறேன் என்றீர்களே! அப்படியானால் எங்கள் மேல் எவ்வளவு நம்பிக்கையிருக்க வேண்டும்? தாங்க்ஸ் டாக்டர்! பட், இது அவ்வளவு சரிப்பட்டு வராது டாக்டர். பார்க்கிறவங்க தப்பா பேசக்கூடும்'' என்றார் ரத்னகுமாரின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு.

''எனக்கு என் நண்பரின் சந்தோஷம் முக்கியம். என்னைப்போல் துர்கா உங்களுக்கொரு தோழி! நாம் தனியில்லை. நமக்காக உயிரையும் தர ரத்னகுமாரும், துர்காவும் இருக்கிறாங்கங்கற நிம்மதி கிடைக்கணும்! அதற்காக யார் என்ன சொன்னாலும் சரி! ஐ டோன்ட் கேர்! அவங்களுக்கென்ன தெரியும் வைத்தி. ப்ரெண்ட்ஷிப் பத்தி!'' ரத்னகுமார் ஆறுதலாய், தெளிவாய், உறுதியாய் கூறி முடித்தார்.

கன்னத்தில் உருண்டோடிய கண்ணீரை வழித்தெறிந்த வைத்தீஸ்வரன், ''துர்காவோட அனுமதி வாங்கிட்டீங்களா டாக்டர்?''

''துர்கா என்னோட மனைவி. என்னைவிட நல்லவள். நல்ல காரியத்தில் ஈடுபட அவள் என்றுமே தயங்கியதில்லை.''

வைத்தீஸ்வரன் நிம்மதி பெருமூச்சு விட்டார். புதிதாய் பிறந்தது போல் உணர்ந்தார்.

துர்கா தினமும் காலையில் வைத்தீஸ்வரன் வீட்டிற்குப் புறப்பட்டு மாலையில் வீட்டிற்கு வருவாள். போகவர, ஒரு காரை ஒதுக்கினார் வைத்தி. அதை கட்டாயமாக மறுத்து, ஆட்டோவிலேயே போய் வந்தாள். அவரும் சரி, அவளும் சரி. கடந்து போன நாட்களைப் பற்றி மறந்தும்கூட பேசியதில்லை. அந்த அத்தியாயம் முடிந்துப்போன ஒன்று! இது புது நாவல்! அதில் காதலர்கள் என்றால், இதில் தோழர்கள். எனவே, சந்தோஷத்தைத் தவிர வேறென்ன எழுத முடியும்?



ஆரம்பத்தில் துர்காவிற்கு மிகமிக கஷ்டமாகத்தான் இருந்தது. விஷப்பரீட்சை மாதிரி இருந்தது. ஆனால், இவளைப் பார்த்ததும் குழந்தையாய் மாறிப்போகும் வைத்தியைப் பார்த்ததும் இரக்கம் சுரந்தது. அதனால் சூழ்நிலைகளுக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டாள்.

அமிர்தத்திற்கு ஆரம்பத்தில் எதுவும் புரியவில்லை. ஒரு நாளைப் போலில்லாமல் தினமும் துர்கா வைத்தி வீட்டிற்கு போய் வருவது கண்டு முகம் சுளித்தாள். வார்த்தைகளால் கொட்டினாள். ரத்னகுமார் அவ்வப்போது அவள் வாயை அடைத்தார். ஆனால் ஒரே மகனை அவராலோ, அவளாலோ சமாதானப்படுத்த முடியவில்லை.

முகேஷிற்கு அப்பாவைவிட, அம்மாமேல் அதிக பாசம். அது அத்தனையும் விஷமாய் மாறிப்போனது. பெற்றவர்களிடம் பேசுவதையே நிறுத்திக் கொண்டான். துர்காவைப் பாதித்த பெரிய விஷயமே முகேஷ் தான். தனிமையில் கணவனிடம் கதறுவாள். ரத்னகுமார் 'எல்லாம் நன்மைக்கே' என்று ஆறுதல் கூறுவார்.

அப்படிப்பட்ட ரத்னகுமார்தான் இன்று வேறு முகம் மாட்டியிருந்தார்!

## 10

''என்ன துர்கா... நேரமாகுதே... கிளம்பலே?''

''இல்லை!''

''ஏன்?''

''இனிமே அங்கே போக வேண்டாம்னு முடிவுப் பண்ணிட்டேன்.''

துணுக்குற்ற ரத்னகுமார் மனைவியை நம்பாமல் பார்த்தார்.

''ஏன்?''

''கொஞ்ச நாளா உங்க நடவடிக்கை. பேச்செல்லாம் ஒரு மாதிரியா இருக்குங்க. அதையெல்லாம் தாங்கிக்க என்னால முடியாது. என் மேல உள்ள நம்பிக்கை குறைஞ்சு போச்சுங்கறப்ப. மேற்கொண்டு அங்கு போகறது அவ்வளவு உசிதமில்லை!''

''என்ன துர்கா... என்னென்னவோ பேசறே! நான் உன்னை நம் பலையா? தப்பும்மா... உன்னை நம்பாம வேற யாரை நம்பப் போறேன்?''

''அப்ப எதுக்கு நேத்து அப்படியொரு வார்த்தைய சொன்னீங்க?''

''நானா? என்னன்னு?'' ரத்னகுமார் புரிந்தும் புரியாதவர் போல் கேட்டார்.

''குளிச்சிட்டு ஆத்துக்குள்ளே போன்னு சொல்லலை?'' கரகரவென கண்ணீர் வழிந்தது துர்காவிற்கு.

''அப்படியா கேட்டேன்? ஸாரிம்மா... உன் காதுல தப்பா விழுந் துச்சோ. இல்லே நான்தான் தப்பா பேசினேனோ, எனக்குப் புரியலே... தெரியலே! நீ நேத்து வர்றச்ச ரொம்ப டயர்டா தெரிஞ்சே. அதான் குளிச்சா ஃப்ரெஷ்ஷாயிடுவேங்கிற எண்ணத்திலே உடனே குளிமான்னு சொல்லியிருப்பேன்! இதைப் போய் பெரிசுபடுத்திட்டியே துர்கா!'

துர்கா ஆச்சர்யமாய் கணவனைப் பார்த்தாள்.

தெளிவான கண்கள், அன்பு பொங்கும் சிரிப்பு, அதே முகம்தான்!

குழப்பமாய் இருந்தது.

ஒருவேளை அவர் சொன்னதுபோல்... நான்தான் தவறாகப் புரிந்து கொண்டு விட்டேனோ?

''போம்மா... போய் கிளம்பற வழியைப் பார்! இப்படி வராம போனா வைத்தி என்ன நினைச்சுப்பார்? என்னையில்லே தப்பா நினைச்சுப்பார்! நான் அப்படிப்பட்ட ஆளா? அதை விடு! இதை நினைச்சுக் கவலைப் பட்டா வைத்தியோட உடம்புக்கு ஆகுமா?''



''..............''

''சரி, நான் உன்னை வற்புறுத்தலே! அப்புறம் உன் இஷ்டம்!'' என்றவர் காலிங்பெல் சப்தம் கேட்டு வாசலுக்குப் போனார்.

''அடடே... வாங்க சார்!''

''வணக்கம் சார்!'' என்று கைகூப்பினார் வந்திருந்த இளைஞர்.

''துர்கா... இவர் பேரு ராஜன். ஆர்க்கிடெக்சர். புதுசா கட்டப்போற ஹாஸ்பிடலை வடிவமைச்சுக் கொடுக்கப் போறவர். மிஸ்டர் ராஜன். வைத்தீஸ்வரன் என்கிற பெயரை எங்கேர்ந்து பார்த்தாலும் பளிச்சின்னு தெரியற மாதிரி அஞ்சாவது மாடிக்கு மேலே பெரிசா வைக்கணும். அது முக்கியம்!''

துர்கா கணவனை நெற்றி சுருங்கப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கறே துர்கா? நான் கட்டப்போற ஹாஸ் பிடலுக்கு வைத்தீஸ்வரன் பேரைதான் சூட்டணும்னு. நான் எப்பவோ முடிவு பண்ணின விஷயம். இது வைத்திக்கே தெரியாது. தெரியவும் கூடாது. சர்ப்ரைஸா இருக்கட்டும்!'' அதன் பிறகு அந்த இளைஞனுடன் கட்டிட வேலைகள் பற்றி விளக்கமாய் கேட்டு அறிந்து கொண் டிருந்தார்.

நிலவை மூடியிருந்த கருமேகங்கள் விலகியது போலிருந்தது துர்காவிற்கு.

'இல்லை... என் கணவர் மாறவில்லை. நான்தான் கொஞ்சம் குழம்பி விட்டிருக்கிறேன்.'

அடுத்து மளமளவென வேலையில் இறங்கினாள். வசதி வாய்ப்புகள் இருந்தாலும் சமையலுக்கு வெளியாள் போடுவதை அந்த வீட்டில் யாருமே விரும்பியதில்லை. துடைக்க, துவைக்க, கழுவ மட்டுமே வேலைக்காரி ஒருத்தியைப் போட்டிருந்தார்கள்.

அமிர்தம் இருந்தால் சமையலை அவளே கவனித்துக் கொள்வாள். ஊருக்குப் போனவள் இன்னும் திரும்பாததால் துர்காவே சமைத்தாள்.

இருவருக்கு மட்டுமே சமைப்பது அவ்வளவு சிரமமாக இல்லை. வித விதமாய் ருசித்துச் சாப்பிடும் முகேஷ்தான் இங்கில்லையே! மாமியார் வீடே கதி என்று எப்படி மாறிப் போனாய் முகேஷ்? உன் அம்மாவைப் பற்றி உனக்குத் தெரியாதா? உன் அப்பாவின் விசாலமான பார்வை உனக்கில்லாமல் போனது ஏன்? யாருக்காக இல்லாவிட்டாலும், உனக்காகவாவது நான் நம் வீட்டோடு இருக்க ஆசைப்பட்டாலும், ஒர உயிரை காக்கும் பொருட்டு என் ஆசையைப் பொசுக்கிக் கொள்கிறேன் முகேஷ்!

ஆழ்ந்த பெருமூச்சை வெளியிட்டவள் சமையலை முடித்துவிட்டு டிரஸ்ஸை மாற்றிக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

ரத்னகுமாரும், அந்த இளைஞனும் இன்னமும் பேசிக் கொண்டிருந் தார்கள்.

''ஹால் பேக்கிலே எல்லாம் எடுத்து வச்சிட்டேன். நான் கிளம்பட் டுமா?''

ரத்னகுமார் வெற்றி பெருமிதத்தோடு தலையசைத்து விடை கொடுத்தார்.

*

வைத்தீஸ்வரன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''ரத்னகுமார் மாதிரி ஒரு ப்ரண்ட் கிடைக்க நான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும் துர்கா!''

''நாம அன்னைக்கு எதிர்பாராதவிதமா வெளியூர்லே ஸ்டே பண்ண வேண்டியதாயிடுச்சில்லையா? நான் ரொம்பவே பயந்து போயிட்டேன். ரத்னகுமார் என்ன நினைப்பாரோன்னு! ரத்னகுமாரென்ன... அந்த இடத்திலே வேறெந்த ஆம்பிளை இருந்தாலும் தப்பாதான் நினைப் பாங்க! ஆனா, நான் அவருக்கு போன் பண்ணி நிலைமையை விளக்கிச் சொன்னப்ப என்னையே கோவிச்சுக்கிட்டார். 'என்ன வைத்தி? நான் என்னமோ உங்களை சந்தேகப்படற மாதிரி இப்படி விளக்கம்



சொல்லிட்டிருக்கறது என்னை அசிங்கப்படுத்தற மாதிரியிருக்கு. மறுபடி சொல்றேன். எனக்கு உங்களையும் தெரியும். துர்காவையும் தெரியும்ன்னு சொன்னப்ப கண்ல தண்ணி பொங்கிடுச்சி துர்கா! நீ ஏழேழு ஜென்மமும் தவமிருந்துதான் இப்பேர்ப்பட்டவரை புருஷனா அடைஞ்சிருக்கே! அவர் நல்லா இருக்கணும் துர்கா! நீ தீர்க்கசுமங்கலியா எப்போதும் நடமாடணும்!'' நெகிழ்ந்து போய் சொன்னவருக்கு தொண் டையில் எதுவோ அடைத்துக் கொள்ள... மூச்சுவிட சிரமப்பட்டார்.

தாமதமாகவே அவர் நிலைமையை கவனித்த துர்கா பதறிப் போனாள்.

''வைத்தி... வைத்தி... என்னாச்சு? இங்கே பாருங்க...'' அவரை தன் தோளில் சரித்து கலவரப்பட்டாள்.

''ஒ... ஒண்ணுமில்லே... பயப்படாதே... நெஞ்சு வலிக்கிறாப்பல இருக்கு... ப்பா...''

''கடவுளே... வைத்தி, ஒண்ணும் ஆகாது... இதோ வந்துட்டேன்!''

துரிதமாய் செயல்பட்டாள் துர்கா!

தன் கணவருக்கு போன் செய்து விஷயத்தைக் கூறினாள். வேலைக் காரர்கள் உதவியோடு அவரை காரில் ஏற்றி ஹாஸ்பிடலுக்குக் கூட்டிச் சென்றாள்.

*

தூங்குவதற்காக ஊசி போடப்பட்டிருந்ததால் வைத்தீஸ்வரன் உறங்கிக் கொண்டிருந்தார்.

ரத்னகுமார் துர்காவைப் பார்த்து பெருமூச்சு விட்டார்.

''சிவியர் ஹார்ட் அட்டாக்! நல்லவேளை... இப்ப காப்பாத்தியாச்சு. ஆனா, அடுத்தமுறை வந்தா... ஹூம்...'' கையை மேலே உயர்த்தி காண்பித்தார்.

துர்கா பயமாய் பார்த்தாள்.

"என்ன சொல்றீங்க?"

"யெஸ் துர்கா! வைத்தி தன்னோட பயணத்தின் கடைசி படிக்கட்டுல நின்னுட்டிருக்கார்!"

"வேற வழியே இல்லையா?"

"இந்த ஒண்ணரை வருஷமா நாம அவரை சந்தோஷமா வச்சிட்டிருக்கோம். இனியும் அவர் மனம் நோகாம சந்தோஷமா நடந்துப்போம்! வைத்தி ஹாஸ்பிடல்ல இருக்கறதைவிட வீட்லேயே பெட் ரெஸ்ட்ல இருந்தா நல்லதுன்னு நினைக்கிறேன்."

"நைட்ல கூட இருக்க ஒரு நர்ஸுக்கு ஏற்பாடு பண்ணிடலாமா?"

"யாரோ ஒரு நர்ஸ் இருக்கறதைவிட நீ பக்கத்திலே இருந்தா ரொம்ப நல்லது துர்கா!"

"அது எப்படிங்க... நான்..."

"ப்ளீஸ்... துர்கா! ப்ளீஸ்... புரிஞ்சுக்கு. நீ அருகே இருந்தா வைத்திக்கு யானை பலம் மாதிரி! இந்த மாதிரி நேரங்கள்ல அவரை லோன்லியா ஃபீல் பண்ணிவிடக் கூடாது. அதுதான் ஆபத்து!"

துர்கா வெகுநேர யோசிப்பிற்குப் பின் "சரி" என்றாள்.

மூன்று நாட்கள் வைத்தி வீட்டிலேயே இருந்து பார்த்துக் கொண்டாள்.

அமிர்தம் ஊர் திரும்பி விட்டிருந்ததால் சமையல் பிரச்னை இல்லை.

ஆனால், துர்கா இரவில் அந்த வீட்டில் தங்குவது குறித்து தம்பியிடம் கோபமாய் சண்டை போட்டாள்.

ரத்னகுமார் அக்காவை உட்கார வைத்து இதெல்லாம் 'ஏன் எதற்காக?' என்ற காரணத்தை சொன்னபோது அமிர்தம் முகம் ஆச்சர்யத்தில் விரிந்தது.

"இப்ப சொல்லு... நான் முட்டாளா?"



"இல்லே! ஆனா, பாவம் துர்காவை தான் நாலு பேர் நாலு விதமா பேசறாங்க கூட சேர்ந்து நானும் என்னென்னவோ திட்டிட்டேன்!"

"மருந்து கசப்புதான். ஆனா அதனோட பலன் இனிப்புதானே?"

"டாக்டராச்சே? பின்னே எப்படிப் பேசவே?" என்று கேலியாய் கூறிச் சிரித்துவிட்டு எழுந்து போனாள்.

*

வைத்தீஸ்வரன் எழுந்து உட்கார்ந்தார். நான்கு நாள் வெள்ளை தாடி வயதைக் கூட்டிக் காட்டியது.

"படுத்துக்குங்க வைத்தி!"

"இல்லே துர்கா, படுத்துக்கிட்டே இருக்கிறது கஷ்டமா இருக்கு! நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்தறேன் துர்கா."

"ப்ளீஸ் வைத்தி! எனக்கெந்த கஷ்டமும் இல்லை. நீங்க இப்படி ஃபீல் பண்ணி பேசறதாலேதான் இப்படி படுக்கையிலே விழுந்துட்டீங்க! இனி இந்த பேச்சே வேண்டாம்!" துர்கா அழுத்தம் திருத்தமாய் சொன்னாள்.

"இல்லை துர்கா! மறக்கணும்னு நினைச்சாலும் முடியற காரியமா? இங்கேயே தங்கியிருந்து என்னைப் பார்த்துக்க குமார் அனுமதிச்சது பெரிய விஷயம்!"

"வைத்தி... இதைப்பத்தியே பேசிட்டிருப்பேன்னு பிடிவாதம் பிடிச்சா... நான் கிளம்பறேன் இனி, இங்கே வரமாட்டேன்!"

"அப்படியெல்லாம் அவசரப்பட்டு முடிவெடுத்திடாதே துர்கா! அத்துவானக் காட்டுல வழி தெரியாம திணறிக்கிட்டிருந்தப்ப, தேவதை மாதிரி வழிகாட்டிய தோழி நீ! நான் உயிரோடு இருக்கிற வரைக்கும், நீ இந்த வீட்டிற்கு வரணும் துர்கா!"

"சரி... இந்த கஞ்சிய முதல்ல குடிங்க!" பேச்சை மாற்றினாள்.

''நாக்கு செத்துப் போச்சி துர்கா! கொஞ்சமா ரசம் சாதம் கரைச்சுக் குடேன்!''

''டாக்டர் காரமா எதையும் தரக்கூடாதுன்னு சொல்லி இருக்கார்! இப்ப இதை சாப்பிட்டுங்க. நாளைக்கு ரசம் சாதம் தர்றேன்!''

வாங்கிக் குடித்தார்.

''ரத்னகுமாருக்கு அடுத்த வாரம் பர்த்டே வருதில்லே?''

''ம்... ஏன் கேட்கறீங்க?''

''ஒண்ணுமில்லே... சும்மாதான்'' என்று சொன்னாலும் வைத்தி மனதிற்குள் எதையோ கணக்குப் போட்டார்.

## 11

இன்னும் சூரியன் உதிக்கவில்லை.

சமையலறையிலிருந்து பலவித இனிப்புப் பொருட்களின் நறுமணம் வீடெங்கும் பரவியது. அமிர்தம் பரபரவென சமையல் வேலையில் பிஸியாக இருந்தாள்.

துர்கா பூக்கூடையும் கையுமாக உள்ளே நுழைந்தாள்.

''இந்தா துர்கா காபி குடி!'' அமிர்தம் அவளருகே வந்து நீட்டினாள்.

துர்காவின் கண்களின் பரப்பளவு கூடியது.

'என்னாயிற்று இவளுக்கு? கடந்த ஒரு வாரமாகவே வலிய வந்து உபசரிப்பதும், கனிவாய் பேசுவதும்...'

புரியவில்லை.

ஆனால் நிம்மதியாக இருந்தது.



'இவள் என்னை புரிந்து கொண்டது போல், என் மகனும் என்னை வந்து சேர மாட்டானா?'

''குடி துர்கா ஆறிடப் போகுது! சின்ன வயசு. புரிஞ்சுக்க கொஞ்சம் நாளாகும். ஆனா என்னைக்கிருந்தாலும் முகேஷ் உன்னைத் தேடி வரத்தான் போறான். நான் பார்க்கத்தான் போறேன்'' அமிர்தம் அவள் மனதைப் படித்ததுப் போல் கூறவும் அசந்துதான் போனாள்.

''அ...க்...கா!'

''எப்படி கரெக்டா சொன்னேன்னு பார்க்கறியா? நானும் ரெண்டு பொண்ணுங்களை பெத்தவதானே? என்னால உன்னைப் புரிஞ்சுக்க முடியாதா?''

''நானும் அந்த நம்பிக்கையிலேதான் இருக்கேன். உங்க தம்பி எங்கே? குளிச்சிட்டாரா?''

''குளிச்சுக்கிட்டே இருக்கான். அவன் பாத்ரும்ல நுழைஞ்சான்னா ஒரு மணி நேரம் குறைச்சு வெளியே வந்திருக்கானா? நீர் யானையா பிறக்க வேண்டியவன். கோயில்ல நல்ல கூட்டமா? இன்னைக்கு தைப்பூசம் வேற...''

''ஆமாங்க்கா... எக்கச்சக்கமான கூட்டம். உங்க தம்பி பேருக்கு சாமிக்கு பால் அபிஷேகம், சந்தன அபிஷேகம் பண்ணிட்டு வந்தேன். இந்தாங்க பிரசாதம், எடுத்துக்கங்க'' பிரசாதக் கூடையை அவள் முன் நீட்டினாள்.

அமிர்தம் திருநீறை தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

அந்நேரம் ஈர உடம்போடு ஹாலுக்கு வந்தார் ரத்னகுமார்.

''மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே!'' என்றபடி விபூதியும், குங்குமமும் எடுத்து கணவனுக்கு இட்டாள்.

''தாங்க்ஸ்...'' என்று அவள் கன்னத்தைச் செல்லமாய் நிமிண்டினார்.

துர்கா வெட்டப்பட்டதை விடவும். அமிர்தம்தான் அதிகமாய் வெட்கப் பட்டு உள்ளே போய்விட்டாள்.

''சாமிகிட்டே என்ன வேண்டிக்கிட்டே?''

''நான் எப்பவும் சுமங்கலியாகவே இருக்கணும்னு வேண்டிக்கிட் டேன்.''

''என் ஆயுளை எக்ஸ்டென்ட் பண்ணுனு கேக்கலையா?''

''என்னங்க நீங்க இப்படியெல்லாம் பேசிக்கிட்டு இந்த சுவர் நல்லா இருந்தாதானே இந்த சித்திரமும் நல்லாயிருக்கும்.''

''சும்மா விளையாடினேன். மதியம் விருந்துக்கு வைத்தி வர்றார் இல்லே?''

''இல்லே... நேத்துக்கூட லேசா நெஞ்சு வலிக்குதுன்னு சொல்லிக் கிட்டிருந்தார். இந்த நிலையிலே பெட்ரெஸ்ட் அவசியம்னு நான்தான் வேண்டாம்னுட்டேன்.''

''அப்படியா?'' என்று முகம் சுருக்கி யோசித்தார்.

''என்னங்க?''.

''அ... ஒண்ணுமில்லே! அட்லீஸ்ட் போன்லேயாவது அவரோட் ப்ளெஸ்ஸிங்ஸ் வாங்கிடறேன்'' என்றபடி போன் பண்ணினார்.

''ஹலோ'' என்று எதிர்முனை பேசியது.

''ஹலோ வைத்தி, குட்மார்னிங்!''

''ஹலோ... மைடியர் ப்ரண்ட்! என் அன்பான மனப்பூர்வமான பிறந்தநாள் வாழ்த்துக்கள்!''

''தாங்க்யூ வைத்தி! ஆமா. துர்கா என்னமோ சொல்றா, விருந்துக்கு வரலியா?''

''துர்காவோட ஸ்ட்ரிக்ட் ஆர்டர். எப்படி மீற முடியும்?''



''நேர்லே வந்து வாழ்த்துவீங்கன்னு எதிர்பார்த்தேன். எனிஹவ்... போன்லேயாவது உங்க ஆசீர்வாதம் கிடைச்சதே. அதுவே போதும் வைத்தி.''

''ம்ஹூம்... வெறும் வாழ்த்தோட விட்ருவேன்னுப் பார்த்தீங்களா? உங்க நட்பு எனக்கு விலை மதிப்பில்லாதது குமார்! நான் உங்களுக் கொரு பரிசை என்னோட ஆள் மூலமா கொடுத்தனுப்பியிருக்கேன். அதை மறுக்காம கண்டிப்பா வாங்கிக்கணும். இது என்மேல் ஆணை!''

''என்ன வைத்தி என்னென்னமோ பேசறீங்க? எனக்கு ஒண்ணுமே புரியலே!''

எனும்போதே உள்ளுக்குள்ளிருந்து உற்சாக நீரூற்று பீய்ச்சியடித்தது. அவர் எதிர்பார்த்த ஏதோ ஒன்று நடக்கப் போவதறிந்து மனம் ஆனந்தக் கும்மி பாடியது.

''நான் அனுப்பிய ஆள் வந்ததும் புரியும்!'' என்று சிரித்தபடி போனை வைத்து விட்டார் வைத்தி.

சில நிமிடங்கள்கூட கரைந்திருக்காது. வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

துர்கா வந்தவரை ஆச்சர்யமாகப் பார்த்தாள். வைத்தியின் வக்கீல் குபேந்திரன்.

''ஹலோ... குட்மார்னிங் மேடம்!''

''குட்மார்னிங்! ஆச்சர்யமாயிருக்கே... வீடு தேடி வந்திருக்கீங்க?''

''வைத்தி சார்தான். அனுப்பி வைச்சார். உங்க ஹஸ்பண்ட் இல் லையா மேடம்?''

சத்தம் கேட்டு தன்னறையிலிருந்து வெளிப்பட்டார் ரத்னகுமார்.

''யெஸ்... நான்தான்! இவர் யாரு துர்கா?''

''வைத்தி அனுப்பியிருக்காராம்!'' என்றாள் புரியாமல்.

''வாங்க... உக்காருங்க.''

குபேந்திரன் அவர் கையைப் பற்றி குலுக்கிப் பிறந்த நாள் வாழ்த்து சொன்னார்.

''இதை மிஸ்டர் வைத்தீஸ்வரன் உங்களிடம் தன்னோட பரிசாக கொடுக்கச் சொன்னார்!'' என்று ஒரு ஃபைலை நீட்டினார்.

''என்னது இது?''

''வைத்தி சார் தன்னோட ஃபேக்டரி, ஆபீஸ் பங்களாக்கள் உள்ளிட்ட அத்தனை சொத்துக்களையும் உங்கள் பெயருக்கு மாற்றிய டாகுமெண்ட்ஸ் அத்தனையும் இதில் இருக்கு!'' என்றார் குபேந்தினர்.

தாங்க முடியாத சந்தோஷத்தில் ரத்னகுமாருக்கு உலகம் ஒரு முறை தலைகீழாகச் சுழன்றது. இன்ப அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத இதயத்திலும் கூட சின்னதாய் ஒரு வலி உண்டானது.

''அப்பறம்... தான் கிளம்பட்டுமா சார்? வைத்தீஸ்வரன் சார்கிட்டே ஏதாவது சொல்லணுமா?''

''நத்திங்... தேங்க்ஸ்ன்னு சொல்லுங்க!'' என்றார் கேஷுவலாக!

குபேந்திரன் புறப்பட்டு விட்டார்.

''என்னங்க? எனக்கு ஒண்ணுமே புரியலை! அவர் பாட்டுக்கு வந்து கொடுத்துட்டுப் போறார். நீங்களும் வாங்கிக்கிட்டீங்க?''

''என்ன பண்ணனுங்கறே?''

''முதல்லே... அந்த லாயரைக் கூப்பிட்டு இதையெல்லாம் திருப்பிக் கொடுங்க!''

ரத்னகுமார் அர்த்தமாய் ஒரு சிரிப்பை சிரித்தார்.

''என்னது? திருப்பிக் கொடுக்கறதா? நானென்ன அந்தளவு முட்டாளா?''



''என்ன பேசறீங்க நீங்க? தன்னோட சொத்து அத்தனையும் தூக்கிக் கொடுத்தார்... நீங்களும் வாங்கிக்கறதா?''

''பின்னே?''

''அதுக்கு உங்களுக்கென்ன உரிமையிருக்கு? வைத்திக்கு நீங்க உறவா?'' கத்தினாள்.

''ஆச்சர்யமாயிருக்கு துர்கா உன்னைப் பார்த்தா! தன்னோட புருஷன் ஒரே விடியல்ல பல கோடிகளுக்கு அதிபதியா ஆகிட்டதுக்கு வருத்தப் படற ஒரே மனைவி நீயாதான் இருப்பே!

வைத்திக்கு நான் உறவுக்காரன் இல்லேதான். ஆனா, ஒரு வகையில உறவுக்காரன் மாதிரிதான். வைத்தி உன்னையே நினைச்சி கடைசி வரை பிரம்மச்சாரியாவே வாழ்ந்தவர். அவருக்கு உன்னைவிட பெரிய உறவுக் காரர் வேற யாராய் இருக்க முடியும் துர்கா? உன்னோட புருஷன் நான்! நானும் உறவுக்காரன்தானே?''

துர்கா நம்ப முடியாத அதிர்ச்சியோடு சிலையாய் நின்றிருந்தாள்.

''ஆரம்பத்தில் வைத்தி மேல எனக்கிருந்தது நிஜமான நட்புதான். அவருக்காக அழுதிருக்கேன். வருத்தப்பட்டிருக்கிறேன். அவரோட உயிர் நூலிழையிலே ஒட்டிக்கிட்டிருந்தது. அப்பக்கூட அவர் சொத்து மேல தான் ஆசைப்படலே! ஆனா, அவர் மனசில நீங்காம நிலை பெற்றிருந்த பெண் நீதான்னு தெரிஞ்ச பிறகுதான் வேற மாதிரி கணக்குப் போட்டேன். உனக்கேத் தெரியும் துர்கா! என்னோட கனவு, லட்சியம், ஆசை.... அத்தனையும் என்னன்னு உனக்குத் தெரியும். பெரிசா ஹாஸ் பிடல் கட்டணும். சிட்டியிலே பெரிய டாக்டர்னு பேர் வாங்கணும். பெரிய மாளிகையிலே வசிக்கணும். ஏழெட்டு கார்களை போர்டி கோவில் நிறுத்தி வைக்கணும். முகேஷிற்கு தனியா ஒரு கம்பெனி வச்சு தரணும்! ஒரு கவர்ன்மென்ட் ஹாஸ்பிடல்ல சம்பளம் வாங்கிக் கிட்டு வேலை செய்யற ஒரு சாதாரண சர்ஜனால முடியற காரிய

மாயிது? லாட்டரியிலே பரிசு விழுந்தாதான் ஆச்சு! ஆனா, இது அத்தனையும் ஒரே ஒரு காரியம் மூலமா சாத்தியம்னு தெரிஞ்சப்ப எப்படி துர்கா சும்மாயிருக்க முடியும்?

மனசை கல்லாக்கிக்கிட்டு உன்னை வைத்தி வீட்டுக்கு அனுப்பி வைச்சேன்! எந்த புருஷன் செய்வான் தர்கா? நான் செஞ்சேன்! என் ஒரே மகனோட விரோதத்தை சம்பாதிச்சேன். நாலு பேர் அசிங்கமா பேசறதை அசட்டை பண்றதுக்கும் வில்பவர் வேணும் துர்கா! எனக்கிருந்துச்சு. எப்படியும்... வைத்தியோட சொத்து அத்தனையும் அரசாங்கத்துக்குப் போகப் போகுது! நானும் கவர்ன்மென்ட் டாக்டர் தானே துர்கா? என்னோட பிரஸ்டீஜை விட்டுக் கொடுத்துதான் இந்த சொத்தை வாங்கினேன். இது தப்பில்லே துர்கா! நியாயமா நமக்குதான் சேரணும். வைத்தி என்னால்தான் இப்ப உயிரோடு நடமாடிக்கிட்டிருக்கார்! அதோட விலைதான் இந்த சொத்து! இதுக்காக எத்தனை நாள் காத்திருந்தேன்? இதைப்போய் திருப்பிக் கொடுத்துடுன்னு எவ்வளவு ஈஸியா சொல்றே?'' ரத்னகுமார் சொல்லி முடித்துவிட்டு அந்த ஃபைலை மார்போடு இறுக்கி ஆசையாய் முத்தமிட்டார்.

"நீங்க... நீங்க என்ன நீங்க? நீயெல்லாம் ஒரு ஆம்பிளையா? த்தூ!'' துர்கா கண்களை அகல விரித்துக் காரித்துப்பினாள்.

ரத்னகுமார் இதை எதிர்பார்க்கவில்லை.

''உன்னை ரொம்ப பெரிய மனுஷன்னு நினைச்சேன். ச்சீ! இவ்வளவுதானா நீ? பணத்துக்காக இவ்வளவு கீழ்த்தரமா நடப்பேயின்னு நான் நினைக்கக் கூடப் பார்க்கலே!''

''ஏய் துர்கா! அவன் உன் புருஷன் அதை மறந்திட்டுப் பேசாதே! அவன் செஞ்சதுல என்ன தப்பு?'' அமிர்தம் பரிந்து கொண்டு வந்தாள்.

''நீ ஒரு நல்ல பொம்பளையா இருந்தா.. இதுல என்ன தப்புன்னு கேட்டிருக்க மாட்டே! இந்தப் பிரச்னையிலே தலையிட உனக்கு எந்த உரிமையும் இல்லே. டாக்டர் தொழில்ங்கறது ரொம்பப் புனிதமானது.



அதை நீ கெடுத்துட்டே! நீ மனுஷனா இருக்கவே தகுதியில்லே! வைத்தி உன்மேல எவ்வளவு அன்பு வைச்சிருக்கார், தெரியுமா? அதுக்கு உனக்கென்ன அருகதையிருக்கு? நீ காட்டின அன்பை, நட்பை நிஜமென நம்பி தன்னோட சொத்தையெல்லாம் உனக்குத் தாரை வார்த்திருக்காரே... அவரை ஏமாத்த உனக்கெப்படி மனசு வந்தது?

நீ என்னை வைத்தி வீட்டுக்கு அனுப்பினப்ப நான் உன்னைப் பத்தி எவ்ளோ பெருமையா நினைச்சேன் தெரியுமா? ஏழேழு, ஜென்மமும் எனக்கு இவரே புருஷனா வரணும்னு கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டேன். ஆனா, நான் எவ்வளவு பாவம் பண்ணியிருக்கேன்னு இப்ப புரியுது. கடவுளே... இனி எனக்கு மனுஷப் பிறவியே வேணாம். அப்படியே பிறந்தாலும், தயவு செய்து இந்த மாதிரி மோசமான ஆளை எனக்கு புருஷனா தலையிலே கட்டிடாதேன்னு வேண்டிக்கப் போறேன். பணத்துக்காக நீ என்ன வேணாலும் பண்ணுவேன்னு புரிஞ்சு போச்சு. இதுவே வைத்தி இடத்துல வேற யாராச்சும் இருந்திருந்தா... என்னை அவன் கூட படுக்கக்கூட அனுப்பி இருப்பே!'' கண்கள் ரௌத்ரமாய் சிவப்பை உற்பத்தி செய்தது. அவள் நெஞ்சுக் கூடு வேகவேகமாய் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

''இப்ப மட்டும் என்ன? நீ வைத்திக்கூட சந்தோஷமா இருந்ததில்லைன்னு சொல்லு பார்க்கலாம்? தேனை எடுத்தவன் புறங்கையை நக்காம விடுவானா? இத்தனை வருஷத்துக்குப் பிறகும் உங்க காதலுக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டதுன்னா... அது என்னால...'' ரத்னகுமார் தான் என்ன பேசுகிறோம் என்று அவருக்கே புரிந்ததோ, இல்லையோ. ஆனால் அந்த வார்த்தை, அதை உச்சரித்த விதம், அதில் ஒலித்த எகத்தாளம்... அத்தனையும் துர்காவை ஒரு புரட்டு புரட்டிப் போட்டது.

அமிர்தம் கூட ரத்னகுமார் இப்படி பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. ஒருவேளை தம்பி சொல்வதும் நிஜமாய் இருக்குமோ என்றுதான் எண்ணினாள்.

''எ... என்னையா... என்னையா அப்படிச் சொல்றே?''

''உன்னைதான்! நான் மட்டுமா சொல்றேன்... ஊரே சொல்லு! இதோ பார்! இந்த தர்க்கத்தை நான் விரும்பலே. எல்லாத்தையும் மறப்போம்! இனி சந்தோஷமா வாழ்வோம். ஓகே!'' அதோடு அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ரத்னகுமார் ஃபைலோடு தன்னறையில் புகுந்து கொண்டார்.

அமிர்தமும் இடத்தை காலி பண்ண... துர்கா தனித் தீவாய் நின்றிருந்தாள். அவளால் எதையும் யோசிக்கக் கூட முடியாமல்... இதயத்தின் ஸ்மரனை அற்று... திக்பிரமையோடு ஸ்தம்பித்திருந் தாள்.

*

ஒவ்வொரு டாகுமெண்டையும் பிரித்துப் படிக்க, படிக்க பறப்பது போலிருந்தது. கிட்டத்தட்ட அம்பது கோடி ரூபாய்க்கு மேல்! 'அத்தனையும் எனக்கா? வாரே... வா!' சிறு குழந்தை போல் கையை மேலே தூக்கி ஆர்ப்பரித்த ரத்னகுமாருக்கு இதயத்தின் மையப் பகுதியில் சுருக்கென தைத்தது. அந்த வலியின் பரப்பு இருக்க இருக்க பெரிதாகிக் கொண்டே போக... குப்பென உடம்பெங்கும் வியர்த்தது. வாய்திறந்து கத்தக்கூட முடியாமல் துடித்தார். சில நிமிடங்கள்தான். துடிப்பெல்லாம் அடங்கி... கண்கள் விட்டத்தை வெறித்து உயிரை விட்டார். மாஸிவ் அட்டாக்!

*

செய்தி வைத்திக்குப் போனது! துடித்துப் போனார்.

''ஐயோ... குமாரா... என் குமாரா... குமாரர் என்னை விட்டுப் போய்விட்டாயா துர்கா... துர்கா... உன் முகத்தை, பொட்டில்லாத உன் முகத்தை, இனி எப்படிப் பார்க்கப் போகிறேன்? ஐயோ... அந்த தைரியம் எனக்கில்லை துர்கா... இல்லவே இல்லை!'' கதறி அழுதார். எந்த சின்ன



அதிர்ச்சியையும் தாங்கிக் கொள்ள திராணியற்ற அவரின் பலவீனமான இதயம் இவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளுமா என்ன?

காதலைவிட, நட்பை உயிரென மதித்த அந்த தங்கக் கிளி... நண்பனின் இறப்பு தாங்காமல் உயிரை விட்டது.

*

காரியமெல்லாம் முடிந்துவிட்டது. இன்னும் ஒன்றுதான் பாக்கி! துர்காவிற்கு வெள்ளைப்புடவை உடுத்த வேண்டும்.

முகேஷ் தன் மனைவியோடு வந்திருந்தான். சொத்து விபரம் அவனுக்கும் அத்தை மூலம் தெரிந்திருந்ததால், வீட்டிலேயே தங்கி விட்டான். ஆனாலும் அம்மாவிடம் பேசவில்லை. ஏனோ அவளைப் பார்த்தாலே பிடிக்கவில்லை.

துர்கா யாரிடமும் பேசவில்லை. வைத்தியின் மரண செய்தி வேறு அவளை பலமாய் தாக்கியிருந்தது. அவளிடம் அச்சத்தை உண்டாக்கக்கூடிய அமைதி முகத்தில் தேங்கியிருந்தது.

சடங்கு ஆரம்பமானது. அவள் நெற்றிப் பொட்டில் கை வைக்க வந்த பெண்மணியைப் பிடித்துத் தள்ளினாள்.

'அமிர்தம் திகைத்துப் போனாள்.

''துர்கா!''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குத் தெரியும். சாஸ்திரம், சம்பிரதாயத்தை உங்க தம்பி மதிச்சிருந்தா... இன்னைக்கு உயிரோட தான் இருந்திருப்பார். அவரோட பேராசை, அவரையே முடிச்சிடுச்சு. உங்க தம்பிக்காக அவர் கட்டின தாலிக்காக சேற்றை பூசிக்கிட்டு அவர் ஆசையை நிறைவேற்றினேன். ஆனா என் தோழனுக்காக, வைத்திக் காக, அவர் ஆசையை நான் நிறைவேற்ற வேணாமா? நான் என்னைக்குமே சுமங்கலிதான்! வைத்தியோட ஆத்மா சாந்தியடைய, நான் எப்பவும் தீர்க்க சுமங்கலியாதான் இருப்பேன். இந்த வீடு, இந்த மனிதர்கள், ஏன் நான் சுமந்து பெத்த என் மகன் கூட இனி எனக்கு

வேண்டாம். உன் தம்பிக்காக உயிரை விட்ட வைத்தியோட வீடுதான் இனி என் வீடு! நாலுபேர் என்ன, இந்த உலகமே என்னைத் தப்பா பேசினாலும் நான் கவலைப்படப் போவதில்லை. என்னைப் பத்தி எனக்குத் தெரியும்! அதுபோதும் எனக்கு!''

சொல்லி முடித்த துர்கா தலைநிறைய பூவோடும், பொட்டோடும் வைத்தி வீட்டிற்கு புறப்பட்டாள்.

அங்கிருந்த மனிதர்கள் அத்தனைபேர் முகத்திலும் ஈயாடவில்லை!

துர்கா இனி எதைப்பற்றியும் கவலைப்படப் போவதில்லை. அவள் நட்பிற்கு ஒரு புது மரியாதையை உருவாக்கி விட்டாள்!

– முற்றும் –


# நந்தினி

மாத நாவல்

வெளியிடுபவர் – ஆசிரியர்:

**எம்.எஸ்.சித்ரா**

**அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்**

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், நந்தனம்,
சென்னை – 35. செல்: 98405 14529

கதையில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.
கதையை திருத்தவும், சுருக்கவும், ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Nandini Novel Monthly**

Owener, Publisher & Editor M.S.Murugan,
Published at:
New no: 56/2, Srirampet Street, C.I.T. Nagar,
Nandanam, Chennai - 600 035.